நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**இத்தனையும் வேண்டும் எமக்கு**

கள்ளவோட் ஆட்டகடத்தல் கைநிறையக் காசு தந்து
வெள்ளையினைக் கறுப்பென்று விளம்பவைத்தல் -உள்ளவித்தை
அத்தனையும் வல்ல அவர்களுக்குப் பாய் விரித்தோம்
இத்தனையும் வேண்டும் எமக்கு!

ஈழமோகம்

இதழ் 43 மார்ச் 24 - ஏப்.06, 1994 விலை 7/=

## மட்டு. மாநகர சபை

# ரெலோ, புளொட் உறுப்பினர்களை கடத்த ஐ.தே.கட்சி முயற்சி ?

## தமது உறுப்பினர்களையே காவலில் வைக்கும் பரிதாபம்!

(மட்டக்களப்பிலிருந்து சத்தியேந்திரா)

மட்டு. மாநகரசபையின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக ரெலோ, புளொட் இயக்கங்களின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களைக் கடத்திச் சென்று தம்முடன் சேர்த்துக் கொள்ள ஐ.தே.கவினர் முயன்று வருவதாகத் தெரிய வருகிறது. அப்படி ஏதாவது நடந்தாலும் என்ற அச்சக்காரணமாக தமது சொந்த உறுப்பினர்களையே இவ்வியக்கங்கள் தமது முகாம்களில் காவலில் வைத்துள்ளதாகவும் இவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நடைபெற்று முடிந்த மட்டக்களப்பு மாநகரசபைக்கும் ஏனைய பிரதேச சபைகளுக்குமான தேர்தலில் பொலிஸாரின் அடாவடித்தனங்கள் இடம் பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அவர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இவ்வேளையில் அதனைப் பற்றி அக்கறைப்படுபவர்களாகவோ அல்லது கவலைப்படுபவர்களாகவோ மட்டக்களப்பில் உள்ள ஐ.தே.க.வினரும் பொலிஸாரும் காணப்படவில்லை.

இதே வேளை தொடர்ந்து மட்டக்களப்பு மாநகர சபையைக் கைப்பற்றுவதற்காக வெற்றி பெற்ற ஏனைய குழுக்களைச் சேர்ந்த வேட்பாளர்களைக் கடத்தும் முயற்சியில் ஐ.தே.க.வினர் பொலிஸாரின் உதவியுடன் முயன்று வருவதாகத் தெரியவருகிறது.

வெற்றி பெற்ற வேட்பாளர்கள் ஐ.தே.கவுடன் சேரும் பட்சத்தில் சேருபவருக்கு கொழும்பில் வீடும், பணமும், வாகனவசதியும், மாநகரசபைக் கூட்டங்களில் கலந்து கொள்ள விமானச்சீட்டும் வழங்கப்படும் என ஐ.தே.க.வினர் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்த வேட்பாளர்கள் தம்முடன் சேர்ந்து கொள்ளாத பட்சத்தில் அவர்களைக் கடத்துவதற்கான முயற்சிகளில் அவர்களைத் தேடி ஐ.தே.கவினர் நாய் போல அலைந்து திரிகின்றனர்.

இதன்காரணமாக மாநகர சபையில் வெற்றி பெற்ற ரெலோ-புளொட் ஆதரவிலான சுயேட்சைக் குழுவினர் தமது வேட்பாளர்களை ஐ.தே.கவிடமிருந்து காப்பாற்றுவதற்காக அவர்களை அழைத்துச் சென்று பாதுகாப்பாக வைத்துள்ளனராம். ரெலோ சார்பான வேட்பாளர்கள் ரெலோ அலுவலகம் ஒன்றில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதாகவும், புளொட் சார்பான வேட்பாளர்கள் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தலைமை வேட்பாளர் செழியன் பேரின்பநாயகம் அவர்களது வீட்டுக்கு ரெலோ இயக்கத்தினர் இரவு பகலாய் பாதுகாப்பளித்து வருகின்றனர்.

## சாமிக்கும் சங்கடமப்பா!

மட்டக்களப்பு மாவட்ட அதிபர் மோனகுருசாமி அவர்கள் அவசர உத்தரவொன்றின் பேரில் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் அவரது இடத்திற்கு பிரதேசச் செயலாளராக இருந்த ஏ.கே.பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி தோல்வியடைந்ததற்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மோனகுருசாமியே காரணம் என்று காரணம் காட்டி அவரை மட்டக்களப்பில் இருந்து இடம் மாற்றுவதற்கு ஐ.தே.கட்சி வட்டாரங்களினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸாராலும், பொலிஸாரின் உதவியுடனும் ஏராளமான கள்ளவாக்குகள் போடப்பட்டன என்பது யாவரும் அறிந்ததே. கட்டுக் கட்டாக இக் கள்ளவாக்குகள் போடப்பட்டிருந்தது. வாக்குச் சீட்டு எண்ணப்படுகையில் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து அரச அதிபர் மோனகுருசாமி அவர்கள் இவ் வாக்குகளை எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என தேர்தல் அலுவலர்களுக்கு அறிவித்திருந்தார் என்றும், இதனால் கட்டுக் கட்டாகப் போடப்பட்ட இந்தக் கள்ளவாக்குகள்

→ 2

## ஏனிந்த மௌனம் ஐயா?

எல்லாப் பிரதேச சபைகளும் ஏப்ரல் முதல் தமது அலுவல்களைத் தொடங்க வேண்டும் என ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். இந்நிலையில் வட-கிழக்கு மாகாண ஆளுநர் அண்மையில் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்திருந்ததோடு அங்கு பா.உறுப்பினர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் கொண்ட கூட்டம் ஒன்றைக் கூட்டியுமிருந்தார். கூட்டத்தில் மட்டக்களப்பில் சிவில் நிர்வாகத்தை ஒழுங்காக்குவது பற்றியும் பிரதேச சபைகளை இயங்கச் செய்வது பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாநகர சபைக்கான கட்டிடம் தற்போது இராணுவ முகாமாக இருக்கிறது. மாநகரசபை இயங்க வேண்டுமாயின் அக்கட்டிடம் மாநகர சபையிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டும். பா.உறுப்பினர்களும், மற்றும் அரசியல் கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மாநகரசபைக் கட்டிடம் இராணுவத்திடம் இருந்து மீளப் பெறப்பட்டு மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ஆளுநரிடம் எந்தப் பா.உறுப்பினரோ அரசியல் கட்சிப் பிரமுகர்களோ கூடக் கோரிக்கை விடவில்லை.

தாங்களே இதுவரை எதுவும் செய்யாத போது மாநகர சபைக்குத் தெரிவான இந்த உறுப்பினர்கள் என்ன தான் செய்து கிழிக்கப் போகிறார்கள் என்று இவர்கள் கருதினார்கள் போலும்!

## சந்திரசேகரன் விடுதலைக்கு அமைச்சர் செல்லச்சாமி முயற்சி?

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் அவர்கள் பிணையில் செல்வதற்கு பாணந்துறை மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. கடந்த 18ம் திகதி நடந்த இச்சம்பவம் இம்மக்கள் மத்தியில் குறிப்பாக மலையக மக்கள் மத்தியில் மகிழ்ச்சியையும் அதேவேளை ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால் சந்திரசேகரனின் விடுதலையின் பின்னணியில் அரசாங்கத்தினதும் அதன் எடுபிடிகளதும் பாரிய முயற்சிகள் நடந்திருப்பதாக சரிநிகருக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரசேகரன் மற்றும், செயலாளர் காதர், உபதலைவர் தர்மலிங்கம் ஆகியோர் 1991 யூலை மாதமளவில் ஜே.ஓ.சி குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு காரணமான வரதனுக்கு புகலிடமளித்த குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டார்கள் என்பது தெரிந்ததே. அன்றிலிருந்து இன்றுவரை அவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்கும் முயற்சியில் மிகுந்த பிரயத்தனத்துடன் ஈடுபட்டுவந்த அரசு அவர்களை உள்ளே வைத்திருப்பதற்காகவே வழக்கினை இழுத்தடித்து வந்தது. மலையகத்தின் இரண்டாவது சக்தி தற்போதைய முற்போக்கு சக்தி என்றெல்லாம் பேசப்பட்டதும் இ.தொ.கா.வுக்கு ஒரு சவாலாக வளர்ந்து வந்ததுமான மலையக மக்கள் முன்னணியை வீழ்த்துவதற்காகவே மேற்படி வழக்கு. (அமைச்சர் தொண்டமானின் வற்புறுத்தலின் பேரில், இழுத்தடிக்கப்படுகிறது எனப் பரவலாக பேசப்பட்டது.

ஆயினும் ஆச்சரியப்படத்தக்கவிதத்தில் திடீரென விடுவிக்கப்பட்ட சந்திரசேகரனது இந்த விடுதலை சில கேள்விகளை எழுப்பியுள்ளது. ஆரம்பத்தில் கண்டி நீதிமன்றத்தில் நடந்த வழக்கை கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்கான காரணிகளுள் பிரதானமானதாக கூறப்பட்டது கண்டியில் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதே. அதே போல் 1993 மே மாதம் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரசேகரனும் சத்தியப்பிரமாணம் செய்ய நீதிமன்றத்தில் அனுமதி வழங்கப்படாததற்கும் கூறப்பட்ட காரணம் அவருக்கு பாதுகாப்பு இல்லை என்பதே. அப்படியிருக்கும் போது இன்று அவர் விடுதலை செய்யப்பட்டதற்கான காரணம் என்ன?

→ 2

## தமிழ்ப் பணம்!

(வவுனியாவிலிருந்து தம்பு திருநாவுக்கரசு)

வடபகுதியின் உள்ளூர் நிர்வாகம் பொலிஸ் கடமைகள் வரிவசூலிப்பு என்று ஒரு அரசாங்கத்திற்குரிய சகல செயற்பாடுகளையும் நடாத்திவரும் புலிகள் இப்போது பணப்புழக்கத்தையும் தமது பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதற்காக தமிழ் ஈழம் காசு அச்சிடப்பட்டுள்ளதுடன் அதற்கென விசேட வங்கிகளை நிறுவும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் பணத்தில் நூறு ரூபா புலிகளின் பணத்தில் 80 ரூபா பெறுமதியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த பணப்புழக்கத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தி நிர்வகிக்கும் வகையில் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் பிரதான வங்கிக் கிளைகள் செயற்படவுள்ளன.

புலிகளின தமிழ்ழப பணம சித்திரைப் புதுவருடததிலிருநது பொதுமககளின புழக்கத்திற்கு வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

நன்றி - நூலகத்திட்டம்






## பூசனிக்காயை அல்ல

## பூசனிக்காய் தோட்டத்தையே...

சர்வதேச மன்னிப்புச் சபையினரின் அண்மைக்கால வெளியீடொன்றில் வெளியிடப்பட்டிருக்கும் செய்திகள் இலங்கை அரசாங்கத்தை தர்மசங்கடத்துக்குள்ளாக்கக் கூடியவை. அரசாங்கத்தின் புலனாய்வுத்துறை உயர் மட்டத்தினருடன் தொடர்புள்ள இரகசிய வதை முகாம்கள் பற்றிய செய்திகளையும், பொலிஸின் அத்துமீறிய நடவடிக்கைகள், அதிகார துஷ்பிரயோகங்கள் பற்றிய தகவல்களையும் அது வெளியிட்டுள்ளது.

இதிலே வேடிக்கை என்னவென்றால், இத்தகைய இரகசிய வதைமுகாம்களில் ஒன்று, கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்க தகவல் தொடர்புத்துறை அலுவலகம் மற்றும் இந்திய ஸ்தானிகராலயம் என்பவற்றின் பின்னால் உள்ள கட்டிடம் ஒன்றில் இயங்கி வந்திருக்கிறது என்பதாகும்.

பொருத்தமான இடத்தை தேர்ந்தெடுப்பதில் இலங்கை அரசுக்கு நிகர் அதுவேதான்!

ஆனாலும், இலங்கை அரசின் உத்தியோகபூர்வ செய்திப் பிரிவு இவற்றாலெல்லாம் பாதிக்கப்பட்டதாக தெரியவில்லை.

கடந்த வாரம் அது இலங்கை வானொலியில் ஒலிபரப்பிய செய்தியின் போது கீழ்வருமாறு அறிவித்தது:

'நாட்டில் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக இலங்கை அரசும் அதன் ஜனாதிபதியும் எடுத்துவரும் நடவடிக்கைகள் திருப்தி தருவனவாக உள்ளன என்று மனித உரிமைகள் அமைப்பின் சமீபகால அறிக்கை கூறுகின்றது''

முழுப்பூசினிக்காயை சோற்றுக்குள் புதைப்பது பற்றி சொல்வார்கள். பூசினிக்காயை என்ன பூசினிக்காய் தோட்டத்தையே சோற்றுக்குள் புதைத்துவிடும் சக்தி இருக்கிறது இலங்கை அரசுக்கு!

மன்னிப்புச் சபைக்கு இதெல்லாம் புரியப் போகிறதா என்ன?

## நாய்க்குட்டியும்

## கலாநிதி?

கலாநிதிப்பட்டம் வழங்குவது குறித்து முன்பும் ஒருதடவை இப்பத்தியில் எழுதியிருந்தேன். அப்போது, பட்டம் வழங்கப்பட்டவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா.

இப்போது நான் சொல்லப்போவது இலங்கையில் அண்மையில் வழங்கப்பட்ட கலாநிதிப்பட்டம் பற்றி.

கலாநிதிப்பட்டங்களை யார் வேண்டுமானாலும் கொடுக்கலாம், யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ற ஒரு புதிய மரபையே உருவாக்கி வைத்திருக்கிறது கொழும்பிலுள்ள ஒரு 'கராத்தே' சங்கம்.

இந்தச் சங்கத்தினால் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட புதிய 'கலாநிதி' திருமதி வேலம்மாள்-செல்லச்சாமி ஆவார்.

கராத்தே சங்கத்திற்கும் கலாநிதிப்பட்டத்திற்கும் என்னதான் சம்பந்தம் என்று யாராவது கேட்கக்கூடும்.

கலாநிதிப் பட்டத்திற்கும் சங்கத்துக்கும் தொடர்பு இருக்கிறதோ இல்லையோ, சங்கத்துக்கும் அரசியல்- வாதிகளுக்கும் தொடர்பு இருக்கிறது.

அரசியல- வாதிகளுக்கும் பட்டத்துக்கும் உள்ள 'பிராப்தி' வெளிப்படை

ஆக, வேலம்மாள் கலாநிதியாகிவிட்டார்.
சில காலத்துக்கு முன்னர் தான் செல்லச்சாமியும் கலாநிதி ஆகியிருந்தார்.
அரசியல்வாதிகட்கும், அவர்களின் மனைவிமார்கட்கும் மற்றும் சங்கத்தின் உயர்வுக்கு 'உதவக்' கூடியவர்கட்கும் கலாநிதிப்பட்டங்களை வழங்கியே தீருவது என்பது அந்தச் சங்கத்தின் இலட்சியம் போலும்.

அது கொடுத்துத் தள்ளிக் கொண்டிருக்கிறது.
போகிற போக்கைப் பார்த்தால் வேலம்மாள் வீட்டு நாய்க்குட்டிக்கும் கலாநிதிப்பட்டம் வழங்கித் தள்ளி விடுவார்கள் போலிருக்கிறது நமது 'கராத்தே' சங்கத்தினர்.

## முதலமைச்சராக

## ஒரு ஈழத் தமிழர்?

அண்மையில் தமிழ்நாட்டில் ஒரு சிலநாட்கள் சஞ்சரிக்க சந்தர்ப்பம் கிடைத்தது.
தி.மு.க.விற்குள் ஏற்பட்ட பிளவும், முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் கவர்னர் சென்னாரெட்டிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அதிகாரப் போட்டியும் தமிழ்நாட்டு அரசியலில் சூடாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

வை.கோ.தான் அடுத்த முதல்வர் என்ற நம்பிக்கையுடன் தமிழ்நாட்டு அரசியலுடன் ஐக்கியமாகிப் போன நம்நாட்டு நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன்.

தமிழ்நாட்டுக்கு இலங்கையைச் சேர்ந்த ஒரு 'சுத்தத் தமிழன்' ஒருவன் முதலமைச்சராக ஒரு நாளைக்காவது வந்துதான் ஆக வேண்டும், என்று கூறினார் அவர்.

தமிழ்நாட்டின் அரசியல்வாதியாக வருவதற்கான அடிப்படைத் தகுதிகளை ஒருவர் கற்றுக் கொள்ள வேண்டுமானால், 'மெட்ராசின்' தெருவில் நாயாக அலைந்து திரிந்து அவர் புடம்போடப்பட வேண்டும்.

ஒரு எம்.ஜி.ஆருக்கும் ஒரு ஜெயலலிதாவுக்கும் முதலமைச்சராக வர முடியும் என்றால் ஏன் ஒரு இலங்கைத் தமிழனுக்கு அதுசாத்தியம் இல்லை என்றார் அவர்.

அதுசரி, அப்படித் தமிழ் நாட்டுக்கு முதலமைச்சராக வருவதால் இலங்கைத் தமிழன் என்னத்தைத்தான் சாதிக்கப் போகிறான்' என்று கேட்டேன்.

''ஏன் முடியாது? முதலாவதாக ஒரு சுத்தத் தமிழன் தமிழினத்துக்கே தலைவனான பெருமை கிடைக்கும். மற்றது வடக்கத்திய பார்ப்பணிய ஆதிக்கத்துக்கு நல்லதொரு பதிலடி கொடுத்ததாகவும் இருக்கும்.... எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழினத்திற்கிடையில் ஒற்றுமையை நிலைநாட்ட முடியும்' என்று ஒரு போடு போட்டார் அவர்.

'ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு இலங்கைத் தமிழன் என்று சொல்லவே பயப்படும் சூழல் இங்கு நிலவுவதாகச் சொல்கிறார்களே' என்றேன் நான்.

'எல்லாம் இந்த 'அம்மா' வின் புரட்டலால் தான்....அப்படி யொன்றும் வெறுப்பு இங்கே கிடையாது என்றார். அவர் விடாப்பிடியாக.

'எத்தனை விசித்திரமான ஆசைகள் எல்லாம் மனிதருக்குத் தோன்றுகிறது' என்று எண்ணிக் கொண்டேன்.



*சரிநிகர் மாதம் இருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும், இனத்துவ சமத்துவத்துக்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துகளும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகை நாகரீகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.*

*சந்தா:*
*உள்நாடு:175/=*
*வெளிநாடு : 30U.S.$*

*சந்தாவை காசுக்கட்டளை/தபாற் கட்டளை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.*

*எல்லாத் தொடர்புகளுக்கும்*
*ஆசிரியர்*
*'சரிநிகர்'*
*4, ஜெயரட்ன மாவத்தை*
*திம்பிரிகஸ்யாய*
*கொழும்பு -05*
*தொலைபேசி: 584380*

## சந்திரசேகரன்.....

''மாகாண சபையில் எனது' பிரதிநிதித்துவம் இறுதிவரை மறுக்கப்பட்டே இருந்தது என எதிர்காலத்தில் என்னால் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள நான் தொடர்ந்து முயற்சி செய்யவில்லை'' எனக் கூறிய சந்திரசேகரன இன்று தங்கையின் கல்யாணத்திற்கென்று பிணையில் செல்ல நீதிமன்றத்தில் அனுமதி கேட்க உந்திய காரணம் என்ன? (PTA) பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை அதே சட்டத்தைக் காரணம் காட்டி பாதுகாப்புக்கு இடைஞ்சல் எனக் கூறி விடுவிக்காது இருந்த நீதிமன்றம் கல்யாணம் என்றவுடன் மட்டும் விடுதலை செய்தது எப்படி? அவரின் பாதுகாப்புக்கு இடைஞ்சல் வரக்கூடிய இடம் என கூறி பாதுகாப்புள்ள நிலையிலும் சத்தியப் பிரமாணம் செய்யவிடாமல் தடுத்த நீதிமன்றம், இன்று சர்வசாதாரணமாக யாரும் வரக்கூடிய வாய்ப்புள்ள கல்யாண மண்டபத்தில் சந்திரசேகரனுக்கு சகல பாதுகாப்பும் உள்ளது என கருதுகின்றதா? இதே போன்றதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் காதர், தர்மலிங்கம் ஆகியோரும் விடுவிக்கப்படுவார்களா?

இதுபற்றி விசாரித்ததில் தெரியவந்த முக்கியமான தகவல் சந்திரசேகரனின் விடுதலைக்கு முன்னின்று இயங்கியவர் இ.தொ.கா.வுடன் முரண்பட்டுள்ள அதன் செயலாளரும் அமைச்சருமான செல்லச்சாமி அவர்கள் என்பதே.

இன்று இ.தொ.கா.வில் ஏற்பட்டுள்ள செல்லச்சாமி-தொண்டா முரண்பாடுகள் வளர்ந்துள்ள சூழ்நிலையில் தொண்டா எதிர்ப்பை வளர்க்க வேண்டி அரசின் உயர்மட்ட அனுமதியுடனேயே செல்லச்சாமி சந்திரசேகரனது விடுதலைக்கு உழைத்துள்ளார் என்று கருத நிறைய இடமுண்டு.

தொண்டமான் முகத்தில் கரிபூசும் முயற்சிகளில் ஒன்றாகவே ஐ.தே.க அரசாங்கம் மிகவும் திட்டமிட்டு தொண்டா எதிர்ப்புத் தரப்பினரைப் பயன்படுத்தி வருகின்றது. அதற்கு சுதந்திரமாக இயங்க வேண்டிய நீதித்துறையை வழமை போல் ஆளும் அரசாங்க தேவைக்காக பயன்படுத்துகிறது. அவ்வாறாயின் இவ்வளவு காலம் சந்திரசேகரன் மற்றும் ஏனைய தலைவர்களும் விடுவிக்கப்படாததற்கு அரசியல் காரண[illegible] தான் பிரதானமானது எனும் எண்ணமும் வலுப்பெறுகின்றது.

சந்திரசேகரன் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6ம் மாடியில் மூன்று தடவைகள் செல்லச்சாமி - சந்திரசேகரன் ஆகியோருக்கு இடையில் சந்திப்புகள் பேச்சுவார்த்தைகள் நடந்[illegible]ளதாக சீ.டீ.பி (CDB) (crime detective Bureau) வட்டாரங்களிலிருந்து கசியும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதைவிட பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் சந்திரசேகரனது விடுதலைக்காக வேண்டி செல்லச்சாமி நான்கு தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக செய்தியும் வெளிவந்துள்ளது. மேற்படி சந்திப்புகள் சந்திரசேகரனுடன் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற மலையக மக்கள் முன்னணியின் ஏனைய தலைவர்களான காதர், தர்மலிங்கம் ஆகியோருக்கு கூட சந்திப்பு, பேச்சுகள் பற்றிய விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

மார்ச் 19ம்திகதி நடந்து முடிந்த சந்திரசேகரனது தங்கையின் கல்யாணத்திற்கு செல்லச்சாமியும் அவரது ஆதரவாளர்களும் ஏன் மறுபுறம் தொண்டமானின் சகாக்களும் கூட வந்து கலந்து கொண்டனராம்.

சந்திரசேகரனது விடுதலையை எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கத்தான் செய்கின்றனர். ஆனால் அவரது விடுதலையே அவர்கள[illegible] கடந்த கால கொள்கைகளை நாசப்படுத்திவிடக்கூடாது என்றே ப[illegible] விரும்புகின்றனர்.

அரசுடன் தொண்டமான் குலாவிய போது அவருக்காக சந்திரசேகரன் போன்றோரை வெளியில் விடாது தடுப்பில் வைக்கவும், மறுபுறம் தொண்டமான் அரசுடன் முரண்பட்டுக் கொண்ட போது அவரை பழிவாங்குவதற்காக சந்திரசேகரனை விடுதலை செய்வதற்கும் இதே நீதித்துறையையே பயன்படுத்துகிறது என்றால் அதனை ஏன் இலங்கை அரசின் 'சுதந்திரமான நீதிமன்றம்' என அழைக்க வேண்டும், ஐ.தே.க நீதிமன்றம் என அழைக்கலாமே.

இன்றுள்ள கேள்வி யாதெனில் தொண்டா எதிர்ப்பு எனக்கருதி சந்திரசேகரன் அரசுக்கு சோரம் போய்விடுவாரோ என்பதே.

## புடிச்சாலும் புடிச்சோம் புளியங் கொப்பாய்

மட்டக்களப்பில் வெற்றி பெற்ற ஐ.தே.கட்சியினரிடையே கோஷ்டி மோதல் ஆரம்பமாகியுள்ளது. மட்டக்களப்பு ஐ.தே.கட்சி அமைப்பாளர் பத்மநாதனுக்கு இன்னொரு ஐ.தே.க பிரமுகரான ஈஸ்வரனுக்கும் இடையிலேயே இந்த மோதல் ஆரம்பித்துள்ளது. ஐ.தே.கட்சியில் தாம் தாம் செல்வாக்கு மிக்கவர் என்பதை நிரூபிப்பதிலேயே இந்த மோதல் ஆரம்பித்துள்ளதனால், வெற்றி பெற்ற ஐ.தே.க.வின் வேட்பாளர் அணி இரண்டாகப் பிளவுபட்டுள்ளதாம்.

இதே வேளை, ஐ.தே.கவுடன் சேரத் தயாராக இருந்த ஈரோஸ் குழுவினர் யார் பலமானவர் என்று தெரிந்து கொண்டு அவர்களூடாக ஐ.தே.கவுடன் சேருவதற்காகப் பொறுமையுடன் இருப்பதாகத் தெரியவருகிறது.

ஓடுமீனோட உறுமீன் வருமளவும்......


## சாமிக்கும்....

எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றும், இந்த வாக்குகள் சேர்த்துக் கொள்ளப்படாததாலேயே ஐ.தே.கட்சி தோல்வியைத் தழுவ வேண்டி ஏற்பட்டது என்றும் ஐ.தே. கட்சி வட்டாரங்கள் குற்றம் சாட்டியிருந்தன.

அத்தோடு தேர்தலில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான விசாரணையை நடாத்துவதில் மோனகுருசாமி அவர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்ததும் ஐ.தே.கவினர் மட்டத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

இதன் பின்னணியிலேயே மோனகுருசாமி அவர்கள் அவசர உத்தரவொன்றின் மூலம் உடனடியாக மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளாராம்.

கள்ளவாக்கை தடுத்தவருக்கு கல்தா!



சரிநிகர்
4. ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 05
தொலைபேசி: 584380

பிரதம ஆசிரியர் சேரன்


# சிறிலங்கா

# சிங்களவர்க்கே

தென்மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரங்கள் முடிவுக்கு வந்துவிட்டன.

இப்பத்திரிகை தொங்கிக் கொண்டிருக்கும் போது வாக்காளர்கள் தமது புள்ளடியைப் போட்டுக் கொண்டிருப்பார்கள்.

அப்பகுதி வாக்காளர் அல்லாதவர்களும் தமது 'வழமையான' தேர்தல் கடமைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

பிரதம மந்திரியும் சிரேஷ்ட அமைச்சர்களும் ஏன் ஜனாதிபதியும் கூட தீவிர கவனமெடுத்து வேலை செய்துள்ள இந்தத் தேர்தலில் ஐ.தே.க.வை எப்படியாவது வெல்ல வைத்துவிட வேண்டும் என்ற அக்கறையும் துடிப்பும் தெளிவாக வெளிப்பட்டது.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக உழைக்க அமைச்சர்கள் மற்றெல்லாக் கடமைகளையும் ஓரத்தில் போட்டுவிட்டு அவற்றில் வழமை போல ஈடுபட்டனர். மீண்டும் பழைய கட்சிக்கே திரும்பிய காமினியும் றொனி டி மெல்லும் கூட இவற்றில் பங்கேற்றுக் கொண்டனர்.

தேர்தல் வெற்றிக்காக எதையும் செய்யத் தயாராக உள்ள கட்சிதான் ஐ.தே.கட்சி.

1981ம் ஆண்டு மாவட்டசபை தேர்தலில் யாழ்நூல் நிலையத்தை எரித்தது முதல் அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கள்ள வோட்டுக்களை பொலிஸாரைக் கொண்டு போடுவித்தது வரை ஐ.தே.கட்சி அரசாங்கத்திற்கென ஒரு தேர்தல் பாரம்பரியம் உண்டு.

அதில் இதற்கு இணையாக இங்கு இன்னொரு கட்சி கிடையாதென்றே சொல்லலாம்.

இந்தத் தேர்தலிலும் வெல்லுவதற்கு அதன் வழமையான வேலைகளையும் செய்து முடிக்க தலைவர் முதல் தொண்டர் வரை அனைத்துப் பட்டாளங்களுடனும் அணிவகுத்துச் சென்றுதான் கடமைகளை ஆற்றியது அது.

ஆனால், தெற்கு மாகாண சபைத் தேர்தல் கூட்டங்களில் இத்தனை பேர் ஆற்றிய உரைகள் ஒன்றும் தென்மாகாண சபையை திட்டமிட்டுக் கலைத்த விவகாரமோ, உறுப்பினரைக் கடத்திச் சென்றதோ, பிற ஜனநாயக மீறல்களோ அல்லது அப்பிரதேசத்தின் அபிவிருத்தியோ பற்றியவை அல்ல.

மாறாக தமிழ்த் தேசிய இனத்தையும், அதன் உரிமைகளையும் ஒடுக்கி 'பயங்கரவாதிகளை' இல்லாமல் செய்து இலங்கையை எப்படி முழுச் சிங்கள நாடாக மாற்றுவது என்ற பிரச்சினையே அங்கு பிரதானமாக அடிபட்டதாகும்.

ஆண்டொன்றுக்கு 2500 கோடி ரூபா செலவாகின்ற யுத்தத்தைப் பற்றி பேசிய ஜனாதிபதி அதை முடித்து விட்டால் அப்பணத்தை வைத்து நாட்டின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தலாம் என்று கூடச் சொல்லியிருந்தார்.

அதற்கு அவரது வழி என்ன என்பதையும் அவர் அங்கே கூறினார்.

சட்டபூர்வமாக (?) தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசை பயங்கரவாத ரீதியில் எதிர்ப்பவர்களான தமிழர்களை ஒடுக்குவதே இதைத் தீர்ப்பதற்கான ஒரே வழி என்று கூறியதோடு அதைச் செய்ய எமக்கு ஆதரவு தாருங்கள் என்று தெற்கு மக்களிடம் வேண்டுகோளும் விடுத்திருக்கிறார்.

ஆக, இலங்கையின் எந்த மூலையில் எது நடந்தாலும் அது தமிழர்களை யார் சிறப்பாக அடக்குவர் என்ற போட்டியை வைத்தே செய்யப்படுகின்றது என்பதையே இது தெளிவாக்குகின்றது.

அப்படியானால்,

ஜனாதிபதி அவர்களே, உங்களிடம் ஒரு கேள்வி. உண்மையில் உங்களுக்குத் தேவையானது தான் என்ன? இந்த நாட்டில் தமிழர்களே இல்லாமல் இருக்கவேண்டுமென்பது தானே? மிகவும் வெளிப்படையானது என்று கூறிக் கொள்ளும் நீங்கள் ஏன் அதையும் வெளிப்படையாகக் கூறக்கூடாது?

இன்னுமொரு தகவல் உங்களுக்கு?

நீங்கள் சொல்லும் 'சிறிலங்கா சிங்களவர்களுக்கே என்பதைப் புலிகள் கூட எதிர்க்கவில்லை. அவர்கள் எதிர்ப்பதெல்லாம் சிங்களவர்க்கென நீங்கள் குறிப்பிடும் எல்லையை மட்டுமே!

# ஜனாதிபதி தம் முகத்தை எப்போதாவது கண்ணாடியில் பார்த்ததுண்டா?

மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தையொட்டி விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த அறிக்கையை அடுத்து வழமை போலச் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் தமது 'வழக்கமான பல்லவியைப் பாடத் தொடங்கியிருக்கின்றன.

இவைகள் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல, பத்திரிகையாளர் மகாநாட்டில் வைத்து பிரட்மன் வீரக்கோன் அறிவித்த அரசு தரப்புக் கருத்து மிகவும் சுவாரஸ்யமானதாக அமைந்திருந்தது.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அரசாங்கம் வைத்துள்ள மூன்று நிபந்தனைகளை அவர் தெரிவித்திருந்தார்.

ஒன்று, புலிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டுத்தான் பேச வரவேண்டும்.

இரண்டு, ஏனைய தமிழ்க் கட்சிகளும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள உடன்பட வேண்டும்.

மூன்று, பேச்சுவார்த்தைகள் தலைவர்கள் மட்டத்தில் நடைபெற வேண்டும்; அதாவது பிரபாகரன் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே பலதடவைகள் திரும்பத் திரும்ப 'முன்வைத்து'ப் புளித்துப் போன நிபந்தனைகள் தான் இவை.

அப்படியானால் இதில் என்ன சுவாரஸ்யம் இருக்கிறது என்று வாசகர்கள் கேட்கக் கூடும். சுவாரஸ்யம் அவரது நிபந்தனைகளில் இல்லை. காலப் பொருத்தமற்ற முடிவுகளை அரசாங்கம் எடுத்தாலுங்கூட அவற்றை வந்து பத்திரிகையாளர்கள் முன் அறிவிப்பது பிரட்மனின் உத்தியோகம் என்பது யாருக்கும் தெரியாததல்ல.

''வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும் நாரத முனிவர்க் கேற்ப நயம்பட உரைத்த நாவும் வீரமும் களத்தே போட்டு'' நின்ற இராவணனைப் பார்த்து 'இன்று போய் நாளை வா' என்று இராமன் சொன்னதாகத் தான் கதை இருக்கிறதே ஒழிய, இராவணன் இராமனுக்குச் சொன்னதாக இல்லை. யுத்தத்தில் பலவீனமாக இருப்பவனுக்குப் பலமான நிலையில் இருப்பவன் தான் நிபந்தனை விதிப்பான். புலிகள் இன்று பலவீனமான நிலையில் இருக்கின்றார்கள் என்ற நினைப்பு அரசுக்கு. அதனால், முன்பு பலதடவைகள் முன்வைத்த பின் கைவிட்ட, அதே பழைய நிபந்தனைகளைத் திரும்பவும் முன்வைத்திருக்கிறது அரசு.

அடுத்தடுத்துப் பல தடவைகளில் யுத்த முனைகளில் தோல்விகளை எதிர்கொண்ட போதும், வெற்றிவாகை சூடியிருப்பதாகச் சிங்கள மக்கள் மத்தியில் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்ற ஒரு அரசுக்கு இதைத் தவிர வேறு விதமாக ஒரு நிபந்தனையை வைப்பது சாத்தியமில்லைத்தான்.

வடக்கு கிழக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினையே என்றும், சிறுபான்மைத் தேசிய இனங்கள் எல்லாம் பெரும்பான்மைத் தேசிய இனம் என்ற விருட்சத்தில் படர்கின்ற கொடிகளே என்றும், திமிர்த்தனமாக அறிவிக்கும் பேரினவாத வெறி கொண்ட ஒரு ஜனாதிபதியின் அரசு பொய்ப் பிரச்சாரத்திலும், நயவஞ்சக நடவடிக்கைகளின் மூலமாகவும் தன்னை தக்கவைத்துக் கொண்டிருக்கும் ஒரு அரசு இப்படி நிபந்தனைகளை முன்வைப்பதில் எந்த வியப்புமில்லை.

இனப் பிரச்சினையை இந்தநாட்டிலுள்ள ஒரு பிரச்சினையே அல்ல என்று சொல்வது, இந்த நாட்டை முற்று முழுதாகச் சிங்களவர்களின் நாடே என்று கூறு[illegible] நாட்டைத் துண்டு துண்டாக உடைந்து போக, ஒரு போதும் அனுமதிக்[illegible]மாட்டேன் என்று புலம்புவது எல்[illegible] அதே பேரினவாத அரசின் அதே குரல்தான்.

ஆனால் இந்த நிபந்தனைகள்?

ஆயுதங்களைக் கீழே போடுமாறு கேட்கிறது அரசு. இதே அரசாங்கம் 'ஜனநாயக வழியில்' இயங்க வென்று ஆயுதங்களைப் போட்டுவிட்டு வந்த தமிழ் அரசியற் கட்சிகளுக்கு இதுவரை எதைத் தான் செய்துவிட்டது? அக் கட்சிகளினூடாகத் தமிழ் பேசும் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடிந்தவைகள் எவை?

சொல்லலாம்; உள்ளூராட்சிச் சபைகளில் தேர்தல்களை நடாத்தியது, கள்ள வோட்டுகள் மற்றும் பொலிஸாரின் மிரட்டல்களால் பறித்தது போக மீதி வோட்டுக்களைப் பெற்று ஒரு சிலரை சபை உறுப்பினர்களாக்கியது, கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் வந்து அலுவலகங்களை நடாத்த அனுமதித்தது, இராணுவச் சோதனைச் சாவடிகளில் சேவைபுரிய அனுமதித்தது...இப்படிச் சில சாதனைகளை அவர்கள் செய்வதற்கு இந்த அரசு உதவித்தான் இருக்கிறது. ஆனால், புலிகளுடன் சேர்ந்து பேச அவர்களையும் அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் சார்பில் நிபந்தனை விதிக்கும் இந்த அரசு இன்றுவரை அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வைத்தானும் சொன்னது கிடையாது.

குறைந்தபட்சம் வடக்குக் கிழக்கு இணைப்பை ரத்துச் செய்வதற்கான தனது சதித்திட்டங்களை நிறுத்தியது கூடக் கிடையாது.

ஆனால் புலிகளுடன் பேசப், புலிகளும் ஆயுதங்களைப் போட்டு விட்டு வரவேண்டுமாம்.

அவர்களிடம் ஆயுதம் இருப்பதால் தான் இவர்கள் இப்படியாவது கேட்கிறார்கள் என்ற ஆரம்பப்பள்ளி மாணவனுக்கு இருக்கும் ஞானம் கூடப் புலிகளுக்கு இருக்காது என்று கருதுகிறதா இந்த அரசு?

ஆயுதங்களைப் போட்டுவிட்டு எந்த நம்பிக்கையுடன் இலங்கை அரசுடன் பேச வரமுடியும் என்று அது கூறுகிறது?

அரிசி கொடுத்தோம், மா கொடுத்தோம், அபிவிருத்திக்குப் பணம் கொடுத்தோம் என்று ஏதோ தனது சொந்தப் பொக்கட்டிலிருந்து தூக்கிக் கொடுத்தது போல இன்னமும் ஒரு முடிவும் இல்லாத போது புலிகள் எப்படித் தான் நம்புவார்கள்?

புலிகள் கையில் ஆயுதம் இருப்பதால், அவர்கள் மக்கள் மீதும், ஆயுதப் படைகள் மீதும் தாக்குதல் நடாத்துவதால் பயங்கரவாதிகள் என்று கூறும் ஜனாதிபதி தமது முகத்தை எப்போதாவது கண்ணாடியில் பார்த்ததுண்டா?

எந்தப் படைகள் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று போட்டது? எவரது ஆயுதங்கள் எம்பிலிப்பிட்டியவில் சவக்குழிகளை நிரப்பின? எவரது ஆயுதங்கள் தெருவெல்லாம் ரயர் போட்டு ஆயிரமாயிரம் இளைஞர்களை எரித்தன? ஏன்? தென் மாகாண சபைகளைக் கலைப்பதற்காக ஒரு உறுப்பினரைக் கடத்திச் சென்றதும்; கிழக்கு மாகாணத்தில் தேர்தலுக்கு வாக்களிக்க வந்தவர்களை விரட்டியதும், தேர்தலைக் குழப்புவதற்காகப் புலிகளைப் போல வேடமிட்டு வந்து துப்பாக்கியால் சுட்டு, சூடு வாங்கிப் பிறகு லங்காபுவத்தின் மூலம் புலிகள் தாக்குதல் முயற்சி என்று அறிவித்து... இதெல்லாம் எவரது கையிலிருந்த ஆயுதங்களால்?

புலிகளை ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு வருமாறு கோரும் அரசு, தனது சொந்த ஆயுதப்படையைக் கடந்த 10 ஆண்டுகளில் 10 மடங்காகப் பெருக்கியிருக்கும் அரசு அதை எப்போது கலைக்கப் போகிறது என்று கூறத் தயாராக இருக்கிறதா?

ராஜினியைக் கொன்றவர்களைப் பயங்கரவாதிகள் என்று சொல்ல றிச்சார்ட்டைக் கொன்றவர்களுக்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது?



ஆக, அரசாங்கத்திற்கும் அதன் தலைவர் மேன்மை தங்கிய ஜனாதிபதி டி.பி விஜயதுங்கவிற்கும் அவர்களுக்கு ஊதுகுழலாகச் செயற்படுபவர்களுக்கும் இருக்கும் நோக்கம் ஒன்றுதான்.

அது நிச்சயமாகப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதோ அல்லது நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முயல்வதோ அல்ல.

மாறாகப், புலிகளைப் பேச அழைப்பதாகப் பாவ்லா காட்டிக் கொண்டு தொடர்ந்து யுத்தத்தை நடாத்துவதே.

புலிகளை 'ஜனநாயக வழி'க்கு வரும்படி வேறு கோருகின்றார் பிரதமர்.

புலிகளுக்குக் கள்ளவோட்டுப் போடுவதில் பரிச்சயம் இருக்காது என்ற நம்பிக்கை போலும் அவருக்கு.

புலிகள் என்ன கரடிகள் என்ன யார் வேணுமென்றாலும் இந்தப் பசப்பல்களுக்குப் பலியாகிப் போகலாம்.

ஆனால் இனவாதத்திமிருடன்; ஆதிக்க வெறிபிடித்து 'இரத்த வேட்டை ஆடுகின்ற இந்த அரசின் சுயரூபத்தை நாளும் கண்டு அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் சிறுபான்மை மக்கள் ஒருபோதும் நம்பப் போவதில்லை.

அண்ணாமலை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை விரிவுரையாளரும், ஆய்வாளருமான பழனித்துரை அவர்களின் வார்த்தைகளில் சொல்வதானால்:

''இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்க்கும் ஒன்றாகத் தன்னை ஒரு போதும் அடையாளம் காட்டிக் கொள்ளவில்லை. மாறாக அதை உருவாக்குகின்ற ஒன்றாகவே காட்டி வந்துள்ளது''

நன்றி - நூலகத்திட்டம்





# சிவரமணியின் தற்கொலையும் சிவரமணியின் கவிதையும்

மாதவன்

**பு**திய வாழ்வின் சுதந்திர கீதத்தை இசைத்துக் களிக்க தோழியரை அழைத்த சிவரமணி தற்கொலை செய்து கொண்டார். தற்கொலை செய்தது மாத்திரமல்ல;'' **எனது கைக் கெட்டியவரை எனது அடையாளங்கள் யாவற்றையும் அழித்து விட்டேன்''** என்று 'தன்னடையாளங்களை' அழித்துக் கொண்டு விட்டார்.

பல்வித நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க இயலாமல், விரும்பாமல் உலகில் பலர் தற்கொலை செய்து கொண்டுதானிருக்கிறார்கள். அவர்களுள் கவிஞர் சிலரும் அடங்குவர். சிவரமணி இவ்வகையில் ஒருத்தி. அமெரிக்கப் பெண் கவிஞர் சில்வியா பிளாத்தினுடைய தற்கொலையைப் போன்றது.

தற்கொலையை ஏன் செய்கிறார்கள் என ஆய்வது இங்கு நோக்கமல்ல. ஆனால், சிவரமணியின் கவிதைப் போக்கின், கருத்து நிலைப்பட்ட வளர்ச்சி அவரை இத்தகைய தற்கொலையில் கொண்டு சென்று விடுகிறது. அது குறித்த மனவெழுச்சிகளை இங்கு பதிவதே நோக்கம்.

ஈழத்தின் கவிஞர் (**சு. வில்வரத்தினம்**)

***''எதையும் எதிர்கொள்.***
***முகம் திருப்பாதே.***
***மனஞ் சலிக்காதே.***

என்று கவிதை பாடினார்.

ஈழத்தின் கவிதைப் பாரம்பரியம் வாழ்வின் மீதான நம்பிக்கையைப் புலப்படுத்துவன. வாழ்தலின் தேவையை வலியுறுத்துவன. வாழ்வு அதன் மீதான அழுத்தம், நெருக்குதல்கள். அதனை எதிர்கொள்ளல். வாழ்ந்து முடித்தல். இது எம்கவிதைப் பாணி. அதனால் தான் **சண்முகம் சிவலிங்கம்,**

***''மரணத்துள் வாழ்வோம்''***

என்றார்.

**மகாகவி** யின் கவிதைகள் வாழ்வின் மீதான நம்பிக்கையை, மனிதன் உயர்வை தனது பாடுபொருளாகக் கொண்டவை. அவரது அனைத்துக் கவிதைகளும் நம்பிக்கைகளை தொனிப் பொருளாகக் கொண்டவை. புதியதொரு வீடு, கோடை முதலான நாடகங்களிலும் அத்தகைய பண்பைக் கவனிக்கலாம். தன்பற்றிய கவிதையில் கூட.

***''வாழ்வேன் மடியும் வரை''***

என்றுதான் கூறுகிறார்.

**முருகையன், நுஃமான், நீலாவணன், சிவசேகரம், ஜெயபாலன், சேரன்** போன்றோரின் கவிதைகள் கூட அவநம்பிக்கை தொனிப்பனவாக இல்லை.

தனது சிறுகதைகள் ஊடாக பெரும்பாலும் விரக்தியைத் தொற்ற வைக்கிற **யேசுராசா** கூட தற்கொலை செய்து கொண்ட கவிஞர்களான மாயா **கோவ்ஸ்கி, சங்கம் புழை** ஆகிய கவிஞர் பற்றிக் குறிப்பிடுகின்ற போது.

***''சங்கம் புழை,***
***உனது நெஞ்சை***
***முட்கள் கிழித்த கதை அறிவேன்....***
***மாயாகோவ்ஸ்கி-***
***வாழ்வும் நானும் பிரிந்தனம்...''***

என்று தொடங்கி,

***ஆயினும்,***
***உம்வழி தொடரேன்.''***

என்று முடிக்கிறார். அப்போது கூட இவர்களின் தற்கொலை கூட பின்பற்றப் பட வேண்டிய தொன்றல்ல என வலியுறுத்துகிறார்.

ஆனால் ஈழத்துக் கவிதைப் போக்கிலிருந்து **சிவரமணி** யின் கவிதை மாறுபட்டது. தொடக்கத்தில் நம்பிக்கைத் தொனியைத் தெரிவிக்கிற அவர் கவிதைகள் போகப் போக அவநம்பிக்கையை, நம்பிக்கை வரட்சியை, விரக்தியை தெரிவிப்பனவாக அமைகின்றன.

இந்த மாற்றம் எதனால் நிகழ்கின்றது? **சித்திரலேகா மௌனகுரு** கூறுகின்றார். ''சிவரமணியின் ஆளுமையும், கவிதைகளும், அவரது தற்கொலையும் எழுப்புகிற வினாக்களும். உணர்த்துகிற செய்திகளும் எமது ஆழ்ந்த அக்கறைக்கு உரியவை.''

**சிவரமணி கவிதைகள்** எனும் இக் கவிதைத் தொகுப்பு, **சித்திரலேகா மௌனகுரு** அவர்களால் பதிக்கப்பட்டு, பெண்கள் ஆய்வு வட்டத்தினரால் வெளியிடப்பட்டது.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் 1985- 1990 இற்கு இடைப்பட்டவை. 19.05.1991 அன்று சிவரமணி தனது வீட்டில் தற்கொலை செய்து கொள்கிறார்.

1985, 1986 ஆம் ஆண்டுகளில், இவர் எழுதிய கவிதைகள் வாழ முயல்பவை. வாழப் போராடுபவை. போராட்டத்தை வாழ்வாகக் கொண்டவை.

இவ்வாண்டு காலக் கவிதைகள் தன் கவித்துவத்தில் பலவீனமுற்றிருப்பினும், நம்பிக்கையை, போரை, போர்மீதான வெற்றியை செய்தியாக அறைகின்றன.

சிவரமணியின் வரிகள் சிலவற்றைக் கவனியுங்கள்:

***1. ''எங்கள் கரங்களை -ஒன்றாகப்***
***பிணைத்துக் கொள்வோம்'' (1985)***

***2. ''நாங்கள் பெறுவோம்***
***விடுதலை ஒன்றை'' (1986)***

***3. ''நாளைய உலகென்னும்***
***இளம் தேசத்தில்***
***நிச்சயம் மணம் வீசும் (1985)***

***4. ''அந்தப் புதிய உலகம்***
***மனிதரை நோக்கி***
***வரவேற்புக் கூறுகின்றது'' (1985)***

***5. ''புதிய வாழ்வின்***
***சுதந்திர கீதத்தை***
***இசைத்துக் களிப்போம்***
***வாருங்கள் தோழியரே'' (1986)***


***6.''இருள் நிறைந்த***
***பயங்கரங்களின் ஊடாக***
***நான் வாழ்ந்தேன்***
***இன்னும் வாழ்கின்றேன்'' (1986)***

இன்னும் நிறைய வரிகளை உதாரணமாக்கிக் கொண்டு போகலாம். இன்னொரு புறத்தில் சொன்னால் இவை கோஷங்களாகக் கூட அமைகின்றன. ஆனால் வாழ்வை எதிர் கொள்ளல் இக் கவிதைகளின் பிரதான செய்தியாகின்றது.

ஆனால் 1989,ஆம் ஆண்டு சிவரமணி எழுதிய கவிதை வரியைக் கவனியுங்கள். இப்போது அவர் கவிதைகள் கவிதையாக, கவித்துவத்துடன் உயிர்ப்புடன் இயங்குவதையும் கவனிக்கலாம். நம்பிக்கையற்ற கவிதைகள்.

***1.''மனிதர் பற்றிய மனிதத்தின் அடிப்படையில்***
***வாழ்வதை மறந்தோம்.''(1989)***

***2.''என்னிடம்***
***நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க***
***வார்த்தைகள் இல்லை...***
***நாளைக் காலையில்***
***சூரியன் உதிக்குமா என்பதில் கூட***
***சந்தேகம்...'' (1989)***




***3.''நாளைக்குத் தோன்றுகிற சூரியன் பற்றி***
***எண்ண முடியாது'' (1989)***

***4.''நான்***
***எனது நம்பிக்கைகளுடன்***
***தோற்றுக் கொண்டிருக்கிறேன்'' (1989)***

***5.''நாங்கள் எழுந்தோம்-***
***உலகை மாற்ற அல்ல.***
***மீண்டுமொரு இரவு நோக்கி..'' (1989)***

இரு கவிதைப் போக்குகளுக்கிடையேயும் எவ்வளவு பாரிய வேறுபாடுகள்? ஒரு புறம் வாழ்வின் மீதான நம்பிக்கைகு மறுபுறம் அவநம்பிக்கை. இதற்கான காரணம் யாது?

அரசியல் மாற்றங்களை இங்கு முக்கிய காரணமெனக் கொள்ளலாம். 1986 இன் இறுதி வரை (1986 டிசெம்பர் 13 ம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எப். புலிகளினால் அழிக்கப்படுகின்றது.) ஓரளவுக்காவது ஜனநாயகம் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் நிலவியது. பின்னர் புலிகளின் அரசு நிலவிய காலத்திலும், இந்திய அமைதிப்படை வந்த காலத்திலும், யாழ்ப்பாணப் பிரதேசத்தை அராஜகமே சூழ்ந்த காலம். இது யாவரையும் பாதித்தது. **சிவரமணி** எனும் கவிஞரையும் பாதித்தது.

ஆனால் ***'புதிய வரலாறும் நாமே படைப்போம்'*** என்றபடி இதிலிருந்து மீண்டவன் மனிதன். வாழமுயன்றவன். 'வாழ முயன்றதனால் 'வைத்தியத்திலுயர்ந்தது யாழ்ப்பாணம்' என்றார் மகாகவி. ஆனால் சிவரமணி நம்பிக்கையற்றுப் போகிறார். 1986 இல் பெண்கள் ஆய்வு வட்டத்தில் உயிர்ப்புடன் இயங்குகிறார் சிவரமணி. அதனையும் இங்கு குறித்துக் கொள்ளுதல் வேண்டும்.

அவர் வாழ்வும் அவர் கவிதையும் இரு வேறுபட்டதல்ல. இதனால் அவர் வாழ்வின் போக்கும் கவிதைப் போக்கும் சமதளத்தில் இயங்குகிறது. இதனால் முதலில் வாழ்வின் மீதான பிடிப்பு, நம்பிக்கை, அடுத்து வாழ்வதற்கான போர், போரில் தோல்வியுற்றதால் வாழ்வின் மீதான அவ நம்பிக்கை. விரக்தியின் தற்கொலை. தன்னடையாளம் எதுவும் உலகில் இருக்க விரும்பாத குரூரம். சிவரமணியின் வாழ்வின் யதார்த்தம் இதுதான்.

என்னதான் சப்பைக் கட்டு கட்டினாலும் சிவரமணி தன் வாழ்வின் ஊடாக உலகிற்கு விட்டுப் போயிருக்கும் செய்தி தான் என்ன? தற்கொலை செய்து கொள்கிற ஆயிரக் கணக்கானோரில் ஒருவரல்ல இவர். பெண் கவிஞர். பெண்நிலை வாதத்தில் ஈடுபாடு கொண்டவர். பெண்களை ஆணாதிக்கத்திற்கெதிரான போரில் ஈடுபடுமாறு அறை கூவல் விடுத்தார். இவரை நம்பி வந்திருந்த பெண்களுக்கு இவர் கூறும் செய்தி என்ன? ''வாருங்கள். வாழ்வில் நம்பிக்கை வையுங்கள், பின் விரக்தியடையுங்கள், தற்கொலை செய்து கொள்ளுங்கள்.'' இதுவா செய்தி?

**தோழர் மாசேதுங்** கூறுகிறார்; ''தற்கொலை பற்றிய எனது கருத்து அதனை நிராகரிப்பதாகும். முதலில் மனிதனின் குறிக்கோள் வாழ்க்கையைத் தேடுவதாகும். இந்த இயற்கையான போக்கிற்கு எதிராகச் சென்று மரணத்தைத் தழுவிக் கொள்ளக்கூடாது. இரண்டாவதாக சமூகம் மக்களுக்கு எந்த நம்பிக்கையையும் வழங்காத ஒரு உண்மை நிலையிலிருந்து தான் தற்கொலை நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. எனினும், ந இழந்து போன நம்பிக்கைகளை மீட்பதற்காக சமூகத்துக்கெதிராகப் போராடியேயாக வேண்டும். நாம் ஒரு போராட்டத்திலேயே மரணிக்க வேண்டும். தனது சொந்த உயிரை தானே எடுத்துக் கொள்வதை விட ஒரு போராட்டத்தில் கொல்லப்படுவது எவ்வளவோ உயர்ந்ததுதான். போராட்டத்தின் குறிக்கோள் மற்றவர்களால் கொல்லப்படுவது அல்ல. மாறாக உண்மையான ஆளுமையை நிலைநிறுத்த அவாவுதலேயாகும்.''

தோழர் மாசேதுங்கின் மேற்குறிப்பிட்ட வார்த்தைகளுக்கு விளக்கம் தேவையில்லை. இவ்வாக்கியங்களின் பின்னணியில் சிவரமணியின் தற்கொலையை நோக்குகிற போது, ஆதங்கப்படாது இருக்க முடியவில்லை.

**சித்திரலேகா மௌனகுரு** தனது முன்னுரையில் சிவரமணியின் ஆளுமையினது பல்வேறு பரிமாணத் தன்மையைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் கூட, இத்தற்கொலை பற்றிய தனது கருத்தை முன் வைக்கவில்லை. இத்தொகுப்பை வாசிக்கிற போது சிவரமணியின் கவித்துவத்தின் வளர்ச்சியை நாம் காண முடிகின்றது. இயற்கையை மறுதலித்த இம்மரணமானது நீண்ட துயர் எழுப்புவது.

சிவரமணியின் தற்கொலை தொடர்பாக **'சிவரமணியும் தற்கொலையும்'** எனும் தலைப்பில் **மு.நித்தியானந்தன்** அவர்கள் 13.02.1994 **தினகரன்** வாரமஞ்சரியில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இவ்வாறான தற்கொலைகளை ஊக்குவிப்பதாக அவர் கட்டுரை அமைந்திருந்தது. துர்க்ஹைமிலிருந்து மா ஓ வரை உள்ள அறிஞர்களின் கருத்தைத் திரட்டி இவ்வாறான தற்கொலை சரியானது; போற்றப்பட வேண்டியது என அவர் வாதிட்டார். கட்டுரையை முடிக்கிற போது கூட ''தற்கொலை செய்து கொண்டு விட்டதால் மட்டும் எவ்வாறு சிவரமணி கோழையாகி விடமாட்டாரோ அதே போல் போலிகளும் போக்கிரிகளும் 'உயிர் கொண்டு' திரிவதால் மாத்திரமே வீரர்களாகி விடப் போவதில்லை'' என யாரையோ குறித்துத் தாக்கியும் எழுதினார்.

நல்லது நண்பரே, கட்டுரையின் தொடக்கத்தில், ''அராஜகம் கோர நர்த்தனம் புரியும் ஒரு அந்தகார வெளியில் ஒரு சின்ன விளக்கைப் பிடித்துக் கொண்டு போக முனைந்த அவர்...'' என்று எழுதுகின்றீர். அராஜகம் பற்றிக் கதைக்கிறீர். இதே அராஜகத்தின் விதைகள் ஊன்றப்பட்டுக் கொண்டிருந்த காலமான 1982 இல், ஜனவரி மாதம் 02ம் திகதி இதே அராஜகவாதிகளால் சுந்தரம் சுட்டுக் கொல்லப்பட்டார். நண்பரே, ஞாபகமிருக்கிறதா? அந்த அராஜகத்தை எவ்வளவு தூரம் ஆதரித்தீர்கள் என்று? அதனை ஆதரித்துத் துண்டுப் பிரசுரமும் எழுதிக் கொடுத்தீர்கள்.

இப்போது கூறுங்கள் யார் போக்கிரி- யார் போலி என்பதனை?

நன்றி - நூலகத்திட்டம்



# மனித உரிமைகள்: வெறும் சட்டப்பிரச்சினை அல்ல அது ஒரு அரசியற் பிச்சினையே!

**எஸ். சுந்தரலிங்கம்**

## ''இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான ஓர் உருவரைவு'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கின் இரண்டாவது அமர்வு பற்றிய குறிப்புக்கள் இவை:

அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பவற்றின் இரும்புப்பிடிக்குள் சிக்கித் தவிக்கும் மனித உரிமைகளை எந்த நீதித்துறையினாலும் காப்பாற்றி விட முடியாது''

''இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான ஓர் உருவமைப்பு'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கின் இரண்டாவது அமர்வின் போது இவ்வாறு குறிப்பிட்டார் சட்டத்தரணி மா. இளஞ்செழியன் அவர்கள். அரசியல் யாப்புச்சீர்திருத்தக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு 21-2-94 அன்று லங்கா ஒப்ரோய் ஹோட்டலில் நடைபெற்ற இக்கருத்தரங்கின் இரண்டாவது அமர்வு **''நீதித்துறையும் மனித உரிமைகளும்''** என்ற உப தலைப்பில் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

மேற்கூறப்பட்ட இரு சட்டங்களின் கீழ் தடுப்புக்காவல் ஆணையை ரத்துச் செய்கின்ற அதிகாரம் நீதிமன்றங்களுக்கு கிடையாது. இதனால் மனித உரிமைகள் விடயங்களில் நீதி மன்றங்களின் கரங்கள் கட்டப்பட்ட நிலையிலேயே உள்ளன. இந்நிலையிலும் சட்டத்தரணிகள் எப்போதாவது வெற்றி பெறுகின்றார்கள் என்றால் அதற்கு சட்டங்களிலுள்ள ஓட்டைகளும் நீதிமன்ற சூழ் நிலைகளுமே காரணங்களாக விளங்கியுள்ளன என மேலும் அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஓர் அம்சமானகுற்ற ஒப்புதல் வாக்கு மூலம் ஓர் மோசமான ஏற்பாடு என்றும் A.S.P.முன்னிலையில் அளிக்கப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் வழக்கில் சான்றாக ஏற்கக் கூடிய ஒன்றாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து சட்டத்தரணி அரவிந்தன் பதில் அளித்து பேசுகையில் இலங்கையில் 1978ம் ஆண்டு அரசியல் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகள் சில கட்டுப்பாடுகளைக் கொண்ட போதும் பயனளிப்பவையாகவே உள்ளன என்றும் அடிப்படை உரிமைகள் மீறலுக்கு உள்ளானவர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து பரிகாரத்தை பெறக்கூடிய நிலை உள்ளது என்றும் குறிப்பிட்டார். சட்டமா அதிபருக்கும் விவியன் குணவர்த்தனாவுக்குமிடையில் நடைபெற்ற வழக்கில் உயர் நீதிமன்றம் 'மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது' எனத் தீர்ப்பு வழங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டார். எனினும் இது தொடர்பாக உயர்நீதிமன்றத்துக்கு குடியியல் சார்பான பொறுப்பு மட்டுமே இருக்கிறது. குற்றவியல் பொறுப்பும் அதற்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும், என்றும் குறிப்பிட்டார். அடிப்படை உரிமைகள் தொடர்பாக ஒரு வகையில் நீதிமன்றத்துக்கு கொடுக்கப்பட்ட உரிமைகள் வரையறுக்கப்பட்டவையாகவே உள்ளன என்றும் இதனாலேயே பயங்கரவாதத் தடைச்சட்டம் அவசரகாலச் சட்டம் என்பவற்றுக்கு மத்தியில் அடிப்படை உரிமைகளையாவது காக்க முடியாத நிலை அதற்கு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து விடயம் கலந்துரையாடலுக்கு விடப்பட்டது. கலந்துரையாடலில் மோர்ஜ் செயலாளர் எஸ். பாலகிருஸ்ணன், ஆசிரியர் ஜோதிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மோர்ஜ் செயலாளர் எஸ்.பாலகிருஸ்ணன் உரையாற்றும் போது ''இலங்கையில் மனித உரிமை மீறலுக்கு அதிகாரவாத அரசியல், பேரினவாதம் எனும் இரு விடயங்கள் காரணமாக உள்ளன என்றும் அதுவும் பேரினவாத தன்மையைப் பொறுத்தவரை இன்று அனைத்து அரசியல் இயந்திரங்களும் பேரினவாத மயப்படுத்தப்பட்டுள்ளன'' என்றும் குறிப்பிட்டார். "அரசு இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாக தீர்க்காமல் இராணுவ ரீதியாக தீர்க்கும் வகையில் இனப்பிரச்சின்னயை இரர்ணுவத்திடம் ஒப்படைத்துள்ளது'' என்றும் குறிப்பிட்டார். "ஜனநர்யகரீதியான அரசியல் கலாசாரத்தை கட்டி எழுப்பாமல் மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

ஆசிரியர் ஜோதிலிங்கம் பேசும் போது ''மனித உரிமைப்பிரச்சினை என்பது அடிப்படையில் அரசியல் பிரச்சினை என்றும் அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்ற போதே மனித உரிமைமீறல் பிரச்சினைகள் தோன்றுகின்றது'' என்றும் குறிப்பிட்டார். இதனால் அரசியல் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கும் போது மனித உரிமைகள் தொடர்பாக எத்தகைய ஏற்பாடுகளைக் கொண்டு வந்தாலும் நடைமுறையில் அது போதிய பலனைத் தரப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார். இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பாலான மனித உரிமை மீறல்கள் இலங்கையின் மைய அரசியல் பிரச்சினையான இனப்பிரச்சினையோடு தொடர்புபட்டு இருப்பதனால் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் மனித உரிமைப் பிரச்சினையை முழுமையாக தீர்க்கமுடியாது என்றும் குறிப்பிட்டார். எனினும் மனித உரிமை மீறல்களின் தன்மையைக் குறைக்கும் பொருட்டு அரசியலமைப்பில் சில ஏற்பாடுகளைச் செய்யலாம் என்றார். அதற்கு பயங்கரவாதச் சட்டம் நீக்கப்படுவதோடு அவசரகாலச் சட்டம் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதுடன் அரசிய்லமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் பகுதியில் இனங்களின் உரிமைப்பிரகடனமும் சேர்க்கப்பட வேண்டும் என்றார். அத்தோடு ''அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கான அதிகாரம் தடைகள் எதுவுமின்றி உயர் நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட வேண்டும்'' என்றும் குறிப்பிட்டார்.

இவ் அமர்வில் பிரதான உரையாற்ற வந்த இரு சட்டத்தரணிகளும் மனித உரிமைப் பிரச்சினையை வெறும் சட்டப்பிரச்சினையாகவே அணுக முற்பட்டனர். அதன் அடிப்படையிலேயே மனித உரிமைகளைப் பேணுவதில் நீதி மன்றங்களுக்குள்ள இயலாமையையும், மீறலுக்கு வசதியாக உள்ள சட்ட ஏற்பாடுகளையும் குறிப்பிட்டனர். இதன் அரசியல் பக்கத்தைக் கொஞ்சம் கூடப் பார்க்கவில்லை. அப்படிப் பார்த்தவற்றிலும் கூட அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகள், அதனைப் பேணுவதற்கான நீதி மன்ற வசதிகள் என்பவற்றில் மட்டும் கவனம் செலுத்தினார்களே தவிர அரசியலமைப்பு முழுவதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு குந்தகமாக எப்படி அமைந்துள்ளது, அதில் எத்தகைய மாற்றங்களைச் செய்யலாம் என்பது பற்றிய கருத்துக்கள் எவற்றையும் தெரிவிக்கவில்லை.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட பாலகிருஸ்ணன், ஜோதிலிங்கம் போன்றவர்களே இதனைக் கொஞ்சமாவது பரந்த அடிப்படையில் அரசியலோடும் அரசியலமைப்பின் ஏனைய பகுதிகளோடும் ஒப்பிட்டு நோக்கி கருத்துக்களைக் கூற முற்பட்டனர். எனினும் இவர்கள் கலந்துரையாடலில் மட்டும் கலந்து கொண்டவர்கள் என்ற வகையிலோ என்னவோ மேலோட்டமாக இப்பிரச்சினையை ஆராய்ந்தார்களே தவிர தெளிவாக எதனையும் முன் வைக்கவில்லை.

இந்நிலையில் இரு விடயங்களில் தெளிவான கவனத்தினை செலுத்தியிருக்க வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

1) மனித உரிமைப் பிரச்சினைகள் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணிகள் என்ன?

2)மனித உரிமைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசியலமைப்பிலும், அதற்கு வெளியேயும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன?

முதலாவது விடயத்தைப் பொறுத்தவரை மனித உரிமை மீற்லுக்கான அடிப்படைக்காரணம் அரசியற் பிரச்சினையே ஆகும். இந்த வகையில் மனித உரிமைகள் பற்றி ஆராய்பவர்கள் நாட்டின் மைய அரசியற் பிரச்சினை பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம் ஆகும். இலங்கையைப் பொறுத்த வரை மனித உரிமைகளைப் பேணுவதில் காணக்கூடிய வெற்றியானது மையமான அரசியல் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கான தீர்விலேயே தங்கியுள்ளது. அத்தோடு இலங்கையில் நடைமுறையில் இருக்கும் ''அதிகாரவாத அரசியல்'' எனும் அம்சமும் மனித ஊரிமை மீறலுக்கு ஒரு காரணியாக இருந்து வருகின்றது. தற்போது நடைமுறையில் இருக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசாங்க முறை என்றாலும் சரி, முன்னர் நடைமுறையில் இருந்த பாராளுமன்ற முறை அரசாங்கம் என்றாலும் சரி இரண்டிலும் அதிகாரவாத தன்மை காணப்படுகின்றது. முன்னையதில் ஜனாதிபதியும் பின்னையதில் பிரதமரும் சர்வாதிகாரியாக செயற்படக்கூடிய நிலை உள்ளது. ஒப்பீட்டுரீதியில் ஜனாதிபதி அரசாங்க முறையில் அதிகாரவாத தன்மை கூடுதலாக காணப்பட்டாலும் பாராளுமன்ற அரசாங்க முறையில் பிரதமருக்கு இருக்கும் அதிகாரங்களை குறைத்து மதிப்பிட முடியாது.

எனவே மனித உரிமை ஆய்வாளர்கள் இந்த விடயத்திலும் போதிய கவனம் செலுத்துதல் வேண்டும். இவற்றில் கவனம் செலுத்துவதன் மூலமே மனித உரிமை மீறல்களுக்கான காரணிகளின் ஆணிவேரை கண்டு பிடிக்க முடியும்.

இரண்டாவது விடயம் மனித உரிமை பிரச்சினையை தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியதாகும். இந்நடவடிக்கைகள் அரசியலமைப்பு மட்டத்தில் எடுக்கப்பட்டால் மட்டும் போதாது அதற்கு வெளியிலும் எடுக்கப்படல் வேண்டும்.

அரசியலமைப்பு மட்டத்தில் இரு இடங்களில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒன்று அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகள் பகுதியில் கவனம் செலுத்தப்பட வேண்டும். மற்றையது அரசியலமைப்பின் ஏனைய பகுதிகளில் குறிப்பாக அதிகார அலகுகள் மட்டத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இரு இடங்களிலும் உருவாக்கப்படும் ஏற்பாடுகள் நாட்டின் அரசியற் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக இருத்தல் வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டின் அரசியற் பிரச்சினையாக இனப்பிரச்சினையும், அதிகாரவாத தன்மைப் பிரச்சின்னயும் காணப்படுகின்றது. இவ்விரு பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய வகையிலேயே அரசியலமைப்பின் ஏற்பாடுகள் அமைந்திருத்தல் வேண்டும்.

இனரீதியான ஒடுக்குமுறையைத் த்விர்ப்பதற்கு அடிப்படை உரிமைகள் பகுதியில் இனக்காரணிகள் சேர்க்கப்பட வேண்டும். இதற்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்த தேசிய இன உரிமைப் பிரகடனம் அரசியலமைப்பில் சேர்க்கப்பட வேண்டும். தற்போதுள்ள பயங்கரவாதத்தடைச் சட்டம் அகற்றப்படுவதோடு அவசரகாலச் சட்டத்திலும் மட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட வேண்டும். அதிகாரவாத தன்மையை நீக்குவதற்கு மேலும் மேலும் மனித உரிமைகளை பேணுவதற்கான ஏற்பாடுகள் அடிப்படை உரிமைகள் பகுதியில் சேர்க்கப்படுவதோடு அடிப்படை உரிமை மீறலுக்காக நீதித்துறையிலிருந்து கிடைக்கும் பரிகாரமும் இலகுவானதாக ஆக்கப்பட வேண்டும். இதற்கு உயர் நீதிமன்றத்துக்கு இது தொடர்பாக இருக்கின்ற குடியியல் கடப்பாடுகளோடு குற்றவியல் கடப்பாடுகளும் கொடுக்கப்பட வேண்டும்.

அடிப்படை உரிமைகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல்லினத்தன்மையை வெளிக்காட்டுவதறகான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இதற்கு ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பல்லினத் தன்மைக்கு தடையாக உள்ள காரணிகள் அகற்றப்படுவதோடு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையைப் பேணும் வகையில் அதிகார அலகுகள் உருவாக்கப்பட வேண்டும். அவ் அதிகார அலகுகளுக்கு அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்புகளும் கொடுக்கப்பட வேண்டும்.

அதிகாரவாதத் தன்மையைப் போக்குவதற்கு ஜனாதிபதி அரசாங்க முறையிலும், பாராளுமன்ற அரசாங்க முறையிலும் காணப்படுகின்ற அதிகாரக் குவிப்புத்தன்மை அகற்றப்பட வேண்டும். மாறாக அவ் அதிகாரங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கூட்டுத் தலைமையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆட்சியினர் தவறு இழைக்கின்ற போது அவர்களை திரும்ப அழைத்துக் கொள்ளும் மீட்புரிமை சுவிஸ் அரசியலமைப்பில் உள்ளது போன்று மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அரசியலமைப்பு ரீதியாக இவ் ஏற்பாடுகளை செய்து விட்டால் போதாது அதனைப் பாதுகாப்பதற்கு அரசியலமைப்புக்கு வெளியிலும் சில நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானதாகும். அவற்றில் ஜனநாயக நிறுவனங்களை உருவாக்கி வளர்த்தல், மனித உரிமை நிறுவனங்கள் ஸ்திரமாக இருத்தல் என்பன முக்கியமானவையாகும். இவை இரண்டும் பலமாக இருக்கின்ற போதே அரசியலமைப்பில் கூறப்பட்டவையும் வலிமையானதாக இருக்கும். இல்லையேல் அரசு மிக இலகுவாக அரசியலமைப்பை மீறும் முயற்சிகளில் இறங்கிவிடும்.

எனவே இங்கு மீளவும் வலியுறுத்தப்படுவது யாதெனில் மனித உரிமைவாதிகள் மனித உரிமை மீறல் பிரச்சினைகளை வெறும் மனித உரிமைச் சட்ட பிரச்சினையாக பார்க்காமல் நாட்டின் முழு அரசியலோடும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும் என்பதாகும். வெறும் சட்டப்பிரச்சினையோடு இவர்கள் தம் பணியை நிறுத்தி விடுவார்களாயின் இவர்களால் ஒரு போதும் மனித உரிமை மீறல்களை தடுத்து விட முடியாது. இவர்களின் செயற்பாடு நச்சு மரத்தின் கிளைகளை மட்டும் வெட்டிய செயற்பாடாக இருக்குமே தவிர நச்சுமரத்தையே அகற்றிய செயற் பாடாக இருக்க முடியாது.

இவ்வளவுக்கும் பிறகு இன்னுமொரு முக்கியமான விடயத்தை கவனத்தில் எடுக்க நாம் மறந்து விடக்கூடாது. ஒடுக்கப்படுபவர்கள்- ஒடுக்குபவர்கள் அல்லது ஆளப்படுபவர்கள்- ஆள்பவர்கள் என்ற நிலைமை நிலவுகிற வரையிலும் மனித உரிமை மீறல்களின் சம்பவங்கள் வெவ்வேறு வடிவங்களில் புதிதுபுதிதாக முகிழ்த்துக் கொண்டுதான் இருக்கும். எனவே இத்தகைய சட்டவியல், அரசியல் மாற்ற வடிவங்கள் கூட முற்று முழுதான மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சமூகம் உருவாகும் வரை, பூரண வெற்றியளிக்கப் போவதில்லை. ஆயினும், அது வரைக்குமான வாழ்வுக்கு பாதுகாப்பளிக்க இம்மாற்றங்கள் காலத்துக்கு காலம் புதுப்பிக்கப்பட்டு வருதல் வேண்டும். அது, மக்களின் தொடர்ச்சியான விழிப்புணர்வுடன் கூடிய அரசியல் போராட்டங்களினூடாக (தீவிரமாக நடைமுறைப்படுத்தப் படுவதற்காக) கண்காணிக்கப்பட வேண்டும். இவை ஒவ்வொரு அரசியற் கட்சிகளதும், சமூக தொடர்பு சாதனங்களதும் நிறுவனங்களதும் முக்கிய பணியாக அமைதலும் வேண்டும். தேசிய இனப் பிரச்சினையை இன்றைய பிரதான அரசியற் பிரச்சினையாக குறிப்பிட்டுள்ள போதும் ஒரு கால் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று காணப்படும் பட்சத்தில் மனித உரிமைமீறல்கள் இல்லாது போய்விடும் என்று கருதிவிட முடியாது. அதன் பின்னரும் உருவாகப் போகின்ற புதிய அரசியல் நிலைமைகள் புதிய வடிவங்களில் இவற்றை நடைமுறைப்படுத்த முயலவே செய்யும்.

உண்மையில், மிக ஆழமான, தீவிரமான ஒரு அரசியற் பிரச்சினை இது. ஒவ்வொரு காலகட்டத்தின் அரசியலுடனும் இது இறுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது.

(இன்னும் வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# எதிலிருந்து தொடங்குவது? - 5

## வடே தோசே அப்பிட்ட எப்பா!

காசி ஆனந்தன் சிறையிலிருந்து விடுதலை பெற்று மீண்டு வந்தார். எங்களூர் அம்மன் கோயில் தெற்கு வீதியில் அவர் கலந்து கொண்ட இரண்டாவது கூட்டம்.

வீதி கொள்ளாச் சனம்.

மேடைகள் இடுவதற்குப் பனைமரங்கள் தூக்கினோம்.கொடிகள் ஏற்றுவதற்குத் தடிகள் நாட்டினோம். குலையும் வாழையும் முகப்பில் பொருத்தினோம். சந்தனமும், குங்குமமும் மேசையில் அடுக்கினோம். மதியப் பொழுதில் வேர்த்து வேலைகள் செய்தோம். முல்லையும் மல்லிகையும் கொண்டு மாலைகள் கட்டினோம்.

இருண்டது. காசி ஆனந்தன் வந்தார். பிளேட் எடுத்து கைகளைக் கீறினோம். இரத்தப் பொட்டிட்டோம். காசி ஆனந்தன் தடுக்கவேயில்லை. புன்முறுவலுடன் பார்த்தபடி நிற்க, சடக்கென கையை பிளேடால் உழுதோம். இரத்தம் கசிய அதைச் சேகரித்து அவர் நெற்றியில் அழகாய்த் திலகமிட்டோம். எத்தனை பேரின் இரத்தத்தைக் கண்ட நெற்றி. வாழ்நாளில் கிடைக்காத கொடுப்பினை அது.

''தம்பி சிவகுமாரன் ஏன் இறந்தான்?'' என்று பேசத் தொடங்கினார் மங்கையர்க்கரசி அவர்கள். அதற்கு முன் காசி ஆனந்தனின் பாடலை தன் வெண்கலக் குரலால் பாடினார்.

**''பட்டினி கிடந்து பசியால் மெலிந்து**
**பாழ்பட நேர்ந்தாலும் -எந்தன்**
**கட்டுடல் மெலிந்து கைகால் தளர்ந்து**
**கவலை மிகுந்தாலும் -வாழ்வு**
**கெட்டு நடுத்தெருவோடு கிடந்து**
**கீழ்நிலை யுற்றாலும் -மன்னர்**
**தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்**
**துடைக்க மறப்பேனா?**

**நோயில் இருந்து மயங்கி விழுந்து**
**முடங்கிக் கிடந்தாலும் -ஓலைப்**
**பாயில் கிடந்து நெளிந்து புரண்டு**
**பாடையில் ஊர்ந்தாலும் -காட்டுத்**
**தீயில் அவிந்து புனலில் அழிந்து**
**தூள் பட நேர்ந்தாலும் -எந்தன்**
**தாயினும் இனிய தமிழ் மகளின் துயர்**
**தாங்க மறுப் பேனா?''**

அப்போது நம் தியாகிகளை மதிக்காதவர்களை, நம் தலைவர்களை எதிர்ப்பவர்களை நாம் தமிழினத்துரோகிகள் என்றுதான் நம்பினோம். அவர்கள் மீது கடலென ஆத்திரம் பெருகும்.

காசி ஆனந்தனை காத்தமுத்து சிவானந்தன் என்றார்கள். இது காசி ஆனந்தன் மீதான அவமானம் பூசும் முயற்சி. எப்பேர்ப்பட்ட ஆத்திரம் நமக்கு வந்தது?

ஒரு சுவர் 'காசி ஆனந்தன்'' பாணியில் காசி ஆனந்தனைக் கிண்டலடித்து ''காசி, பாசி, வேசி, தாசி'' எனத் தன்னில் எழுதியிருந்தது. எப்படி இருக்கும்?

காசி ஆனந்தன் நமக்குத் தெய்வம். அவர் பிறந்த மட்டக்களப்பு மாமங்கப் பிள்ளையார் கோயிலடி நமது புனிதஸ் தலம்.

அந்தக் குறுந்தாடியும் அமைதியான சுபாவமும், அந்த வாயிலிருந்து சரளமாகப் பெருகும் சொற்களும் காசி ஆனந்தனை உன்னத நிலையிலிருத்தின.

ஏன் காசி ஆனந்தனைப் பற்றி இப்படிக் கூற வேண்டுமென்றால், காசி ஆனந்தனே நமது ஆதர்ச புருசன். நம் தமிழுக்கு உயிரென உலாவியவர். அவர் உலாவிய இடங்களுக்கெல்லாம் நாமும் உலாவினோம்.

எமது கல்லூரி. அப்போது நான் பத்தாம் வகுப்பு. தமிழ் மன்றம் (என நினைக்கிறேன்) காசி ஆனந்தனை அழைத்துச் சொற்பொழிவாற்றும்படி வேண்டியிருந்தது. விளம்பரப் பலகையில் காசி ஆனந்தன் நமது கல்லூரிக்கு வரப் போகிறார் எனும் செய்தி இருந்தது. நமக்கோ உற்சாகம். என்ன பேசுவார்? எப்படிப் பேசுவார்?

அன்று குறுகிய இடைவேளையின் போது இதுவே நம்பேச்சு. மதிய போசன இடை வேளையின் போதும் இது நம் பேச்சானது.

நமது கல்லூரிக்கு வருகிறார். நமக்கு அயலில் நின்றுபேசப் போகிறார். நமக்கு மாத்திரம் என்று உரையாற்றப் போகின்றார்.

எவ்வளவு குதூகலம் அப்போது.
மதியம் முடிந்தது. மாலை ஆகிறது. ஒன்றும் நடக்கவில்லை.
கல்லூரிக்குள் காசி ஆனந்தன் வருவதை நிர்வாகம் தடை செய்து விட்டது என்று அறிவித்தார்கள் தமிழ் மன்றத்தினர்.

கல்லூரியின் அயலில் வைரவர் கோயில். அதனருகே புளிய மரம். அங்கு சனம் திரண்டது. புத்தகக் கட்டை தோளில் சுமந்து நாமும் அங்கு திரண்டோம்.

தமிழ் மன்றத் தலைவர் விக்கியண்ணை வேட்டி கட்டி, மேடையில் ஏறி நிர்வாகம் எவ்வளவு தடுத்தாலும், நாங்கள் கூட்டத்தை நடாத்துவோம் எனக் கூறி, காசி ஆனந்தனை அழைத்தார்.

ஒரு மாயம் போல, மந்திரத்தில் உருவானது போல காசி ஆனந்தன் அங்கு தோன்றினார்.
எட்டப்பர்களைப் பற்றி எடுத்துரைத்தார். தமிழர்களுக்கு அது சாபக் கேடு என்றும் சொன்னார். எட்டப்பனின் காட்டிக் கொடுத்தலில்தான், வீரபாண்டியக் கட்டப்பொம்மன் இதே போன்ற புளியமரத்தில் தூக்கில் தொங்க வேண்டியிருந்தது என்றார். புளியமரம் தமிழ் மக்களுக்குப் புதியது அல்ல. என்ன பொருத்தம். எமது பாடசாலை மண்டபத்திலும் பார்க்க இப்புளியமரம் வெகு பொருத்தம்.

எட்டப்பனை நமக்குத் தெரியாது. எட்டப்பரைத் தெரிந்திருந்தது. அன்றைய நமது பாடசாலை நிர்வாகத்திலிருந்தோர் அனைவரும் நமக்கு எட்டப்பர். ஒவ்வொரு உருவமாக வந்து வந்து போனது.

பாடசாலைக்கு பிந்தி வருகிற சந்தர்ப்பங்களில் தடியெடுத்து விளாசுகிறார்கள் எட்டப்பர். அசெம்பிளியில் சிறிது அசைந்தாலும், கன்னம் பறக்க வெளுக்கிறார்கள் எட்டப்பர். பிரேயருக்குக்

**அ.டேவிட் நந்தகுமார்**

கோயிலுக்குப் போகிற சமயம், வரிசையிலிருந்து சிறிது விலகினாலும் அடி விழுகிறது. அடிக்கிற கை எட்டப்பனுடையது. வகுப்பறையில் சத்தமிட முடியவில்லை. நண்பனுடன் குசுகுசுக்க முடியவில்லை. எட்டப்பரின் கண்கள் நம்மை மேய்ந்து கொண்டிருக்கின்றன.

அடச்சீ, நவராத்திரிப் பூசையில் பொங்கல் வாங்குகிற போது, பொங்கலை வாங்கக் கைகள் கூசுகின்றன. பொங்கலை வழங்குபவன் எட்டப்பன். எட்டப்பர்களின் ராச்சியம் நமது கல்லூரி.

அது ஒரு பதட்டமான காலம். நம் உடலிலிருந்து எவ்வகை நோவும் எழவில்லை. நாம் ஒருவரிடமிருந்தும் அடியும் வாங்கவில்லை. எந்தப் பொலிஸும் நம்மைத் துரத்தித் துரத்தி அடித்ததாக இல்லை. ஆனால் பதட்டப்பட்டுக் கொண்டிருந்தோம்.

இளைஞர் பேரவை என்று சொல்லி இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பலரது பெயர்கள் பத்திரிகையில் வெளியாயிற்று. ஒவ்வொருவரையும் எதுவோ காரணம் சொல்லி கைது செய்தது அரசு.
நம் தளபதிகள் இருவர் அப்போது இருந்தனர். அமிர், சிவா. (அமிர்தலிங்கம், சிவசிதம்பரம்) அவர்கள் அறிக்கை விட்டனர். வழக்குப் பேசினர். ஆக்ரோஷமாகக் கண்டனம் செய்தனர்.

ஊருக்கு ஊர் பலர் தியாகிகளானார்கள். தமிழ் என்று பேசுகிற எல்லா இளைஞர்களும் கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இச் சமயங்களில் மந்திரிகள் அல்லது அரசாங்க ஆதரவாளர் யாழ்ப்பாணம் வருகிற போது யாழ்ப்பாணம் அல்லோலகல்லோலப்படும்.

ஹர்த்தால், கடைய்டைப்பு, பகிஷ்கரிப்பு. பாடசாலை பகிஷ்கரிப்பு நமக்கு உவப்பான விடயம். ஒரு முறை ஒரு வாரம் தொடர்ந்தும் பாடசாலை போகாது நின்றோம்.

திறந்த கடைகளுக்குக் கல்லெறி, மூடிய கடைகளை பொலிஸார் இழுத்துத் திறப்பார்கள். பொலிஸ் நிலையத்தை அண்டிய கடைகள் முழுமையாகத் திறந்திருக்கும். நமது கல்லூரிக்கு ஒரு விழா சமயம் அப்போது கல்வியமைச்சராக இருந்த பதியுதீன் முகம்மது அவர்கள் விருந்தினர்களாக வந்திருந்தார். அன்று பகிஷ்கரிப்பு. அவர் வருகிற வீதியில் உயிருடன் ஒரு காகத்தைக் கட்டி வைத்தார்கள். அது ''காகா'' என்று கரைந்தது. இக்குரூரமான நகைச் சுவைத் துணுக்கை அப்போது ரசித்துச் சிரித்தோம். கற்பனையின் அற்புதத்தை எண்ணி வியந்தோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தை திறந்து வைக்க பிரதம மந்திரி சிறிமாவோ பண்டார நாயக்கா அவர்கள் வந்திருந்தார்கள். இரண்டு, மூன்று நாட்களாக பாடசாலை பகிஷ்கரிப்பு, ஹர்த்தால், கடையடைப்பு; அடுத்த நாள் பத்திரிகையில் முழுப்பக்கச் செய்தி; 'ஹர்த்தால் பூரண வெற்றி'

அப்போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர்களாக அரசாங்க ஆதரவாளர்களே இருந்தனர். அளவெட்டி ப.நோ.கூ.சங்க -வ.பொன்னம்பலம், தெல்லிப்பழை ப.நோ.கூ.ச - த.பூ.முருகையா, சங்கானை ப.நோ.கூ.ச - கு.விநோதன் இவ்வாறாக.

இப்படி அமைச்சர்கள், பிரதம மந்திரி வருகிற போது, ப.நோ.கூ. சங்க லொறிகளில் மக்கள் ஏற்றப்பட்டு, விழாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அதுவரையிலும் அவ் லொறிகள் பெரும்பாலும் வெங்காயத்தையே ஏற்றிக் கொண்டு கொழும்புக்கு செல்வதுண்டு.

காசி ஆனந்தன், இச்சனங்களை வெங்காயம் என்று ஒரு கவிதை பாடினார். **'தெருப் புலவனின் சுவர்க்கவிகள்'** எனும் தொகுப்பில் அக்கவிதை இருந்தது.
இவ்லொறிகளுக்கு கல்லெறி நடைபெறுவதுண்டு. இவ்வாறான அமைச்சர்கள் பற்றியும் காசி ஆனந்தன் கவிதை எழுதியிருந்தார்:

**''வடக்குக் கிழக்கில் தமிழர்**
**எங்கள் சகோதரர் அப்பா.**
**தெற்கு மேற்கில்**
**வடே தோசே அப்பிட்ட எப்பா.''**

# நாலு வார்த்தை எழுத விடு

**சூரியா**

## ஓவிய ரசனை

**விபவி- மாற்று கலாசாரமையம் எனும் அமைப்பின் ஏற்பாட்டில் கொ.றொ.கொன்ஸ் ரன்ரைன் அவர்களால் ஓவிய ரசனை பற்றிய கலந்துரையாடல், 06.03.94 வெள்ளவத்தை தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.**

கொஞ்சம் பிந்திப் போக நேர்ந்ததால், அக்கலந்துரையாடல் குறித்து முழுக்குறிப்பினையும் எழுதிவிட முடியவில்லை.

மூன்று தலைப்புகளில் கொன்ஸ்ரன்ரைன் உரையாற்றினார் என அறிகிறேன்.

1. ஓவியம்
2. ஓவியரசனை.
3. நவீன ஓவியம்.

ஓவிய ரசனை, நவீன ஓவியம் ஆகிய உப தலைப்பிலான உரைகளையே என்னால் கேட்க முடிந்தது. இவ்வுரைகள் தொடர்பான குறிப்புக்களும் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டன. அது விடயத்தை எளிமையாக்கியது. ஒளிப்படக்கருவியினால் 'சிலைடு'கள் மூலம் ஓவியங்களை உதாரணத்துடன் கொன்ஸ்ரன்ரைன் விளக்கினார். இவையும் புரிதலை எளிதாக்கியது.

ஓவியம் எனும் தலைப்பின்கீழ்,
1. கட்புல அலகுகளும் அவற்றின் பண்புகளும்.
2. ஓவியத் தொகுப்பு.
3. அழகியல் அடிப்படைகள்

எனும் தலைப்புகளினூடாக உரையாற்றியிருக்க வேண்டுமென குறிப்புகள் கூறுகின்றன.

**ஓவிய ரசனை** பற்றிக் குறிப்பிடுகின்ற போது, ஓவியத்தைப் புரிந்து கொள்ள பார்வையாளன் எடுக்கும் முயற்சி இரு அடிப்படையான தளங்களில் அணுகப்படலாம் எனக் குறிப்பிட்டார். ஓவியத்துள் வெவ்வேறு கட்புல அலகுகளை இனங்கண்டு, அவற்றிற்கிடையேயான அழகியல் நிலைபற்றி அறியும் **அழகியற் தளம்** என்பது ஒன்றும், ஓவியத்தின் உணர்வுகளுடன் இனம் காண முயற்சிக்கும் **உணர்வுத்தளம்** என்பது மற்றொன்றும் எனக் குறிப்பிட்டார். உணர்வுகள் உணர்ந்து கொள்ளப் பட வே[illegible]யவை, உணர்த்தப்பட வேண்டியவை. ஆனால் விளங்கப்படுத்தப்பட முடியாதவை. ரேகைகள், நிறங்கள், உருவகங்கள் இவற்றிற்கிடையிலான விகாரம். இவையே உணர்வு வெளிப்பாட்டு உத்திகள். இவை அங்கு குறிப்பிடப்பட்டவை.

அடுத்து நவீன ஓவியம் பற்றிக் குறிப்பிடுகிற போது, மரபு வழி தத்ரூப ஓவியத்திற்கும், நவீன ஓவியத்திற்குமிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிட்டார். மரபுவழி தத்ரூப ஓவியம், காட்சிகளையும் முக்கிய நிகழ்வுகளையும், அப்படியே பதிவு செய்தது. காலமாற்றத்துடன் பார்த்ததைப் பார்த்தபடியே பதிவு செய்வதில் விரக்தி அடைந்த ஓவியன், தனது கருத்தினை 'இட்டுச் சொல்ல' முற்பட அது நவீன ஓவியம் ஆனது. நவீன ஓவியம் என்பது, ஓவியர் ஓவியத்துடனான தனது கருத்தையும் சொல்ல முயல்கிறான். வெறுமனே 'சொல்லல்' மாத்திரமல்ல; அது சமூகம் பற்றிய, தனியாள் பற்றிய விமர்சனமாக அமைகின்றது. இதனால் காட்சிநிலை பிரதிநிதித்துவப்படுத்தல் எனும் தளத்திலிருந்து கருத்து நிலைப் பிரதிநிதித்துவப்படுத்தல் எனும் தளத்திற்கு தளப்பெயர்ச்சி கண்டது. இத்தகைய தளப்பெயர்ச்சி அடுத்த பரிமாணம் எனலாம்

நவீன ஓவியம் ஓவியனின் 'கையெழுத்தை'ப் போன்றது என்கிறார் கொன்ஸ்ரன்ரைன். அதாவது ஓவியனுக்குரியது; அவன் கருத்துநிலைப்பட்டது. இதனால் ஓவியங்களில் 'இஸம்', 'வாதம்' ஆகியன தோன்றின.

20ம் நூற்றாண்டு நவீன ஓவியத்தின் அடிப்படையான அம்சங்கள் என ஓவியத்தின் உணர்வுத் தளத்தினை வெளிப்படுத்தும் வெளிப்பாட்டுவாதம் (Expressionism) என்பதும், ஒரு காட்சியினை அப்படியே பதிவு செய்து அதன் சாரத்தினை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொழிப்பு வாதம் (Abstractionism) என்பதும் குறிப்பிடப்பட வேண்டியன.

**'நவீன ஓவியம் அதனைப் படைக்கத் தூண்டிய கணத்தின் மீதான ஓவியனின் குறிப்பு அல்ல; அது அக்கணத்தின் மீதான அவனது சார்பு நிலைப் பட்ட விமர்சனப் பார்வை'** எனக் கொன்ஸ்ரன்ரைன் கூறினார். இதுவே நவீன ஓவியத்தின் மிக அடிப்படையான வாதம். மிகச் சரியான கருத்தும் **அதுதான்.**

கலந்துரையாடல் நடைபெறுகிற போது, பார்வையாளரின் கேள்வி ஒன்றுக்கு மரபுவழித் தத்ரூப ஓவியத்தை வரையத் தெரிந்தவனே நவீன ஓவியத்தை பிரக்ஞை பூர்வமாகக் கையாள முடியும் எனத் தன் கருத்தை கொன்ஸ்ரன்ரைன் வலியுறுத்தினார்.

இக் கருத்து ஏற்புடையதல்ல. இதே கருத்தை கவிதைக்குப் பொருத்திப் பார்க்கிற போது இக் கருத்தின் பலவீனம் தெரிகிறது.

மரபுக் கவிதை எழுதத் தெரிந்தவரால் மட்டும்தான் இப்போதைய கவிதை வடிவத்தையும் (புதுக் கவிதை என்று எழுதப் பேனா அஞ்சுகின்றது) கையாள முடியும் எனக் கூறினால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? இப்போதைய கவிதை வடிவத்தில் அற்புதமான கவிதைகளை மரபுவழி கவிதை எழுத தெரியாதவர்களே எழுதுகிறார்கள். அவர்கள் கவிதை உயிர்ப்புடன் இயங்குகின்றன.

கொன்ஸ்ரன்ரைன் தனது கருத்தை இவ்வாறு மாற்றியமைத்திருக்கலாம். மரபைத் தெரிந்து கொண்டு மரபை மீறுதல் என்பது அம்மீறுதலுக்கான வலுவைக் கொடுக்கும். இக் கருத்தானது எல்லாக் கலை வடிவங்களுக்கும் பொருத்தமான ஒன்றே.

**அ.மார்க், கோ.கைலாசநாதன்** போன்றோர் கூட மரபு வழித் தத்துருப் ஓவியர்கள் அல்ல. ஆனால் அவர்களது நவீன ஓவியங்கள் அசாத்தியமான அனுபவத்தை நம்மில் பதித்தன. இன்னுமொன்று, காட்சிகளை முக்கிய நிகழ்வுகளை அவ்வாறே பதிவு செய்வதுதான் மரபுவழித் தத்ரூப ஓவியமெனின், ரவிவர்மாவின் ஓவியங்களையே அவ்வகையில் அடக்குதல் இயலும். தமிழ் நாட்டுக் கோவில் சிற்பங்கள், ஓவியங்கள், சிகிரிய ஓவியங்கள் யாவும் மரபை மீறியவையே. விகடன், குமுதம் முதலான சஞ்சிகையில் வெளிவரும் கோபுலுவின் (அலாதியான அனுபவத்தைத் தருவன இவர் ஓவியங்கள்) ஓவியங்கள் கூட மரபுவழிப்பட்ட தத்ருப ஓவியங்கள் அல்ல.

இறுதியாக, நவீன ஓவியம் பொதுநிலைப்பட்ட அனுபவத்தின் பாற்பட்டு வருகின்ற போது தரும் திருப்தி, தனி அனுபவத்தினை கலையாக்கும் போது பரிணமிப்பதில்லை. மார்க், கைலாசநாதன், மருது, ஆதிமூலம் ஆகியோரின் ஓவிய்ங்கள் நல்ல அனுபவங்களையே எம்மில் பதித்தன.

நன்றி - நூலகத்திட்டம்



# சாதியமைப்பும் யாழ்ப்பாணத் தமிழர்களும்

## ஒரு சமூகவியல் பரிசீலனை -5

வ.ஐ.ச.ஜெயபாலன்

வெள்ளாரின் தொகைரீதியான பெரும்பான்மைப் பலம், கல்வி, அதிகாரப் பலம், சாதியடிப்படையிலான சமூக கலாசாரப் பலம் ஒரு புறத்திலும் மொத்த குடித் தொகையில் 50%த்திற்கும் குறைவான ஏனைய சாதியினர் 20க்கும் மேற்பட்ட சாதியினராக பிளவுபட்டிருந்தமை மறுபுறமுமாக வெள்ளாரின் கையை மேலும் பலப்படுத்தியது. வெள்ளாளர் தவிர்ந்த கோவியர் போன்ற சூத்திரர் பிரிவைச் சேர்ந்த நடுத்தரச் சாதிகளும் பஞ்சமர் பகுப்புள் இடம்பெறாத தச்சர், கொல்லர், தட்டார் போன்ற பல்வேறு குடிமைச் சாதிகளும் பெரும்பாலும் வெள்ளாளருக்குச் சார்பு நிலை கொண்ட சாதிகளாகவே இருந்தன.

1960களில் நடுத்தரச் சாதியினராக மேம்பட்ட கோவியர்களில் கணிசமான பகுதியினர் வெள்ளாளருடன் சேர்ந்து தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களை தீவிரமாக எதிர்த்தனர். கோவியருள்ளும், சிவியார் போன்ற ஏனைய நடுத்தர சாதியினருள்ளும் படித்த நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் சோசலிசக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி செல்வாக்குப் பெற்றிருந்தது. இன்று மேற்படி நடுத்தரச் சாதிகள் வெள்ளாளரால் உள்வாங்கப்படுகிற போக்கு காணப்படுகிறது.

இந்த நிலைமை வெள்ளாளரது சாதிவாரியான காய் நகர்த்தல்களுக்கும் அவர்களது பிரித்து ஆதிக்கம் செலுத்தும் தந்திரோபாயங்களுக்கும் வாய்ப்பான ஒரு சூழலை ஏற்படுத்தியிருந்தது. வெள்ளாளரின் பிற்போக்கான பகுதியினர் இந்த வாய்ப்பை வரலாறு முழுவதிலும் நன்கு பயன்படுத்தினர்.

### நாவலர் வெள்ளாளரின் காவலர்

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் சைவ சமய மறுமலர்ச்சி இயக்கத்தினரும் தமிழ் வளர்ச்சிப் பணிகளதும் தந்தையான ஆறுமுக நாவலர் ஆளவந்த அன்னியர்களது சமய அடிப்படையிலான கலாசார ஆதிக்க விரோதம், சுதேசிய கல்வித்துறை வளர்ச்சி, தமிழ் நூல் வளர்ச்சி என பல்வேறு துறைகளில் தனது முத்திரையைப் பதித்தவர். இது அவரின் முன்னேற்றமான பார்வையுள்ள முற்பக்க முகத்தைப் பற்றியது. அதே சமயம் அவரது சமூகம், வெள்ளாளரும், சமூக பொருளாதார மேம்பாட்டினால் வெள்ளாளருடன் தன்மயமாகி வருகிற சாதிகளும் தான். இவற்றுக்கு அப்பால் உள்ளவர்கள் நாவலரின் கண்களில் நிறை மனிதர்களாகத் தெரியவில்லை. சம காலத்து சமூக பொருளாதார மாற்றங்கள் மீளா அடிமைச் சேற்றில் ஆழ்ந்து அல்லலுறும் அந்த மனிதர்களுக்கும் சென்று சேர்வதை தடுத்த பிற்போக்கு இயக்கமான யாழ்ப்பாணியத்தின் மூளையாகவும் அதன் தத்துவார்த்தத் தலைவராகவும் அமைந்தார். இது அவரது பின் நோக்கிய பார்வையுள்ள பிற்பக்க முகத்தைப் பற்றியது.

தன்னைப் பாதிக்கும் மேலாதிக்கப் போக்குகளுக்கு எதிராக நிமிர்ந்து போராடும் முன்நோக்கிய பார்வையுள்ள ஒரு முகமும், தனக்குக் கீழ்ப்பட்டவர்களை கொடுமையாக ஒடுக்கி அடக்கும் சமூகப் பிரக்ஞையற்ற பின்நோக்கிய இன்னொரு முகமும் கொண்ட நவீன யாழ்ப்பாணிகளின் முதற்சந்ததி ஆறுமுகநாவலருடன் தான் ஆரம்பிக்கிறது. ஆறுமுகநாவலரின் தலைமையிலான சைவத் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் என்று குறிப்பிடப்படுகின்ற இயக்கத்தின் செயற்பாடுகளுடன்தான் யாழ்ப்பாணியக் கலாசாரம் தோற்றம் பெறுகிறது.

சமகாலத்தில் சிங்களப் பகுதிகளில் தோற்றப்பெற்ற பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் உயர்சாதி 'கொவிகம' ஆதிக்கம் பெற்றிருந்த கண்டிப் பகுதிகளில் செல்வாக்குப் பெறவில்லை. கரவா, சலாகம, துராவ, போன்ற கொவிகம அல்லாத சாதியிரும் செல்வாக்குப் பெற்றிருந்த கரையோரப் பகுதிகளிலேயே இந்த இயக்கம் முதன்மை பெற்றது. யாழ்ப்பாணத் தமிழரது சைவ மறுமலர்ச்சி இயக்கத்தை விட அதிக சமூகப் பிரக்ஞையை பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் வெளிப்படுத்தியமையின் சமூகப் பின்னணியைப் புரிந்து கொள்ள இத்தகவல் உதவும். பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் உயர்ந்த சமூகப் பிரக்ஞையை வெளிப்படுத்திய போதும் கத்தோலிக்க விரோதம், முஸ்லீம் விரோதம், தமிழர் விரோதம், இந்திய விரோதம் என்ற வகையில் நவீன சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடிப்படை அம்சங்களைப் பிறப்பித்தது. நவீன சிங்களப் பேரினவாதி இங்கிருந்துதான் தோற்றம் பெற்றான்.

சிறு தெய்வ வழிபாடும் கிராமியச் சடங்குகளும் நிறைந்த, பரந்துபட்ட சாதிவாரியாக பல்வேறுபட்ட மக்களது பங்கு பற்றலும் கொண்ட யாழ்ப்பாணத்து சமய அமைப்பை ஆறுமுகநாவலர் பிராமணர் தலைமையில் ஆகம மயப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்துக் குடாநாட்டில் பிராமணர் தலைமைக்கும் ஆகமக் கட்டுக் கோப்புக்களுக்கும் வெளியே, சிறு தெய்வ வழிபாட்டு அடிப்படையில் கிராமியக் கலை கலாசார மையங்களாக இயங்கி வந்த கோவில் வழிபாட்டு அமைப்பு இந்த இயக்கத்தினால் தகர்த்து எறியப்பட்டது. தமிழகத்திலிருந்து கோவில் பூசகர்களான நிலவுடமையற்ற கீழ்வர்க்க பிராமணர்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர். கோட்பாட்டுரீதியாக யாழ்ப்பாணத்து சாதி சமய கலாசார அமைப்பின் கொடுமுடியில் பிராமணர்களை இருத்திய வெள்ளாளன் நடைமுறையிற் தனது உடைமையான கோவில்களில் சேவை செய்யும் பணியாளனாகவே அவர்களைக் கீழ்ப்படுத்தி வைத்தான். கோட்பாட்டுரீதியாக வெள்ளாளரை விட மேம்பட்டவர்களாகவும் நடைமுறையில் வெள்ளாளர்களின் பணியாட்களாகவும் வாழ்ந்த இந்தப் பிராமணர்களை எந்த வகையிலும் தமிழகப் பிராமணர்களின் மேல் வர்க்கத்துடன் ஒப்பிடமுடியாது. அதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்துக் கோவில்களை இந்த ஆகமமயப்படுத்தும் முயற்சி பாதிக்கவில்லை. கோவில் கலாசாரமாக கிராமியத் கலைகள் கிராமிய வாத்தியங்கள் உடுக்குபறை கிராமிய இசைகளுக்குப் பதிலாக தமிழகத்து உயர் கலைகளான கர்நாடக சங்கீதம், தவில் நாதஸ்வர வாத்திய இசை, தேவதாசிகளின் பரத நாட்டியம் என்பன புகுத்தப்பட்டன. நட்டுவர் போன்ற சாதிவாரிக் கலைஞர்களின் தேவையையும் வரவையும் அதிகரித்தது. இது ஒரு புறத்தில் குறிப்பிடத்தக்க கலாசாரப் பங்களிப்பேயாகும். ஆனால் இந்த உயர் கலைகளை பரந்துபட்ட யாழ்ப்பாணத்து மக்களது கிராமியக் கலை கலாசாரத்திற்கு பிரதியீடாகவும் மேட்டுக் குடியினரின் கலாசாரமாகவும் புகுத்தி மக்கள் கலைகளை இழிசனர் வழக்காகக் கழித்து ஒதுக்கியமை பரந்துபட்ட மட்டத்தில் யாழ்ப்பாணத்தை கலாசாரப் பாலைவனமாக்கியது. பரந்துபட்ட மக்களின் கலைகலாசாரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தையும் மட்டக்களப்பையும் ஒப்பிட்டு ஆராய்கிற ஒருவர் இக்கருத்தையும் ஒத்துக் கொள்ளவே செய்வர்.

### சாதிவாரியான யாழ்ப்பாணத்து ஆதிக்க சக்திகள் வெள்ளாளரும் சைவக்கரையாரும்

யாழ்ப்பாண சமூக பொருளாதார வரலாற்றின் புறநடையாக, வெள்ளாளர், மயமாகாமலேயே யாழ்ப்பாணிகளாக அங்கீகரிக்கப்பட்டு பலம் பெற்ற சைவக் கரையார்களது எழுச்சியைக் குறிப்பிடலாம்.

வெள்ளாளரால் நிர்ணயிக்கப்பட்ட சமூக பொருளாதார கலாசார அமைப்பில் சாதிவாரி மீனவ சமூகங்கள், தொகைரீதியாகச் சிறுபான்மையாகவும் கலாசார ரீதியாக வெள்ளாளருடன் ஒப்பிடும் போது பிற்படுத்தப்பட்டவர்களாகவும் இருந்தனர். எனினும் இவர்கள் சொத்துடமை உள்ளவர்களாகவும் வெள்ளாளரில் தங்கியிருக்காதவர்களாகவும் வெள்ளாளரைப் போலவே தமக்கு கீழ்ப்பட்டவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் இருந்தனர். கரையாரில் பெரும்பகுதி கத்தோலிக்கராகப் பிரிந்து போனமை சைவக் கரையாரை சாதி வாரியாக மேலும் சிறுபான்மையினராக்கியது. யாழ்ப்பாண சமூகத்தில் நிலவிய முரண்பாடுகள் மோதல்கள் ஒரு புறத்திலும், தொழில் வாரியாக மீன்பிடித்தல் மட்டுமன்றி ஆரம்பத்திலிருந்து சட்டரீதியானதும் சட்டமறுப்பானதுமான கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தமை மறுபுறத்திலுமாக அவர்களை இறுக்கமானதும், செயல்திறன் மிக்கதும் போர்க்குணம் உள்ளதுமான வகையில் நிறுவனமயப்படுத்தியிருந்தது.

முரண்பாடுகளின் மத்தியிலும் யாழ்ப்பாணத்து வெள்ளாளரையும் சைவக் கரையாரையும் இணைக்கும் வலுவான கலாசார அம்சங்களாக சைவமும், தமிழ் இனத்துவ வளர்ச்சியும் அமைந்தது. தொழில் ரீதியாகவும் சைவக்கரையாரின் கடல் வாணிபப் பண்டங்களின் விற்பனையாளர்களாக நவீன யாழ்ப்பாணச்சமூகத்தின் பலமான அங்கமான வெள்ளாள வர்த்தக முதலாளிகளே அமைந்தனர். இந்த இணைப்புகள் ஓரளவில் சைவக்கரையாருக்கு பல்வேறு துறைகளில் வெள்ளாளரது அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தது.

எனினும் 1950களில், அரசியலில் தமிழருக்கு எதிரான இன வன்முறையும் காவற் படையினரின் அத்துமீறல்களும் ஆரம்பித்த காலங்களிலிருந்தே சைவக் கரையாருக்கும் வெள்ளாளருக்கும் இடையே, உறவு நிலையில் புதிய பரிமாணங்கள் ஏற்பட்டு வளர ஆரம்பித்தன.

சட்டமறுப்பு போர்க்குணம், இறுக்கமான சமூகபொருளாதார அமைப்பு என்பவற்றைக் கொண்டிருந்த சைவக் கரையாரை வெள்ளாளர் மத்தியில் தமது காவலர்களாகவும் அவர்களது பிரதேச மையமான வல்வெட்டித்துறையை தமது காவல் அரணாகவும் பார்க்கிற போக்கு 1958ம் ஆண்டுக் கலவரங்களின்போது தோற்றம் பெற்று 1970களில் வலிமை பெறத்தொடங்கியது.

இதுதான் 1950களிலேயே சைவக்கரையார் வெள்ளாளர் மயப்படாமல் வெள்ளாளர் மையப்பட்ட யாழ்ப்பாணி சமூகத்தின் பலமான ஒரு அங்கமாக மாறிய கதை.

### ஆய்வின் தேவை

சிங்கள , இலங்கை தமிழ், தமிழகத் தமிழ் சாதி அமைப்பு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். கொவிகம, கரவா சாதியினரது உறவுகளும் வெள்ளாளர்,கரையார் உறவுகளும் இலங்கையின் தெற்குக் கரையில் வாழும் பௌத்த கரவா சாதியினரதும் வடகரையில் வாழும் சைவக் கரையாரதும் சமூக பொருளாதார அரசியல் வரலாறும் ஒப்பீட்டு ஆய்வுக்கு உரியன.


இலங்கைத் தமிழர்கள் மத்தியில் சைவ சமய மறுமலர்ச்சி இயக்கத்தினரும் தமிழ் வளர்ச்சிப் பணிகளதும் தந்தையான ஆறுமுக நாவலர் ஆள வந்த அன்னியர்களது சமய அடிப்படையிலான கலாசார ஆதிக்க விரோதம், சுதேசிய கல்வித்துறை வளர்ச்சி, தமிழ் நூல் வளர்ச்சி என பல்வேறு துறைகளில் தனது முத்திரையைப் பதித்தவர். இது அவரின் முன்னேற்றமான பார்வையுள்ள முற்பக்க முகத்தைப் பற்றியது. அதே சமயம் அவரது சமூகம், வெள்ளாளரும், சமூக பொருளாதார மேம்பாட்டினால் வெள்ளாளருடன் தன்மயமாகி வருகிற சாதிகளும் தான். இவற்றுக்கு அப்பால் உள்ளவர்கள் நாவலரின் கண்களில் நிறை மனிதர்களாகத் தெரியவில்லை. சம காலத்து சமூக பொருளாதார மாற்றங்கள் மீளா அடிமைச் சேற்றில் ஆழ்ந்து அல்லலுறும் அந்த மனிதர்களுக்கும் சென்று சேர்வதை தடுத்த பிற்போக்கு இயக்கமான யாழ்ப்பாணியத்தின் மூளையாகவும் அதன் தத்துவார்த்தத் தலைவராகவும் அமைந்தார். இது அவரது பின் நோக்கிய பார்வையுள்ள பிற்பக்க முகத்தைப் பற்றியது.

தன்னைப் பாதிக்கும் மேலாதிக்கப் போக்குகளுக்கு எதிராக நிமிர்ந்து போராடும் முன்நோக்கிய பார்வையுள்ள ஒரு முகமும், தனக்குக் கீழ்ப்பட்டவர்களை கொடுமையாக ஒடுக்கி அடக்கும் சமூகப் பிரக்ஞையற்ற பின்நோக்கிய இன்னொரு முகமும் கொண்ட நவீன யாழ்ப்பாணிகளின் முதற்சந்ததி ஆறுமுகநாவலருடன் தான் ஆரம்பிக்கிறது. ஆறுமுக நாவலரின் தலைமையிலான சைவத் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் என்று குறிப்பிடப்படுகின்ற இயக்கத்தின் செயற்பாடுகளுடன்தான் யாழ்ப்பாணியக் கலாசாரம் தோற்றம் பெறுகிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டங்களின் தனியார் மயம்:



# இருந்ததையும் இழந்து...

இலங்கையில் தேயிலை றப்பர் தோட்டங்களின் நிர்வாகத்தை அரசாங்கம் தனியார் கம்பனிகளிடம் 1992ல் கையளித்தது இலங்கையின் முற்போக்கு சிந்தனையாளர்களின் செயலுக்குப் பெருத்த அடியாகும். இத்தோட்டங்களில் ஏறத்தாழ 77 சதவீத இந்திய வம்சாவழித் தமிழர்களும் 23 சதவீத பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் தொழில் புரிகின்றனர்.

## தோட்டங்களின் தேசவுடமைக்குப் பின்னால்:

அரசாங்கம் தோட்டங்களைத் தேச உடைமையாக்கி 20 ஆண்டுகள் நிர்வாகம் செய்தது. இக்கால கட்டத்தில் அரசாங்கத்திற்குக் கிடைத்த அந்நிய செலாவணியும், தோட்டத்துறை சார்ந்த வரிகளும், கம்பனி காலத்தைப் போலவே குறைவில்லாமல் கிடைத்தது. இதனைத்தவிர, தங்களுக்கு வாக்களித்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் சில செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இதனால் உற்பத்திச் செலவு அதிகரித்தது. உற்பத்தி குறைந்தது. சுரண்டலும் இடம் பெற்றது.

✱தோட்டங்களில் ஏற்படும் வேலை வாய்ப்புகளையும், பிற வேலை வாய்ப்புகளையும் உருவாக்கி தோட்டத்துறையையும் அரசாங்கம் தங்களின் வேலை வங்கிகளில் ஒன்றாக மாற்றி அதிகமானவர்களுக்கு வேலை வழங்கியது. இதனால் அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும் இதுவரை ஒருவர் செய்த வேலைக்கு, நான்கு பேர் நியமிக்கப்பட்டனர். உற்பத்திச் செலவு அதிகரித்தது.

✱நல்ல வருமானத்தைக் கொடுத்த சில தேயிலை றப்பர் தோட்டங்களைக் குடியேற்றங்களாக மாற்றியது. இதனால் தோட்டத் தொழிலாளர்களான மலையகத்தமிழர் லொறிகளில் ஏற்றப்பட்டு, நகரங்களுக்கு அருகில் உள்ள வீதிகளில் அநாதரவான நிலையில் தவிக்க விட்டுச் சென்ற வரலாறும் உண்டு. இதன் காரணமாக உற்பத்தி செய்யப்படும் நிலப்பரப்புக் குறைந்து, உற்பத்தியும் குறைந்தது.

✱காலப்போக்கில், நிர்வாக மத்தியத்துவத்தின் பலவீனம் காரணமாகத், தோட்ட நிர்வாகிகள், தோட்டவளங்களையும், வருமானத்தையும் சுரண்டத் தொடங்கினர்.

தோட்டத் தொழிலாளர்களின் அவலத்தின் சின்னங்களான குடியிருப்புகள், கல்விக் கூடங்கள் வெளிநாட்டுச் சமூக நிறுவனங்களின் (NGO'S) கவனத்தை ஈர்த்தன. அவர்களின் உதவியால் தொழிலாளர்களின் குடியிருப்புகளும், மலையகப்பிரதேசத்தின் கல்விக் கூடங்களும் திருத்தப்பட்டும் புதிதாக நிர்மாணித்தும் கொடுக்கப்பட்டன. அதுவும் முழுமை பெறவில்லை. அம்மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும் உதவிகள் வழங்கப்பட்டுப் பல செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அரசாங்கம் அம்மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொள்ளவில்லை.

## வருமானம் குறையாமலே நட்டம் என்றது அரசு:

தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் பொன் விளையும் பூமியாகத் திகழ்ந்த இத் தோட்டங்கள், அவை நட்டத்தில் இயங்குவதாக அதனை நிர்வகித்த கூட்டுத்தாபனங்களால் கூறப்படத் தொடங்கின. ஆனால் அரசாங்கத்தின் வருமானம் குறைந்ததாகத் தகவல் இல்லை. நட்டம் என்றவர்கள் அதன் காரணத்தை அறிந்து நிவர்த்தி செய்ய வழிவகுக்கவில்லை. தொழிலாளர்களின் சம்பள உயர்வு, நலன்புரிச் சேவைகளைத் தட்டிக் கழிக்கவே இவ்வாறு குரல் எழுப்புவ. தாகக் கருதப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் தொழில் பிரச்சினைகள் நல உரிமைகள் அனைத்திற்கும் தொழிற்சங்கங்களே நீண்டகாலமாகக் குரல் கொடுத்து வந்தன; வருகின்றன. தேசியமயமாக்கப்பட்ட பின் அரசாங்க சார்புத் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் தொழில் பிரச்சினைகளிலோ நல உரிமைகளிலோ குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதனையும் செய்ய முற்படவில்லை. அவர்களின் அவலநிலையை போக்க வழிவகுக்கவுமில்லை.

## தேசிய அரசிலும் புறக்கணிப்பு:

தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட 1972 ம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன இணைந்த கூட்டரசாங்கம் ஆட்சியில் இருந்தது. இக்கட்சிகளுக்குக் கீழ் இயங்கிய ஸ்ரீலங்கா சுதந்திர தோட்டத் தொழிலாளர் சங்கம், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியன் ஆகியனவும் இலங்கைத் தோட்டத்தொழிலாளர் யூனியன் (செங்கொடிச் சங்கம்), ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய ஐந்து தொழிற் சங்கங்களும் அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டன. அரசாங்கத்திற்கு எதிராகச் செயல்பட்ட பிரதான தொழிற் சங்கங்களாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்; லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியன விளங்கின. இவைகள் அனைத்தும் தொழிலாளர்களின் பிரச்சினைகள் அவர்களின் நல உரிமைகள் பற்றி உருப்படியாக எதனையும் முன்வைக்கவும் இல்லை, குரல் எழுப்பவும் இல்லை. போராட்டம் நடத்தவும் இல்லை. இதேகால கட்டத்தில் இலங்கையில் வேறுபல நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. அவைகள் அனைத்தும் பல விதத்திலும் முன்னேற்றமடைந்துள்ளன. நவீன தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் உரிமைகளும் சலுகைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. காலத்திற்குக் காலம் சம்பள உயர்வு வழங்கப்பட்டுத் தற்போதைய நிலையில் ஒரு தொழிலாளி ஆகக்குறைந்தது மாதம் 2500 ரூபாவிற்குக் குறையாமல் பெறக்கூடியதாக இருக்கின்றது. தொழிற்சங்க உரிமைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய மாற்றங்களைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏன் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை?

## ஆட்சிக்கு வந்த அரசும் அக்கறை காட்டவில்லை:

1977ம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சிப் பொறுப்பைப் பெற்றது. இதன் வெற்றிக்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்; லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியன மலையகப் பகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்டன. இ.தொ.காவின் வாக்குறுதிகளை வேதவாக்காக மதித்த மலையக மக்கள் பொதுத் தேர்தலிலும், அதற்குப் பின் வந்த அனைத்துத் தேர்தல்களிலும் ஐ.தே.கட்சிக்கே தங்கள் வாக்குகளை அளித்து ஆதரித்து வந்தனர்; வருகின்றனர். இந்தப் பதினாறு ஆண்டுகால ஆட்சியில் இவ்வரசாங்கம் அவர்களின் மீது கடைக்கண்களையாவது காட்டியதா? மலையக மக்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டே வருகிறார்கள். இந்த இரண்டு தொழிற்சங்கத் தலைவர்களும் அமைச்சர் அந்தஸ்து பெற்றவர்களாக அரசாங்கத்துள் பெரும் சக்தி வாய்ந்தவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள், இம்மக்களின் சம்பள உயர்வு, குடியிருப்பு, கல்வி, சுகாதாரம், தொழிற்சட்டங்கள் அனைத்திலும் எவ்விதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முயலவில்லை. தொழிற்சங்கங்கள் அவரவர்கள் சார்ந்துள்ள கட்சிகள் ஆட்சியில் இருந்த போது மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயன்றிருக்கலாம். அதனைச் செய்யாமல் அவர்கள் சார்ந்துள்ள அரசைக் காப்பாற்றுவதில் அக்கறை காட்டினார்களே தவிரத் தோட்ட மக்களின் நலனில் அக்கறை காட்டவில்லை.

## மக்கள் மயம் என்ற பெயரில் அந்நியர்மயம்:

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த காலம் தொடக்கம் தேசிய மயமாக்கப்பட்ட நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்று கூறியதோடு மட்டுமல்லாமல் அதற்கு அழுத்தம் கொடுத்து பிரச்சாரம் செய்யவும் தொடங்கியது. படிப்படியாகத் தேசிய மயமாக்கப்பட்ட நிறுவனங்களை மக்கள் மயமாக்குவதாகக் கூறித் தனியார் நிறுவனங்களுக்கு கையளித்துப் பொறுப்பிலிருந்து ஒதுங்கித், தங்கள் கொள்கையை நிறைவேற்றிக் கொண்டு வந்தது. இதே நிலை தோட்டத்தொழில் துறைக்கும் ஏற்பட்டது. நிர்வாகத்தைக் கம்பனிகளிடம் கொடுப்பதைத் தோட்டத்துறை சார்ந்த தொழிற்சங்கங்கள் பலவும் எதிர்த்துத் குரல் கொடுத்தன. லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் கூட தோட்டங்களின் நிர்வாகத்தைத் தனியார் நிறுவனங்களிடம் கொடுப்பதை முழுமையாக ஆதரிக்கவில்லை. ஆனால் இ.தொ.காவும் அதன் தலைவர் அமைச்சர் தொண்டமானும் விடாப்பிடியாக வரிந்துகட்டிக் கொண்டு ஆதரித்தனர். தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காகவும் நல்வாழ்விற்காகவுமே தோட்டங்களைத் தனியார் நிர்வாகத்திடம் ஒப்படைப்பதை ஆதரிக்கிறோம் என மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தனர். எதிர்த்துப் போராட்டம் செய்யத் தயாரான சில தொழிற்சங்கங்களின் எண்ணத்தை அமைச்சர் தொண்டமானின் பிரச்சாரம் முறியடித்தது.

## விரட்டப்பட்டனர் மலையக மக்கள்:

தோட்டங்களைக் கம்பனிகள் கையேற்று ஓர் ஆண்டு பூர்த்தியாகு முன் அங்கே பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்தன. உரிமைகளும் சலுகைகளும் பறிக்கப்பட்டன. வேலை நாட்கள் குறைக்கப்பட்டன. வேலைகளின் தன்மை மாற்றப்பட்டு, வேலைகளின் அளவு கூட்டப்பட்டது. இதன் காரணமாகக் கம்பனிகள் மகிழ்ந்தன. மக்கள் கண்ணீர் விட்டனர். நிர்வாகத்தின் கெடுபிடிகளும், அடக்குமுறைகளும் தலை தூக்கின. மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். வேறு இடங்களுக்கு வேலை தேடி ஓடினர். கந்தளாய், பெலவத்தை கரும்புத் தோட்டங்களுக்குச் சென்றும், அங்கிருந்தும் விரட்டப்பட்டனர். அவர்கள் அடைந்த துயரம் போராட்டப் பாதைக்கு இழுத்துச் சென்றது. பறிக்கப்பட்ட உரிமைகளுக்காகவும், இழந்த வருமானத்திற்காகவும் மீண்டும் போராட்டம் ஆங்காங்கே ஆரம்பமானது. இப்போராட்டங்கள் படிப்படியாக அதிகரித்தன. இப்போராட்டங்களின் எண்ணிக்கை மலையக வரலாற்றில் சாதனை படைத்துள்ளது.

## எழுகிற கோரிக்கைகள்:

மலையகப் பிரதேசங்களில் வாழும் மக்கள் ஓரளவு அரசியல் சிந்தனை பெற்றவர்களாக வளர்ந்து, 'தங்களை இலங்கையின் தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரிக்க வேண்டும். வீடும் நிலமும் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்; இலங்கையின் ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பள உயர்வும், உரிமைகளும் சலுகைகளும் தங்க

16 ஆண்டுகால ஆட்சியில் ஐ.தே.கட்சி மலையக மக்கள் மீது கடைக்கண்களையாவது காட்டியதா?

இரண்டு சக்தி வாய்ந்த அமைச்சர்களும் மலையக மக்களின் நலன்களில் எப்போதாவது அக்கறை காட்டினார்களா?

ஐ.தே.க. அரசைக் காப்பாற்றுவதைத் தவிர வேறென்ன செய்தார்கள் அவர்கள்?

சிறுபான்மையினமாக அங்கீகரி!

வீடும் நிலமும் வழங்கு!

சம்பள உயர்வு கொடு!

வேலை நாட்களைக் குறையாதே!

வேலைச் சுமையை ஏற்றாதே!

மலைத்தேவன்

ளுக்கும் வழங்க
நாட்டில் சம உரி
செய்ய வேண்டு
களை முன்வைத்
இக் கோரிக்கை
னையாக மாற்ற
நெருங்கும் போ
தின் கெடுபிடிகள
னைக்காக போர
உருவாகி விட்ட
அரசியல் பிரச்சி
பப்பட்டு, மீண்டு
களில் தொழிலா
தாயிற்று.
தொழில் பிரச்சி
மற்றப் பிரச்சினை
விடாமல் தடுக்
நோக்கம் நிலை
வாழ்நாள் பூரா
உழைப்பை உறி
தற்காகக் களம்
தோடு சிறுபா
அடக்கி வைக்க
சியாளரின் எண்
லப்பட்டுள்ளது.

## அறிக்கை போன

வேலை நாட்கள்
போராட்டம் விர
தில் 10 நாட்கள்
வழ தன்
வயிற்றலடிக்கா
வேலை வழங்
போன்ற கோரிக்
பட்டன. தொழி
தும் இதில் உற்ச
தேசிய தோட்ட
அடையாள வே
வித்தது. 15.10.
நாட்கள் குறைப்
முடிவு தராவிட்
போராட்டத்தில்
டும் என அறிவி
வந்த காலகட்
தொண்டமானும்
தோட்ட மறுசீர
பேச்சுவார்த்தை
விடயங்களில் உ
ளதாகப் பத்திரி
✱ த்திற்கு
வழங்குவது.
✱குறுகிய கா
கைக்கு இடம் அ
✱நடைமுறை
யின் அளவு,
வேலை நேரங்க
ரிக்கக் கூடாது.
✱திருமணம்
ளைப் பெயர்ப்தி
டும்.
✱சமயா சமய
ரமாக்கி வேலை
✱சேவைகால
வழங்கப்பட வே
✱தொழிலாள
துவரும் வரை
வேண்டும். கட்ட
கூடாது.
✱தற்காலிக கு
கரிக்க வேண்டும்
✱பண்டிகை
நினைப்பது
பொதுவான பே
கொடுக்க வேண்
இந்த தோட்ட
அமைப்புக்குழு
இவைகள் நடை
மாறனால் இ.தொ
தப் போராட்ட
அர்த்தம்? அரச
இத்தொழிற்சங்க
யான நிலைப்
என்ன என்பது
ளர் தடுமாற்றம்
ளின் அறிக்கைக
ளும் தொழிலாள
ணமும் அளிக்க

நன்றி - நூலகத்திட்டம்



வேண்டும், இந்த
டன் வாழ வகை
ன்ற கோரிக்கை
நரல் எழுப்பினர்.
அரசுக்குப் பிரச்சி
யும் கால கட்டம்
னியார் நிர்வாகத்
ல் தொழில்பிரச்சி
வேண்டிய நிலை
லையக மக்களின்
கள் திசை திருப்
தாழில் பிரச்சினை
உழல வேண்டிய
ாழிலாளர்களைத்
களுடன் நிறுத்தி,
பற்றிச் சிந்திக்க
அரசாங்கத்தின்
ற்றப்பட்டுள்ளது.
தொழிலாளரின்
க் கொண்டிருப்ப
மக்கப்பட்டுவிட்ட
யினரை நசுக்கி
ண்டுமென்ற ஆட்
திற்கும் அடிகோ

## ...களோடு ...வுகள்:

றப்பை எதிர்த்துப்
டந்து 'ஒரு மாதத்
நாட்கள் வேலை
தெ... ாளரின்
மாதம் 26 நாட்கள்
ட வேண்டும்!'
கள் முன் வைக்கப்
ங்கங்கள் அனைத்
காட்டின. லங்கா
தாழிலாளர் சங்கம்
நிறுத்தத்ததை அறி
கு முன் வேலை
த கம்பனிகள் ஒரு
வேலை நிறுத்தப்
தொ.காவும் ஈடுப
). இவ் அறிவிப்பு
தில் அமைச்சர்
பரது குழுவினரும்
ப்புக் குழுவுடன்
த்திக் கீழ் காணும்
பாடு ஏற்பட்டுள்
செய்தி கூறியது.
நாட்... வேலை
ாற்றுப் பயிர் செய்
பது இல்லை.
உள்ள வேலை
லையின் தன்மை
நிர்வாகம் அதிச
த்துவரும் பெண்
கொள்ள வேண்
ழியர்களை நிரந்த
ங்க வேண்டும்.
கொடுப்பனவுகள்
டும்.
ளுக்கு உரிய வய
லை வழங்கப்பட
ஓய்வு கொடுக்கக்
நிருப்புகளை அங்கீ
பணம் கம்பனிகள்
கொடுக்காமல்,
வார்த்தை நடத்திக்
.
சீரமைப்புக் குழு
ற்றுக் கொண்ட
றைப் படுத்தப்படு
வின் வேலை நிறுத்
விப்பிற்கு என்ன
த்தை ஆதரிக்கும்
ளின் உண்மை
டும் நோக்கமும்
யாமல் தொழிலா
டைந்தனர். இவர்க
பேச்சுவார்த்தைக
ளுக்கு எந்த நிவார
லை.

## கம்பனிகளின் பம்மாத்து:

கம்பனிகளும் தங்களின் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தன. அதற்கான காரணங்களையும் வெளியிட்டன.

* நட்டத்தில் இயங்கிய தோட்டங்களைக் கையேற்றோம்.
* அரசாங்கம் கடன் வசதி செய்து கொடுக்கவில்லை.
* ஐந்து வருடகால ஒப்பந்தம் போதாது.

எனக்கூறியதுடன் 8-11-93ல் ஐலண்ட் பத்திரிகையில் ஒரு புள்ளி விபரமும் வெளியிடப்பட்டது.

20 றப்பர் தேயிலை தோட்டக் கம்பனிகளில்:-

| | கம்பனி கையேற்கு முன் | கம்பனி கையேற்ற பின் |
|---|---|---|
| வருடாந்தம் கொடுத்த வேலை நாட்கள் | | |
| குறைந்தது | 95 | 105:119 |
| கூடியது | 118 | 110 |
| சராசரி | 106 | 110 |
| மாதவருமானம் | | |
| குறைந்தது | 1110/= | 1517/= |
| கூடியது | 1378/= | 1719/= |
| சராசரி | 1238/= | 1589/= |

* இந்த புள்ளிவிபரம் சரியோ, பிழையோ என்பதைப் பார்ப்பதை விட, இதன் மூலம் தாங்கள், அரசாங்க நிர்வாகக் காலத்தைவிடத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்திருக்கிறோம் என்பதைக் காட்ட முற்படுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே கம்பனிகள் தற்போதைய நிலைப்பாட்டில் இருந்து மாறப் போவதில்லை.

இந்தப்புள்ளி விபரத்தின் மூலம் காலம் காலமாக தொழிலாளர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை உணரலாம். தொழிலாளர்களுக்கு மாதம் 3000 ரூபாவிற்கு குறையாமலும் வாழ்க்கை செலவுப் புள்ளி விபரத்திற்கேற்ப சம்பள உயர்வும் வேண்டும் எனத் தொழிற்சங்கங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றும் போது இந்தச் சம்பள விபரம் வஞ்சிக்கப்பட்ட, இலங்கையில் ஆகக்குறைந்த கூலிக்கு தங்கள் உழைப்பை நல்குகின்ற தொழிலாளர்கள் தோட்டத் தொழிலாளர்கள்தான் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

## சம்பள உயர்வுக்கு ஜனாதிபதியே மறுப்பு:

அரசாங்கத்துடனும், கம்பனிகளுடனும் தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்தியும் எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை. அரசாங்கமும் அதனைக் கவனத்தில் கொண்டதாகவே தெரியவில்லை. 'தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு வழங்க முடியாது' என ஜனாதிபதி ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியதன் மூலம் அரசாங்கமும் கம்பனிகளுக்கு சாதகமாக இருப்பதை சூசகமாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் மலையகத்தின் மாபெரும் தொழிற்சங்கத்தின் தலைவர் தொண்டமான் அவர்கள் மக்களிடம் எந்த சமாதானத்தைக் கூற முடியும். 16 வருட காமைமாக அரசாங்கத்தின் அங்கமாக செயற்பட்டு மக்களை ஏமாற்றியதை மறைக்க முடியுமா? தோட்ட மக்களிடம் இனியும் புதியவாக்குறுதிகளை தேர்தல்காலத்தில் கொடுத்து ஏமாற்ற முடியாது என்பதை உணர்ந்தார். மக்களின் வாக்குகளைப் பறித்தெடுக்க அடுத்த துரும்பு அவர் மனதில் அரும்பியது. அதன் ஆரம்பம்தான் எட்டு அம்சக் கோரிக்கைகள்.

## தொண்டாவின் எட்டு அம்சங்கள்.

* தோட்டத் தொழிலாளர்களுக்கு வருடத்திற்கு 300 நாட்கள் வேலை கட்டாயமாக வழங்கப்படல் வேண்டும்.
* தோட்டத் தொழிலார்களின் அனுமதி இல்லாமல் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வேலைகளில் எந்த மாற்றமும் செய்யக் கூடாது.
* தோட்ட வேலைகளுக்கு, அந்த தோட்டத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் குடும்பத்தில் உள்ள இளைஞர் யுவதிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
* தோட்டங்களில் எக்காரணத்தைக் கொண்டும் தொழில் இல்லை என்ற காரணத்தைக் காட்டித், தொழிலாளர்களை இடைமறிக்கக் கூடாது.
* தொழிலாளர்களுக்கு இழைக்கும் அநியாயங்கள் சகலதும் நிறுத்தப்படல் வேண்டும்.
* தோட்டத் தொழில்ர்ளர்களுடைய வீடுகளை அது அமைக்கப்பட்டிருக்கும் இடங்களோடு அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும்.
* எந்த வேலைத்திட்டத்திற்காகவோ அல்லது இடம் பிரித்துக் கொடுப்பாகவோ இருந்தால் இணக்க சபையின் அனுமதியோடு மாத்திரமே வழங்கப்பட வேண்டும்.
* தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பொலீஸ் தோட்டங்களுக்குச் செல்லக்கூடாது.

இந்த எட்டுக் கோரிக்கைகளுமே ஆட்சியாளரோடு சுகம் அனுபவிக்கும் போது நிறைவேற்றியிருக்க வேண்டும். இக்கோரிக்கையில் சம்பள உயர்வு இடம் பெறவில்லை. இதில் ஐந்து, தொழில் துறைசம்பந்தப்பட்டவை. மற்றவை மக்கள் நலத்துறை சம்பந்தப்பட்டவை. இதிலும் நான்கு கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டாலே போதும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

இக்கோரிக்கையை வென்றெடுக்க மத்திய மாகாணசபை அரசியல் சதுரங்கமாகப் பாவிக்கப்பட்டது. காய்கள் நகர்த்தப்பட்டன. அரசாங்கம் பல விடயங்களை நிறைவேற்றச் செவி சாய்ப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிய நேர்ந்தது. ஆனால், அமைச்சர் தொண்டமான் அரசாங்கத்தில் தனது அரசியல் செல்வாக்கை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ள லாவகமாகக் காயை நகர்த்துவதாக எண்ணிக் கொண்டு நகர்த்தினார். தோல்வியைத் தழுவினார். இ.தொ.காவின் உட்பூசலும் வெளிப்பட்டு விட்டது. அரசு - தொண்டமான் முறுகல் அரசியல் முக்கியத்துவம் பெற்றது. அதற்கு அழுத்தம் கொடுத்ததால், தனியார் நிர்வாகத்திற்கெதிரான தொழிலாளர் பிரச்சினை இலைமறை காயாகி விட்டது. தொழிலாளர் போராட்டம் திசைதிருப்பப்பட்டது. தனியார் நிர்வாகத்தின் அராஜகம் தொடர்ந்தது.

கம்பனிகள் முதல் போடாமலே தோட்டங்களை நடாத்தி லாபம் பெறும் நோக்கத்தைக் கொண்டவையாக இருந்தன. ஒப்பந்த காலத்தைக் கூட்டினாலும் முதல் போடத் தயங்குவதாகவே அவர்களின் நடவடிக்கை அமைந்துள்ளது.

தோட்ட அதிகாரிகளின் (Suprintendent) வசதிகளையும் சலுகைகளையும் அதிகரித்து அவர்களின் மாதவருமானமும் உயர்த்தப் பட்டது. (சுமார் 40 ஆயிரம் ரூபா வரை) இதற்காக தோட்ட அதிகாரிகள் கம்பனி கூறுவதை நடைமுறைப் படுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

* தோட்டத்திலுள்ள வளங்களை விற்று (மரங்கள் முதலியவை) அப்பணத்தை கம்பனியின் முதலீடாக வரவு வைக்க வேண்டும்.
* தோட்டங்களில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப புதிய உத்தியோகத்தர்களையோ, தொழிலாளர்களையோ வேலைக்கமர்த்தக் கூடாது.
* தொழிலாளர்களின் தொகையை குறைக்க முயல வேண்டும்.
* தொழிலாளர்களிடம் கூடிய வேலை வாங்கி உற்பத்திச் செலவை குறைத்து, உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டும்
* தொழிலாளர்களின் நல உரிமைகள் எதற்கும் செலவு செய்யக் கூடாது.

கம்பனிகளின் இந்நோக்கம் ஒரு தகவலாக இருந்தாலும் அண்மைக்காலத்தில் தோட்டங்களில் நடக்கும் சம்பவங்கள் இதனை உறுதிப் படுத்துவனவாகவே அமைந்துள்ளன. தனியார் நிர்வாகத்தின் அடக்குமுறை தொடர்கிறது. அதனை எதிர்த்து தொழிலாளர்கள் ஆங்காங்கு போராட்டம் நடத்தினாலும் தொழிற்சங்கமோ தலைவர்களோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இருந்ததை இழக்கும் கைங்கரியம் தொடர்கின்றது.

## மலையகத்தின் இரண்டு வார நாட் குறிப்பு இப்படிச் சொல்கிறது

### பெப்-01

தோட்டத் தொழிலாளர்கள் தமது தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற இரண்டு மூன்று வருடங்களாகியும் அவர்களது சேவைக் காலப் பணம், மஸ்கெலியா பிளாண்டேசன், ஊவா வெஸ்டன் பிளாண்டேசன் போன்ற பகுதிகளில் வழங்கப்படவில்லை என மஸ்கெலியா பகுதி தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களில் அடிக்கடி முறைப்பாடு செய்கின்றனர்.

### பெப்-02:

ஊவா பகுதியில் பதுளை தெமோதர தோட்டங்களில் 55 வயதடைந்த ஆண் தொழிலாளர்களையும் 50 வயதையடைந்த பெண் தொழிலாளர்களையும் கட்டாய ஓய்வு பெறுமாறு தோட்ட நிர்வாகம் நிர்ப்பந்தித்து வருகின்றது.

### பெப்-06

அட்டன் ஆர்னகல் தோட்டத்தைச் சேர்ந்த 45 வயதுத் தொழிலாளியான சுப்பையா என்பவர் கடந்து மூன்று மாதத்திற்கு முன்பு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் கைது செய்யப்பட்டமைக்குச் சொல்லப்பட்ட காரணம், யாழ்ப்பாணத்தில் விவாகம் செய்துள்ள இவரது மகள் சில வாரங்களுக்கு முன் இந்தத் தோட்டத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்து சென்றார் என்பதே.

### பெப்-07

கொட்டகலை நகரில் தீனதயாளன் என்ற பலசரக்குக் கடை வியாபாரி அமைச்சர் தொண்டமானின் பேரன் ஆறுமுகம் தொண்டமானின் அடியாட்களால் கடையிலிருந்து வெளியே இழுத்து வரப்பட்டு தாக்கப்பட்டதாக அறியப்படுகிறது. அத்துடன் பாலித்த ஹோட்டல் உரிமையாளரான சிங்கள முதலாளி ஒருவரும் மேற்படி தாக்குதலில் சம்பந்தப்பட்ட அடியாட்களால் தேடப்பட்டுள்ளார்.

### பெப்-08

பதுளை மடுல்சீமை மாதோவ தோட்டத்தை சேர்ந்த 1500 தொழிலாளர்கள் 8ம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் வேலைப் பளு, குடியிருப்பு வசதி, வேலை நாட்கள் குறைப்பு ஆகிய 14 கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இ.தொ.கா, விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ், செங்கொடிச்சங்கம், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற் சங்கங்கள் இவ்வேலை நிறுத்தத்தில் பங்குபற்றின.

நுவரெலியா மாவட்டத்தில் சமர்செட் தோட்டத்தில் வேலை நாட்கள் குறைப்பு, மற்றும் குடியிருப்புப் பிரச்சினை, வேலைப்பளு அதிகரிப்பு ஆகிய 12அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து 14நாட்கள் முன்னறிவித்தல் கொடுத்து வேலை நிறுத்தத்தில் இன்று முதல் ஈடுபட்டுள்ளனர். இதில் மலையக தொழிலாளர் முன்னணி, இ.தொ.கா, இ.தே.தோ.தொ.சங்கம், தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய தொழிற்சங்கங்கள் பங்கேற்றன.

### பெப்-09

கொழும்பு மரியாய் ஹோட்டலில் நடைபெற்ற கொழும்பு தேயிலை வியாபாரிகள் சங்கத்தின் நூற்றாண்டுவிழாவில் ஜனாதிபதி, தோட்டங்கள் தொடர்பாக தனியார் துறைக்கு வழங்கப்பட்ட 5வருட காலக் குத்தகையை நீண்ட காலக் குத்தகையாக மாற்றியமைத்துள்ளதாக அறிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் பாவா அப்துல் காதரின் அரச தரப்பு தொகுப்புரை மேல் நீதிமன்று நீதிபதி விக்னேஸ்வரனுக்கு இன்று சமர்ப்பிக்கப்பட்டது. காதரின் வழக்குக் தீர்ப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 3ம் திகதி வழங்கப்படும். கடந்த இரு வருடங்களுக்கு மேல் இவ் வழக்கு விசாரிக்கப்பட்டது.

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த பனாவலை வூட்லண்ட் தோட்ட இறப்பர்த் தொழிற்சாலையில் இறப்பர்ப் பால் அரைப்பதை நிறுத்தி விட்டு ஒட்டுப் பால் அரைப்பதை ஆட்சேபித்துத் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்.

### பெப்.11

பதுளை மாவட்டத்தில் அப்புத்தளை தம்பேதனை, அப்புத்தளை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 2,000 தொழிலாளர்கள் ஜனவரி மாதத்திற்கு அரை மாதச் சம்பளம் மாத்திரமே வழங்கப்பட்டதை ஆட்சேபித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதோடு அப்புத்தளைப் பிரிவுத் தொழிலாளர் மரங்களைத் தறித்து பாதைகளைத் தடை செய்ததுடன் ஆர்ப்பாட்டத்திலும் இறங்கினர். அத்துடன் அப்பிரிவுத் தோட்டத் துரையையும் கெரோ செய்ததன் மூலம் தடுத்து வைத்தனர். இதனால் பண்டாரவளைப் பொலிஸ் தோட்டத்திற்குச் சென்று ஆர்ப்பாட்டத்தினை நிறுத்தியது.

### பெப்.13

இ.தொ.கா பொதுச் செயலாளர் எம்.எஸ். செல்லச்சாமி 13ம் திகதி தலவாக்கொல்லை இ.தொ.கா காரியாலயத்துக்குச் சமூகமளித்த போது அவருக்கு வழமையான வரவேற்பு இருக்கவில்லை. மாறாகத் தொழிலாளர்கள் அவரிடம் சரமாரியாக கேள்விகளைக் கேட்டுள்ளனர். இதே தினத்திலேயே இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க உதவிப் பொதுச் செயலாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இ.தொ.கா தலவாக்கொல்லை காரியாலயத்துக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

### பெப்.16

இன்று நுவரெலியா மாநகர சபை மேயராகக் கடந்த சில மாதங்களாகக் கடமையாற்றிய விவேகாநந்தன் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக முன்னாள் மேயராகிய திலக் ஹேரத் மேயராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மீள நியமிக்கப்பட்டதற்கு இனவாத ஆதிக்கமே முக்கிய காரணமென் பரவலாகப் பேசப்படுகின்றது.

### பெப் 17

தலவாக்கொல்லை வட்டகொடைத் தோட்டத்தில் யொக்ஸ்போர்ட், வட்டகொடை மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு ஆகிய தோட்டங்களைச் சோநத 1500 தோட்டத் தொழிலாளர்கள் 17ம் திகதி முதல் வேலை நிறுததத்தில் ஈடுபட்டனா. இவர்கள் வேலைநாட்கள் குறைப்பு, குடியிருப்புப் பிரச்சினைகள் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனா. இவ் வேலை நிறுத்தத்தில் மலையகத் தொழிலாளர் முன்னணி, இ.தொ.கா, இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற்சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நன்றி - நூலகத்திட்டம்



## இயக்க மோதல்களால் இழுபட்ட போராட்டம்!

## எரிட்றியா இன்றொரு தனிநாடு!!

**சிசைரோ**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

EPLF வளரத் தொடங்கியதும் அதனது களத்தளபதிகளுக்கும் வெளிநாட்டு அலுவலகத்துக்கும் இடையில் முரண்பாடுகள் முளைவிட்டன. வெளிநாட்டு அலுவலகம் ஒஸ்மான் சாலி சாபேயின் தலைமையில் இயங்கியது. அரபு நாட்டு அரசாங்கங்களுடன் இவருக்கிருந்த செல்வாக்கும் பணபலமும் எந்த ஒரு விடுதலை இயக்கத்தையும் எரிட்றியாவில் ஆக்கவும் அழிக்கவும் கூடிய வல்லமையை இவருக்கு வழங்கியிருந்தன. இந்த இயக்கத்திற்குள்ளும் புகைச்சல்கள் 1975 இல் ஏற்பட்டன. அதிருப்திக் குழுவின் இரு தலைவர்கள் ஒன்றரை வருடகாலக் காவலில் வைக்கப்பட்ட பின்னர் ஒழித்துக் கட்டப்பட்டனர். அரபுநாடுகள் தலையிட்டுச் சமரசம் செய்ய முன்வராமை பெரும்சாபக் கேடாயிற்று. EPLF இன் படையணியில் 35 ஆயிரம் வீரர்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. மத்தியகுழுவும் அரசியற்குழுவும் தலைமைதாங்கி நடாத்தும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட இயக்கமிது.

இதன் தலைமையில் மார்க்ஸியச் சிந்தனையாளர்களே அதிகமாக உள்ளனர். தேசிய ஜனநாயகப் புரட்சியை இது வேண்டி நிற்கிறது. ரோம், நியூயோர்க், றியாட், அல்ஜியர்ஸ், குவைத் போன்ற இடங்களில் எல்லாம் EPLF இன் அலுவலகங்கள் உள்ளன. இதனுடைய வானொலிச் சேவை அம்காரிக், அரபிக், ரிக்ரின்யா மொழிகளிலும் நிகழ்ச்சிகளை வழங்கி வந்தது. அண்மைய மாகாணமான ரிக்ரேயின் மக்கள் புரட்சி முன்னணியுடனும் நிறையத் தொடர்பு வைத்திருந்தது. எதியோப்பியாவிலுள்ள ஏனைய இடதுசாரிக் குழுக்களுடனும் (போராளிகளுடன்) இதற்குத் தொடர்புகளுண்டு.

ELF-EPLF யுத்த நிறுத்தம் 1975 இல் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டேன். ஆனால் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட EPLF தலைவர் ஒஸ்மான் சாலி சாபே முறையான பிரதிநிதியல்ல•எனவும் தங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை எனவும் கூறி EPLF ஒப்பந்தந்தத்தை முறித்துக் கொண்டதுடன் சாலியையும் இயக்கத்தை விட்டு வெளியேற்றியது. உடனடியாக அவர் PLF என்ற புதிய இயக்கத்தை ஆரம்பித்து அதனை ELF உடன் ஒருமைப்பாடுகாண வைத்தார். மத்திய கிழக்கிலிருந்து அவருக்குப் போதிய நிதி உதவி வந்த வண்ணமே இருந்தது. சூடானில் இருந்த எரிட்றியா அகதிகளிலிருந்தும் ஏற்கனவே ELF- EPLF என்பவற்றில் இருந்து வெளியேறியோரிலிருந்தும் ஆட்களைத் திரட்டினார். எரிட்றியாவின் முக்கிய பிரசைகளும் முன்னாள் படைவீரர்களும் இவர் பின்னால் திரண்டனர். இவரது தலைமைக்கு எதிரான குழு இதே பெயருடைய முன்னணியுடன் புரட்சிச் சபை ஒன்றின் பெயரையும் சேர்த்து செயற்படத் தொடங்கிற்று. ELF- EPLF (RC)என்ற இக்குழுவின் தலைவர்கள் பின்னர் கொல்லப்பட்டு விட்டனர். இக்குழுவிற்கு பாக்தாத்தில் இன்னும் அலுவலகம் உள்ளது.

EPLF ம் ELF ம் பெயரளவிலேயே ஒன்றுபட்டு இருந்தன எனலாம். ஏனெனில் நடைமுறையில் EPLF இன் கருத்துக்களை ELF அனுசரித்து நடக்கவில்லை. போராளிகளை பொறுத்தளவில் முதலில் ஓரணியில் அவர்களைத் திரட்டுவது. ஒரு தளபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது - ஆனால் கொள்கை வேறுபாடுகள் அகற்றப்படும் வரை- கெரிலாக்களை முற்றாக ஒன்றிணைப்பது அவசியமில்லை என்பது EPLF இன் கருத்து. அதாவது சேர்ந்து போராடுவோம்- இராணுவ நோக்கில் அரசியல் நோக்கில் பேதங்கள் இப்போதைக்கு அப்படியே இருக்கட்டும் என்ற நிலைப்பாடு. ஆனால் ELF எல்லா மட்டங்களிலுமான ஒன்றிணைப்பை வலியுறுத்தியது. சாலி சாபேயின் கருத்தில் 'சுதந்திரத்துக்கு முன்பாக கருத்தியல்வாத வினாக்களை முன்வைப்பது தவறான முன்னுரிமை' என்பதாகும்; தனது எதிர்ப்பாளர்களில் அனேகர் மார்க்ஸியவாதிகள் என்பதால் அவர்களுக்கு விட்டுக் கொடுத்தால் அரபு உலகிலிருந்தும் மேற்குலகிலிருந்தும் தான் பெறும் ஆதரவு குன்றிவிடும் என்பது அவரின் அச்சம் ஆகும். 'திருவாளர் பணப்பை' என்று நாமமிடப்பட்ட இவர்தான் இழுத்த இழுப்புக்கெல்லாம் இயக்கங்கள் இழுபட வேண்டுமென நிர்ப்பந்தித்து வந்தார்.

### இயக்க மோதலும் எதிரியின் மோதலும்

மன்னராட்சி அகற்றப்பட்டு இராணுவம் பதவிக்கு வந்ததும் (1975) தற்காலிக இராணுவ நிர்வாகக்குழு ஒன்றே ஆட்சியைப் பொறுப்பேற்றது. (PMAC) இதனை அம்காரிக் மொழியில் 'டேர்க்' என்பர். டேர்க்கின் அபிப்பிராயத்தில் எதியோப்பியாவில் புரட்சி வெற்றிகரமாக நிறைவேற எரிட்றியப் பிரச்சினைக்கு முடிவு அவசியமாகப்பட்டது. நாட்டில் சிவப்பு புரட்சி செய்வதாக குழுவினர் பறை சாற்றினர். சோமாலியாவின் ஆதரவுடன் ஒகாடன் மாகாணத்தில் பிரிவினைக்கிளர்ச்சி வெடித்தது. சோமாலியா இராணுவத்தின் நேரடிப் பங்களிப்பு இருந்தமையால் எதியோப்பிய இராணுவ ஆட்சியாளர்கள் அமெரிக்காவிடம் உதவி கேட்ட போது இவர்களது 'சிகப்புப் பேச்சு' காரணமாக உதவி கிடைக்கவில்லை. இதுவரை மேற்குலகின் கட்டுப்பாட்டில் இருந்த நாடு தற்போது சோவியத்திடம் கையேந்தியது. மொஸ்கோவுடன் உடன்படிக்கை கைச்சாத்தானதும் 14,000 கியூப வீரர்கள் வந்து சேர்ந்தனர். இராணுவப்பலத்தால் எல்லாக் கிளர்ச்சிகளையும் அடக்குவதென 'டேர்க்' முடிவு செய்தது.

புரட்சி என்று பேசிக் கொண்டாலும் இராணுவத்தில் களையெடுப்பு நடைபெற்றது. எரிட்றியரான இராணுவத் தலைவர் கொல்லப்பட்டார். அரசியல் தீர்வு பற்றி பேசியோர் அப்புறப்படுத்தப்பட்டனர். இராணுவம் தனக்குள் மோதிய நேரத்தில் கெரிலாக்கள் தம்மைப் பலப்படுத்தினர். இராணுவத்திற்கு உற்சாகம் அளிப்பதற்கென்றே 40,000 விவசாயிகளை ஆயுதம் வழங்கி களத்துக்கு அனுப்பியது இராணுவ ஆட்சி. அரபு நாட்டவர்க்கு எதியோப்பியாவை விற்க முனையும் எரிட்றியரை கொல்லுங்கள்' என இவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இவர்கள் தாக்குதலை ஆரம்பிக்க முன்னரே கெரிலாக்கள் இந்த 40000 பேர் மீதும் திடீர்த் தாக்குதல் தொடுத்தனர். பின்வாங்க முனைந்தவர்களை அவர்களின் பின்னே நின்ற எதியோப்பிய இராணுவமே சுட்டுக் கொன்றதை தான் கண்டதாக சண்டே ரைம்ஸ் (லண்டன்) நிருபர் யொன் ஸ்வெயின் எழுதியுள்ளார். இது நடந்தது மே 1976இல். 1000 பேர் களத்திலேயே மடிய 500 பேர் எரிட்றியக் கெரிலாக்களினால் சிறைபிடிக்கப்பட்டனர். 10,000 பேர் உடனேயே படையை விட்டு ஓடிவிட்டனர்.


எரிட்றியாவின் இரண்டாவது பெரிய நகரமான கெரனைக் கைப்பற்ற நடந்த போரில் EPLF இரண்டாயிரம் எதியோப்பிய வீரர்களைக் கொன்றொழித்தது. இரு துறைமுகங்களுக்கும் இடையிலான வீதியைத் தகர்ப்பதற்கு மட்டும் 600 இராணுவ வீரரைக் கொல்ல வேண்டியேற்பட்டது இவ்வியக்கத்துக்கு. இங்ஙனம் EPLF இன் அதிரடித்தாக்குதல்கள் தொடர சோவியத்தில் இராணுவத் தளபாடங்களுடன் ஆலோசகர்களும் அடிஸ் அபாபாவுக்கு வந்து குவிந்தனர். மிக் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், டாங்கிகள், கப்பல்கள் அனைத்தையும் சோவியத் அனுப்பி வைத்தது. இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதாகவும் EPLF குற்றம் சாட்டியது. சோவியத் விநியோகித்த 'booby bombs' பிரசித்தமானது. விளையாட்டுப் பொருட்கள் போல தயாரித்து எரிட்றியா முழுவதிலும் வீசப்பட்டது இந்த விளையாட்டுக் குண்டு. அமெரிக்கத் தயாரிப்பான Cluster bombs இஸ்ரேலினால் இராணுவத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒரு கட்டத்தில் சூடான் ஜனாதிபதி ஜாபர் நிமெய்ரி தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றி மத்திய அரசாங்கத்தை ஆதரிக்கும் சமிஞ்சையை காட்டினார். இதன் உச்சக்கட்டமாக, சூடானின் எல்லைகள் 1979 இன் பிற்பகுதியில் எரிட்றியர்களுக்கு மூடப்பட்டுவிட்டது.

1979 டிசம்பரில் EPLF தான் பேச்சுவார்த்தைக்கு தயாரென வானொலிச் சேவையில் குறிப்பிட்டது. ஆபிரிக்க நாடுகள் 'கட்சிமாற்றம்' நடாத்துவதை கவனத்தில் எடுத்து செய்யப்பட்ட அறிவிப்பு இது. இக்காலப்பகுதியில் கிழக்கு ஐரோப்பிய நாட்டு இராணுவ ஆலோசகர்களுடன் தலைநகருக்கு வந்துவிட்ட இராணுவம் இன்னொரு பெருந்தாக்கு தலைத் தொடுத்தது. ஆனாலும் படையெடுப்பு முறியடிக்கப்பட்டுவிட்டது. எரிட்றியாவின் எதிர்காலம் பற்றி தீர்மானிக்க சர்வதேச கண்காணிப்பில் சர்வசன வாக்கெடுப்பை நடாத்த வேண்டுமென EPLF 'இறங்கிவந்து' வேண்டுகோள் விடுத்தது. ஆனாலும் பயனில்லை.

### எரிட்றியப் போரின் சர்வதேசப் பரிமாணம்

இராணுவ அரசாங்கத்துக்கு முழுதாக உதவிய போதிலும் சோவியத் இருதரப்பையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துவதற்கும் முயற்சித்தமையை குறிப்பிட்டே ஆக வேண்டும். இதையொத்த ஒரு நிலைப்பாட்டை மறுபுறமாக இந்தியா ஈழப்போராளிகள் விசயத்தில் கடைப்பிடித்தமையைக் காணலாம். எரிட்றியப் போராளிகளின் பின்னணியில் இருந்த அரபு மித வாதிகள் சமரசத் தீர்வையிட்டு அச்சத்தைக் கொண்டமை சோவியத், கியூபா என்பன முழு எதியோப்பியாவையும் வசப்படுத்தி விடும் என்று கருதியமையினாலாகும். EPLF, ELF, ஒஸ்மான் சாபேயின் ELF- PLF என்ற மூன்றையும் ஒருமித்த செயற்திட்டத்திற்கு வருமாறு அரபுலகு வற்புறுத்தியது. எதியோப்பியாவுடன் இணைப்பாட்சி முறையில் தொடர்புடையதாக சுயாட்சியைப் பெறுவதே இலக்காக இருக்கட்டும் என்று இவர்கள் அறிவுரையும் வழங்கினர் போராளிகளுக்கு.

ஆரம்பத்தில் சுதந்திரப் போரை ஆதரித்த சோவியத் பின்பு சமஸ்டி அமைப்பு போதுமென நிலையை மாற்றி, இறுதியில் மார்க்ஸிஸ்ட் அரசுகள் நட்புறவுடன் இருந்தால் போதும் என்ற நிலைக்கு இறங்கி வந்துவிட்டது.




அதாவது எதியோப்பியாவை ஏனைய சோசலிஸ நாடுகளுடன் இணக்கி வைப்பதே முக்கிய நோக்கென சோவியத் கருதியது. இவ்வகையில், இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சி மூலமான செல்வாக்கைப் பாவித்து ELF இயக்கத்தை 'டேர்க்' உடன் சமரசப்படுத்த சோவியத் முயன்றது. அகதிகள் பிரச்சினைகளில் சிக்கிவிட்ட சூடானும் தனது சொந்தப் பாதுகாப்பு கருதி அடிஸ் அபாபாவுடன் இணக்கம் காணப்படுவதையே விரும்பிற்று. இது EPLF மீது அழுத்தம் பிரயோகித்து பேச்சுவார்த்தையை நடாத்தும்படி தூண்டியது. 1980 மார்ச் அளவில் மூன்று இயங்கங்கள் மீதும் பேச்சுவார்த்தை நிர்ப்பந்தத்தை வெளிநாடுகள் பிரயோகித்தன.

சூடான் அதிபர் தனது நாட்டில் உள்ள தீர்வுப்படி (இத்தீர்வை எதியோப்பியாவின் முன்னைய தலைவர் மத்தியஸ்தம் செய்து வந்திருந்தார் என்பது கவனிக்கப்பட வேண்டும்) தென் சூடானிலுள்ள சுயாட்சிப் பிராந்தியம் போல எரிட்றியாவும் இணைப்பாட்சி அலகை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பது அதிபர் நிமெய்ரியின் யோசனை. ஆனால் EPLF மத்திய அரசை சாடியது. ''சமாதானத்தீர்வு என 'டேர்க்' குறிப்பிடும் போதிலெல்லாம் அது எமது எதிர்பியக்கத்திற்கான சர்வதேச ஆதரவை தடுக்கவும் இராணுவரீதியல் வலுப்பெற அவகாசம் பெறுவதையுமே நோக்காகக் கொண்டுள்ளது'' என அறிக்கை வெளியிட்ட EPLF பேச்சுவார்த்தைக்கு சில நிபந்தனைகளையும் விதித்தது. ''எரிட்றியப் பிரச்சினையை சமாதான வழியில் தீர்ப்பது; பேச்சுவார்த்தையை எவ்வித முன்நிபந்தனையுமின்றித் தொடங்குவது, பிராந்தியச் சுயாட்சி என்ற கருத்தேற்பைக் கைவிடல்; EPLF, ELF என்பவற்றின் கூட்டுயர் அரசியல் தலைமையுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல் - என்பனவே EPLF கூறிய தேவைப்பாடுகள்.

இதற்கிடையில் ELF குழு சூடான் சென்று பேச்சுவார்த்தை நடாத்தி சூடானின் உண்மை நிலையை அறிய முடிந்தது. அதே வேளையில் ELF - 'டேர்க்'குடன் இரகசியச் சந்திப்புக்களை நடாத்தி வருவதாக தகவல்கள் வரவே மற்றைய இரண்டுமான EPLF உம் ELF- PLF உம் சந்தேகக் கண்ணுடன் ELF ஐ அவதானித்து வந்தன. இதன் தலைவர் அகமட் நசார் முன்னைய இரு இயக்கங்களையும் துடைத்தொழிக்கும் கட்டளையைப் பிறப்பித்தார் என்பதும் வெளியாயிற்று. அகமட் நசாரின் செல்வாக்கு அரபுநாடுகளில் இருந்தாலும் அவர் சோவியத்தின் பால் ஈர்க்கப்பட்டார். ''சோவியத்தின் கட்டுப்பாட்டில் ஒரு குடியேற்ற நாடாக எதியோப்பியாவின் கீழ் எரிட்றியா இருக்க வேண்டிவரும்'' என இம்முயற்சிகளைக் கண்டித்தார் EPLF-PLF தலைவர் சாலி சாபே. பேச்சுவார்த்தை மூல[illegible]ர்வை ஆதரிக்கிறோம் என்பதன் '[illegible]ருள் எதிரியுடன் சமரசம் ஆகிவிட்டோம் என்பதல்ல என ELF பதிலளித்தது.

ஆனாலும் உண்மை நிலை வேறே. ELF சோவியத் வலையில் வீழ்ந்து விட்டது. 'வெளியாரில் தங்கியிருப்பதன் தவிர்க்க முடியாத விளைவுக்கு இது நல்ல உதாரணம். ஆரம்பத்தில் ELF க்கு முழு ஆதரவும் வழங்கியது ஈராக். சோவியத் எதியோப்பியாவின் உதவிக்கு வந்த போது எரிட்றியாவுக்கு வேண்டுமானால் மொஸ்கோவையும் உதறி விடுவேன் என ஈராக் அச்சுறுத்தியது. அத்தகைய ஈராக் தற்போது ELF ஐப் கைவிட்டுவிட்டது. காரணம் என்ன? சிரியத் தலைநகருக்கு சென்ற நசார் எதியோப்பிய, சோவியத், இத்தாலிய கம்யூனிஸ்ட், தென் ஜேர்மன் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடியதே வெளிக்காரணம்; இருப்பினும், சகோதரர்களாக இருந்த சிரியாவும் ஈராக்கும் 'பாத்' கட்சிக்குள் ஏற்பட்ட கொள்கைப் பேதங்களால் மோதிக் கொண்டனர். தீவிர இஸ்லாமியப் போக்கை கடைப்பிடிக்க விரும்பாத ஈராக்கை கைவிட்டு ELF சிரியாவிடம் தஞ்சமடைந்தது. இதனால் ஏற்பட்ட ஆத்திரத்தால் ஈராக் மூன்றாவது இயக்கமான ELF -PLF ஐ ஆதரிக்கத் தொடங்கியது. ஈராக் - சோவியத் உறவும் முறுகல் அடைந்தது. சோவியத் தனது கவனத்தை சிரியாவின் பக்கம் செலுத்தியது. தற்போது ELF க்கு ஈரானின் ஆதரவும் கிடைக்கக்கூடியதாக இருந்தது. சோவியத் முயற்சியினால் எதியோப்பியாவும் சிரியாவும் உறவைச் சீராக்கிக் கொண்டன.

போர்க்களத்தில் எதனையுஞ் சாதிக்க முடியாத ELF இத்தகைய இராஜரீகச் சுழியோட்டங்களினால் தன்னைத் தக்க வைக்க முயற்சித்தது. ஆயினும் அதனது இராணுவ பலம் தேய்ந்து செல்வதை மறைக்க முடியவில்லை. ஆனால் களநிலையில் இந்தச் சமரசங்களினால் அரசுக்கு எவ்வித பிரயோசனமுமில்லை. EPLF இன் போராளிகளை ஊடுருவிச் செல்ல முடியாத நிலையில் அரசுப்படைகள்.

(அடுத்த இதழில் முடியும்)

நன்றி - நூலகத்திட்டம்



# இருள் பரவுகிற வேளை

சண்டை தொடங்கி இரண்டோ மூன்று மாதங்களின் பின்னர் முளைக்கத் தொடங்கிய அகதி முகாமொன்றுக்குள் என்னையும் நான் எப்படியோ நுழைத்துக் கொண்டேன். உடுத்து உண்பதிலிருந்து இழப்பது வரையும் என்னிடம் எதுவுமேயிருக்கவில்லை என்னைத்தவிர, யுத்தத்தின் கோர முகங்களுக்கு முகம் கொடுக்க முடியாத, இலட்சக்கணக்கில் வாரியிறைத்து ஐரோப்பிய நகரங்களுக்கு தப்பியோட முடியாத பணவலிமையற்ற அப்பாவி மனிதர்களை உள்வாங்கிக் கொண்டது அந்த அகதி முகாம்.

மார்கழி வெள்ளத்தில் கரைகளில் கிடந்து அடிபட்டோடும் குச்சிகளையும், சருகுகளையும் போல் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு துயரங்கசியும் அனுபவங்கள், சொந்த மண்ணையும் பிரியமானவர்களையும் விட்டுப்பிரிந்து வேற்றிடமொன்றில் நுழைந்த அவஸ்தை அன்னியப் பார்வைகள், போரும் வாழ்க்கையும் எவ்வளவு முரட்டுத்தனமானது என்பதை இங்குள்ள ஒவ்வொரு மனிதரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

எல்லாம் நேற்றோ இன்றோ போல், இந்த நாட்கள் எத்தனை விரைவாய் கரைந்துவிட்டது. மூன்று வருடங்களை இன்னும் சில நாட்கள் முழுமையாய் விழுங்கிவிடும். சொந்த பந்தங்கள் உரிமையுள்ள உறவுகள் என்பிரியமான ஊர் இதெல்லாவற்றையும் விட இங்குள்ள எல்லோர் முன்னுமுள்ள பாரிய பிரச்சினை மற்றைய அகதிமுகாம்களைப் போல் இந்த அகதிமுகாமையும் வன்முறையை பிரயோகித்து மூடிவைத்துவிட்டால், எந்நேரமும் மூடப்படலாம். இங்குள்ள எல்லோரின் அச்சம் கலந்த வாழ்வின் ஒவ்வொரு அடியும் அதை நினைக்கும் போது எங்கள் ஊரில் புதைந்து போய்க்கிடக்கும் பொறிவெடிகளைவிட பயங்கரமான அச்சுறுத்தலாயிருக்கிறது.

ஊருக்கு போவதா? அங்கும் ஏதாவது ஒரு அகதிமுகாமுக்குள் எத்தனை காலம் அடைபட்டு வாழ்வது இல்லையேல் ஏதாவது ஒரு ஆமிக்காம்புக்குள் அதுவுமில்லாவிட்டால் எவனெவன்ட துவக்குக்கு பதில் சொல்ல வேணுமோ இப்படியே எத்தனை காலம் இருப்பிடமில்லாத வாழ்வாய் வினாக்களும் விடை தெரியாத வாழ்க்கையுமாய் வாழ்வதென்பது.... செத்துத்தொலையும் வரை விரலில் அப்பிய பீய்மாதிரி நாறிக் கொண்டேயிருக்கிறது.

விடிந்து வெகுநேரமாகிவிட்டது. முகட்டை நிமிர்ந்து பார்த்தபடி இன்னமும் என்னுடைய படுக்கையில் புரள்வதும் நிமிர்வதுமாய் நான், காத்தான்குடி மார்க்கட்டைப் போல் களபுளவென இரச்சலால் நிரம்பி வழிந்தது. ஆண்களும், பெண்களும், குமர்களும், குழந்தை குட்டிகளுமாய் எழுநூற்றிஐம்பது பேரை இந்தச் சின்னக்கட்டிடமும் இரண்டு கிடுகுக் கொட்டில்களும், இரண்டு கக்கூசும் எப்படித்தான் இவ்வளவு நாட்களாய் இந்த மனிதர்களை தாங்கிக் கொண்டிருக்கிறதோ யாருமே அறியாதது எங்களைத்தவிர.

விடிந்து பொழுதாகி இரவு வெகுநேரம் வரை ஓயாத இரச்சல் எப்போதாவது சில நேரங்களில் கப்சிப்பெனவும் இருக்கும். வருபவர்களையும் வாசலின் முன் நிற்கும் பச்சைஜீப்பையும் பார்க்கும் போது கொஞ்சம் பயம் தான்; இல்லையென்றால் சொல்லித்தான் தெரியவைக்க வேணுமென்றில்லை. ஊரை மிதித்த பழைய பஜனைகள் தான், இது இங்கு எல்லோருக்கும் சகஜமான வாழ்க்கையாகிப் போய்விட்டது. வாழ்க்கை என்றால் இப்படித்தான் இருக்க வேணும் என்ற சமூகநோக்குக்கு அப்பாற்பட்டு, யுத்தத்தால் கலைக்கப்பட்டு, வறுமைநோய் பீடிக்கப்பட்டு, இதுவே வாழ்வாகிப் போன மனிதக்கூட்டங்களின் உறைவிடம் தான் இந்த அகதிமுகாம்.

மழைநேரங்களில் தூற்றலும் தூவானமும், வெயில் காலங்களில் வெக்கையும் புழுக்கமும், வியர்வையும் மனிதநெடியுமாய் ஒரே நாற்றமெடுக்கும். இந்த அகதிமுகாம்கள் யுத்தங்களின் சாபக்கேடுகளாய்த் தானிருக்க வேணும். எங்களைப்போன்று எதுவுமற்ற பரிதாபத்துக்குரியவர்களின் தற்காலிக தங்குமிடம் நிரந்தரமாகிப் போகின்ற துர்ப்பாக்கிய வாழ்நிலை.

இது ஒரு நீண்டமண்டபம். நாங்கள் அகதிகளாய் ஓடிவந்து அடைக்கலம் தேடமுன்பு இது ஒரு கலை அரங்கமாய் இருந்திருக்கவேணும். நாட்டிய நாடக அரங்கேற்றங்களை குதூகலமாய் மனிதர்கள் கூடியிருந்து கண்டுகளித்த இந்தக் கட்டிடம் இன்று எங்களின் கூக்குரல்களை தாங்கிக் கொண்டு எத்தனை சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறதோ? புயலில் அடிபட்டு கரை சேர வழிதெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு கப்பலைப் போல் இந்தக் கட்டிடமும் நாங்களும் எங்களிலிருந்து இந்த உலகமும் மனிதர்களும் எவ்வளவு தான் மாறிவிட்டார்கள்.

எழும்ப மனசில்லாமல் படுக்கையில் இன்னமும் புரண்டுகொண்டிருந்தேன். கொஞ்சம் காலைக் கையை தூக்கி வீசினால் போதும் அது ஒரு ஆக்கிரமிப்புக்கு சமன். எங்களுடைய எல்லையின் மொத்தப்பரப்பளவு ஏழு அடி நீளமும் நான்கு அடி அகலமும். சில நேரம் நீங்கள் ஏதாவது நாவலில் அல்லது சிறுகதையில் படிக்கிற மாதிரிக் கூட தோன்றலாம் உண்மை அதுவல்ல. பொதுவுடமை பேசியவர்களால் நிர்வகிக்கப் படுகின்ற எங்களின் உண்மை நிலவரம் தான் இது. இதை மீறினால் அது அதர்மம். பக்கத்து எல்லைக்காரர்கள் திட்டித் தீர்ப்பார்கள், வாங்கிக் கட்டிக் கொள்ள வேணும். என்னுடன் இன்னும் இருவர் உதிரிகளாய்ப்போன எங்களின் இருப்பிடம் தான் இது.

இந்த நீண்டமண்டபத்தை ஒவ்வொரு குடும்பத்துக்கும் சிறுசிறுதுண்டுகளாக பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பமும் தங்கள் தங்கள் சட்டிபெட்டிகளாலும் காட்போட் மட்டைகளாலும் தங்கள் தங்கள் எல்லைகளை நிர்ணயித்து சுத்தப்படுத்தி பலப்படுத்தி வைத்திருப்பார்கள். இதற்குள் தான் எத்தனை உறவுகள். கணவன், மனைவி, பிள்ளைகள், குழந்தை குட்டிகள், மாமன், மாமி என்ற உணர்ச்சியற்ற உணர்வுகளில் வாழ்க்கையின் எந்த சுவராசியமுமற்ற இந்த மனிதர்களை எப்படியெப்படி புரட்டியெடுக்கிறார்கள்.

வெயிலின் அகோரம் வெடித்து வெகுநேரமாகிவிட்டது என்பதை திரும்பவும் நினைவுபடுத்தின. நேரத்தோட எழும்பி எந்த நாட்டைத்தான் பிடிக்கப் போறன். திருமபத் திரும்ப புரண்டு நிமிர்ந்தேன். வயிற்றுக்குள் தான் ஏதோ மாதிரி இருந்தது. அது தான் வேற என்ன வயிற்றை ஒருதடவை தடவி விட்டு எழும்பி சாறத்தையுயர்த்திக் கட்டினேன். படுக்கையை தூக்கி மடித்தேன். எண்ணையும் பிசகும் படிந்து அழுக்கேறிய நசல்க் கோழியைப்போல் உறுதியும் உரமுமில்லாத அந்தக் காட்போட் மட்டயை மடித்தெடுத்தேன். இது தான் இங்குள்ள பெரும்பாலானவர்களின் படுக்கை.



கக்கூஸ்ப்பக்கம் தலையை நீட்டிப் பார்த்தேன். நீண்டவரிசை. நிறையப்பேர் காத்துக் கொண்டு பீடியை இழுத்து புகையைக் கக்கியபடி. இன்னும் பலர் வயிற்றைத்தடவியபடி, வாயில் வந்ததையெல்லாம் வெளியே கொட்டியபடி, பிரம்பம் பற்றைக்குள் சுருண்டுகிடக்கும் சாரப்பாம்பைப்போல் அந்த வரிசை மெல்ல மெல்ல அசைந்து அசைந்து நகர்ந்து கொண்டிருந்தது. இந்த மனிதர்க்கெல்லாம் தங்கள் கழிவுகளை வெளியேற்றிக் கொள்வது கூட எவ்வளவு கடினமானதொன்றாக இருக்கிறது.

இந்த வரிசையில் பேர்ய் நின்று தாக்குப்பிடிப்பதென்பது என்னைப் பொறுத்தவரை சாத்தியப்படக்கூடிய ஒன்றல்ல. என்னதான் செய்யலாம் கடற்கரைப் பக்கமும் போய்க்குந்த முடியாது. பொலிஸ்காரன் கண்டானென்டால் தூக்கிக் கொண்டு போய்விடுவான். இனி கோடு கச்சேரி என்று ஏறி இறங்க எங்களுக்கு யாரிருக்கா? இந்த சாதாரண ஒரு விடயத்துக்காக, என்னால் இனியும் தாக்குப்பிடிப்பதென்பது கஸ்ரமாகிக் கொண்டே வந்தது. திரும்பவும் அந்தக் காட்போட் மட்டையை உதறிவிரித்து விழுந்து படுத்துக் கொண்டேன்.

ரவிவர்மன்

ஒவ்வொருவரும் எதையெதையோ பேசி, சிரித்து, திட்டித்தீர்த்துக் கொண்டிருந்தார்கள். வயதுபோன கிழடுகள் கிழக்கிலும் வடக்கிலும் இருக்கும் தங்கள் ஊர்களைப்பற்றி, உறவுகளைப்பற்றி அந்திநேரங்களில் வெயில்காலங்களில் குந்தியிருந்தபடி கிழட்டுக் கதைகள் பேசும் அந்த அரச, வேம்பமரங்களின் சுகங்களைப்பற்றி இந்த யுத்தத்தின் வெட்டுமுகங்களில் தெறித்து வீசப்பட்ட மனிதர்களைப்பற்றி இனி வரும் எந்த நாளில் ஊரின் மேல் சுதந்திரமாய் ஊர்ந்து திரியலாம் என்ற ஆதங்கத்தில் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு முகங்களின் மேலும் வெறுமை அனலாய் கனந்து கொண்டிருந்தது. வார்த்தைகள் சூடாகவே தெறித்துக் கொண்டிருந்தன.

கவலைகளை மறந்துபோன சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை பிடித்து முடியைப் பிரித்து பேன் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். வேறு சில குழந்தைகள் கிடைத்த கிடைத்த இடங்களில் விளையாடிக் கொண்டிருந்தன. திருவிழா[illegible]ங்களில் எங்கட ஊர் கோயிலைச் சுற்றி நிரம்பிவழியும் பெட்டிசட்டிக் கடைகளையும் சனக்கூட்டத்தையும், காதைக்குடையும் இரச்சலையும் நினை[illegible]வனவாய் இந்த அகதிமுகாமும் மனிதர்களும்.

மழைநாட்களில் கிடைத்த கிடைத்த துண்டுகளால் போர்த்திக் கொண்டு குழந்தைகுட்டிகளோடு எல்லோருமாய் குந்தியிருந்த படியும், காலையும் கையையும் முழங்காலுக்கு முட்டுக் கொடுத்தபடியும் கோழித்தூக்கம் போடுவது வெளியார் யாராவது பார்த்தால் இதயத்தில் எங்காவது ஈரம் கசியும். யுத்தத்ததுக்கு நேர்சமனாய் நுளம்புகளின் தொல்லை. பொழுதுபட்டால் போதும் பாட்டம்பாட்டமாய் வந்து படாதபாடு படுத்திவிடும். எங்கட உடம்புகளில் இரத்தம் கூட இல்ல. என்ன தான் இன்னும் இருக்கிறதென்று வந்து குத்திக் குத்திக் குடிக்கிறதோ தெரியாது. எல்லாமே இரக்கமற்ற பாச்சல்கள் தான்.

''மச்சான் எழும்படா இன்னும் என்ன தூக்கம்'' அவன் தான் என்முன் இரண்டுகைகளிலும் சோற்றுக் கோப்பைகளை ஏந்தியபடி காலைக்கெந்தியபடி நின்று கொண்டிருந்தான். எனக்கு திரும்ப தூக்கம் வந்ததே தெரியவில்லை. அவ்வளவு தூக்கம்.

சுருட்டி எழும்பியபடி அவனின் கைகளிலிருந்த சோற்றுக் கோப்பைகளை வாங்கிக் கொண்டேன்.

காலைக்கெந்தியபடி நிலத்தில் கையையூன்றி கீழே சரிந்தான். சாறத்தையுயர்த்தி முழங்காலுடன் பொருத்தியிருந்த அந்த ஒற்றைக் காலைக்கழட்டி ஒரு ஓரத்தில் வைத்துக் கொண்டான். ''மச்சான் முகத்தக்கழுவிக் கொண்டு வாடா சாப்பிடுவம்'' அவனும் இந்த அகதிமுகாமும் எனக்குள் தணலாய் நகர்ந்தன. சிரித்த முகத்துடன் குழந்தைகள் அருகிலும் கொஞ்சம் தள்ளியும், கவலையைப்பற்றி கவலைப்படாத அவன், சமாந்தரமாய் கிடக்கும் சமுத்திரத்தின் ஆழத்தைப் போல் இந்த அகதி முகாமுக்குள் தான் எத்தனை சோகங்கள் அடைபட்டு காத்துக்கிடக்கிறது.

அவனுக்கும் எனக்கும் கிட்டத்தட்ட ஒரேவயது தானிருக்க வேணும். இன்றைக்கு ஆறுவருடங்களுக்கு முன் அவனுடைய ஒற்றைக் காலை இழந்து போனவன். அவன் தன் காலை இழந்த போது அவனுக்கு பதினெட்டு வயது வாழ்வில் இளமை முளைத்தெழும்பி இந்த உலகத்தையும் இளமையின் ஆரம்பங்களையும் ரகசியங்களையும், இனிமையையும் வாழ்வின் முழுமையான சுகங்களையும் கடித்துக் கொறிக்க வேண்டிய வயதில் தன்னுடைய காலை இழந்து போனவன். பழகுவதற்கு இனிமையானவன் சிங்கிஸ் ஐஸ்மாத்தவ்வின் இலக்கியத்தைப் போல் அவனுடைய ஒவ்வொரு வார்த்தைகளும் மென்மையாய் ரம்மியமாய் அழகுற சுவையுடன் யதார்த்தமாய் இருக்கும். நாளெல்லாம் அவனுடைய பேச்சைக்கேட்டுக் கொண்டிருக்கலாம். இந்த அகதிமுகாமுக்கு வந்ததிற்கு பின்னர் தான் எனக்கு அவனுடைய நட்பு கிடைத்தது. கேட்பதற்கு இனிமையாய் ஏதேதோ சொல்வான். இந்தச் சமூகத்தின் உணர்வுகளைப்பற்றி மனிதத்தைப்பற்றி இந்த உலகத்தின் ஓட்டங்களைப்பற்றி நிறையவே பேசுவான். நாளெல்லாம் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்.

வாய்க்குள் விரலைவிட்டு தேய்த்து, காறித்துப்பிவிட்டு தண்ணியையென்று வாயை அலசி முகத்தைக்கழுவி சாறத்தால் துடைத்து திரும்பவும் வந்து எனதிருப்பிடத்தில் குந்தினேன். எனக்கு முன் அவன். எங்கள் இருவருக்குமிடையில் சோற்றுக் கோப்பைகள். சோறும் மரவள்ளிக்கிழங்கு கறியும் எங்கள் வழமையான மத்தியான நேர சாப்பாடு இது தான். சோறும் ஏதாவது ஒரு மரக்கறிக்கறியும் கிடைக்கும். இரவிலும் அது தான். சில நேரங்களில் பாண் கிடைக்கும். காலையில் வெறும் அரிசிக்கஞ்சி பல நேரங்களில், காலையிலும் இரவிலும் இன்று றேசன் வரவில்லை. காலையில் கஞ்சி கிடையாது என்ற வாசகங்களும் சுவரில் தெரியும். இது இங்கு பழகிப் போன ஒரு வாழ்க்கை, நாக்குக் கூட மனசைப் போல் மரத்துவிட்டது. இந்த உலகத்திலிருந்து நாங்கள் எவ்வளவு தூரம் அன்னியப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை ஆயுதங்களையும் அகதிமுகாம்களையும் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் அந்த மனிதர்களுக்கெல்லாம் எங்கே விளங்கப் போகிறது.

சோற்றை அள்ளி வாயில் போட்டு வயிற்றை நிரப்பிக் கொண்டோம். மிகுதி இடத்துக்கு தண்ணியையென்று சமப்படுத்திக் கொண்டு வெளியே வந்தோம். உள்ளே இருக்க முடியவில்லை ஒரே அவிச்சலாய்க் கிடக்கிறது. அதையும் மீறி இந்த மனிதர்களின் இயந்திரத்தனமான வாய் அசைவுகளின் இரச்சல் செவிப்பறைகளில் முட்டி மோதி எரிச்சலூட்டின. அவன் கெந்திக் கெந்தி நடந்தான். வெயில் மண்டையைப் பிளக்குமளவுக்கு அகோரமாய் இருந்தது. நேரே நடந்து திரும்பினோம். நீண்டநெடும் காலி வீதி, கறுப்பாய், இடையிடை பாதங்களை மட்டுமே நம்பி பழக்கப்பட்ட மனிதர்களை நினைவுபடுத்தும் மஞ்சள்கோடுகள். வாகனங்களின் ஓயாத இரச்சலும் மனிதர்களின் நடையுமென மெல்லிய கரும் துரும்பின் நிழலென நீண்டு மறைந்து கொண்டிருந்தது. இரண்டு பக்கங்களிலும் வானை நோக்கி உயரும் கட்டிட நெரிசல்கள் கடைகள், ஹோட்டல்கள், நிறுவனங்கள், சொப்பிங் கொம்பிளக்ஸ்கள். அல்சேஷன் நாயும் நாலைந்து பேரும் வாழும் நவீன அழகான வீடுகள். நாங்கள் இத்தனை பேரும் இருக்கும் அகதி முகாம் கூட இதனைவிட சிறியதுதான். இந்த நெரிசல்களுக்குள் விடுபட்டு பெறமுடியாத சின்னச் சின்ன நிழல்தருமரங்கள். அதனையொட்டிய பஸ்தரிப்பு கூடாரங்கள், பூசிய பசை காயமுதலே கிழிந்து தொங்கும் போஸ்டர்கள். அந்தச் சின்ன நிழல்தருமரமொன்றின் கீழ் நானும் அவனும் ஒட்டிக் கொண்டோம். இந்த அகோரவெயிலுக்கு மரத்தின் நிழலின் இனிமை சுகம் பாரியின் தேர்கிடைத்த முல்லைக் கொடிக்கு கூட கிடைத்திருக்காது.

எதிரே கோயில். இன்றைக்கு கோயிலில் ஏதோ விசேஷமாக இருக்கவேணும். இல்லாட்டியும் இப்படித்தான் பட்டுவேட்டியும், பட்டுச்சேலையும். மயிர் முழுக்க கனகாம்பரம் கண்கலங்க நிறைய மனிதர்கள். எங்களுக்கருகிலும் பஸ்ஸுக்காக காத்துக் கொண்டு இன்னும் பலர். "ஹலோ நீங்க"....''யேஸ்..யெஸ்... நான் போனகிழமை தான் லண்டனில இருந்து வந்த நான். எனக்கு ஒரு மாசம் லீவு கிடைச்சிருக்கு கொழும்பில வந்து கொஞ்சநாளைக்கு நிப்பம் என்று... நீங்க...என்னமாதிரி எப்ப ஊர்ல இருந்து வந்தனீங்க.....'' ''நான் தங்கச்சிய கனடாவுக்கு அனுப்புறதுக்கு வந்தநான் இன்னும் ரெண்டு நாளையில போறா...எங்கண்ட ஆக்கள் நிறைய வாறதால பிரச்சினையெண்டு கதைக்கினம் உண்மையோ....'' "ஒவ்வொருத்தரும் உப்பிடித்தான் கதைப்பினம் நான் லண்டனில ஆறுவருஷமாக இருக்கிறன். அதைவிட எங்கண்ட ஊரில இருந்து லண்டனுக்கு முதன் முதல் போனதும் எங்கட குடும்பம்தான். உது உங்களுக்குத் தெரியும் தானே, அண்ணர் இன்றைக்கு லண்டனுக்கு போய் பன்ரெண்டு வருஷம். இங்க பிரச்சினை இருக்கமட்டும் அங்க இருக்கிற ஒருத்தரும் கவலைப்படத்தேலையில்ல. அதுக்கிடையில எப்படியும் சிற்றிசன் கிடைச்சிடும் பாருங்க, மற்றது இன்னுமொரு விசயம் என்னெண்டால்...'' கொட்டுவ (புறக்கோட்டை) நோக்கி வந்த பஸ் ஒன்று அவர்களை ஏற்றிக் கொண்டு நகர்ந்தது. மீதி வார்த்தைகளும் அவர்களும் இனி எந்த தேசத்தில் போய் நிற்பார்களோ....?

நானும் வரதனும் அவர்களின் பேச்சில் மெய்மறந்து ஊமையாய் நின்றோம். அவர்களின் வார்த்தைகளில் ஆச்சரியப்படுவதற்கோ, கோபபடுவதற்கோ எங்களைப் பொறுத்தவரை எதுவுமிருக்கவில்லை. இது இன்றைய சமூக ஓட்டத்தின் தலைவிரிகோலங்கள். வரதனுக்கும் நிறைய நண்பர்கள் இருப்பதாக சொன்னான். லண்டனிலும், சுவிசிலும், பிரான்ஸிலும். ஆனால் வரதனுக்கும் அவர்களுக்கும் இப்போது எந்த உறவுகளும் தொடர்புகளுமில்லை. சில நேரம் ஐரோப்பிய சூழலும், குளிரும் பியரும் அவர்களை மறக்கக்கூட வைத்திருக்கலாம். பல்வேறுமனி →

நன்றி - நூலகத்திட்டம்



# மாற்றுக் கல்வி முறையாக அரங்கு!

**க.சிதம்பரநாதன்**

க.சிதம்பரநாதன்

'மண் சுமந்த மேனியர்' என்ற நாடகத்தின் மூலமாக ஈழத்தின் சிறந்த நெறியாளராக இனம் காணப்பட்டவர்.


நாடகத்தின் நிகழ்த்திக் காட்டலில் தனக்கென தனித்துவமான பாணியொன்றினை உருவாக்கி வருபவர்.

தற்போது யாழ் பல்கலைக் கழகத்தில் நுண்கலைத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

'நாடகத்தினதும், அரங்கினதும் கல்விசார் முக்கியத்துவம் பற்றி யாழ் பல்கலைக் கழக நுண்கலைத் துறையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு ஒன்றில் அவரால் படிக்கப்பட்ட கட்டுரை இது.

கொலோனியல் கால கல்விமுறை எவ்வாறு ஒரு மனிதனின் ஆளுமையைச் சிதைக்கிறதென்றும், பதிலாக 'மனிதத்துவமற்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ள எமது சமூகத்தை மானிடப்படுத்துவதற்கான ஒரு கல்வியேற்பாடாக அரங்க நடவடிக்கையை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்றும் க.சிதம்பரநாதன் அவர்கள் விரித்துச் செல்கிறார் இக் கட்டுரையில்.

ஆ-ர்



இன்று சுதந்திரம் பற்றியும், மனித உரிமைகள் பற்றியும் நிறையவே பேசப்படுகிறது. சுதந்திரமாக வாழும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் மிக அடிப்படையானதாகும். நீதியானதும், சனநாயகமானதுமான வாழ்க்கை நடைமுறையின் அடிப்படைகளை உருவாக்குவதிலும் பேணிப் பாதுகாப்பதிலும், முன்னெடுத்துச் செல்வதிலும் நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரசையும் செயலூக்கமான (Active) பங்கினை வகிக்கும் போதுதான் அச் சமூகத்தில் உண்மையான, அர்த்தமுள்ள சுதந்திரம் நிலவ முடியும். இந்த கருமத் தொடரில் பங்குவகிக்கக் கூடிய ஆற்றல் ஒவ்வொரு பிரசைக்கும் இருக்க வேண்டியது முக்கியமானதாகும். மேலும் அவன் செயல் முனைப்பற்ற (Passive)நிலையில் இருப்பதிலும் பார்க்க செயல் முனைப்பு உள்ளவனாக இருக்க வேண்டியது முக்கியமானதாகும். அதாவது தான் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக தாக்கம் விளைவிக்கக் கூடிய கருத்துக்களை கூறக் கூடியவனாக இருத்தல் வேண்டும். இன்று எமது சமூகத்தில் ஒரு மௌனப் பண்பாடு நிலவுகிறது. இருக்கிற நிலைமைகளின் மீது மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய தாக்கமான சொற்களை மனிதர்கள் பேசத் தயங்குகிறார்கள். இத்தகைய ஒரு செயல்முனைப்பற்ற நிலையிலிருந்து வெளிவந்து ஒரு செயல் முனைப்பான நிலைக்கு மனிதர்கள் மாற வேண்டும். அச்சமூகத்தில் வாழும் மக்களிடையே ஒரு மேம்பட்ட மனித உறவு பேணப்பட்டாலே இது சாத்தியமுறும். மக்கள் தமது அபிலாசைகளை வெளிப்படுத்தக் கூடியவர்களாகவும், செயல்முனைப்புடையோராகவும் இருத்தலுக்கு மக்களிடையே பேணப்பட வேண்டிய நல்லுறவு மிகவும் முக்கியமானதாகும்.

மக்களின் பிறப்புரிமை என்று பேசப்படும் பொழுது நாம் அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை பற்றி பேசுகின்றோம். வாழுவதற்கான உரிமையும் தம்மை வெளிப்படுத்துவதற்கான உரிமையும் இங்கு முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன. இந்த உரிமைகள் அவனுக்கு தாமாகவே கிடைத்து விடும் என்பதிலும் பார்க்க இவற்றை அவன் தானே முன்வந்து பெற வேண்டியுள்ளது. எனவே இவற்றின் விருத்திக்கான பயிற்சியும், கல்வியும் அவனுக்கு அத்தியாவசியமாகின்றது. அவன் வாழும் நாட்டிலுள்ள கல்வி முறைமை அவனுக்கு இவற்றை அளிக்க வேண்டுமென்பதே எதிர்பார்ப்பு.

ஒருவன் நம்பிக்கை கொண்டவனாக -அதாவது தனது சகமனிதர்களுடன் ஊடாடுவதிலும் முகம்கொள்வதிலும்- வாழ்தல் அவனது உரிமையாகும். ஒருவனுடைய கல்லூரி வாழ்க்கையினூடு அவன் நல்ல உள, உடல் பாங்குகளை விருத்தி செய்ய முடியும் என்றும், தனது எண்ணங்களையும், உணர்வுகளையும் சிறந்த முறையில் சொற்களோடும், செயல்களோடும் வெளிப்படுத்தக் கற்றுக்கொள்ள முடியும் என்றும் ஒரு குழுவினுடைய கவனத்தை தன்பால் கவர்வதிலும், மற்றவர்களுடன் தாக்க வன்மையான முறையிலும், சிறப்பாகவும் நியாயிக்கக்கூடிய தன்மையை பெறுவானென்றும், மற்றவர்களுடைய மன எழுச்சிக் கோலங்களை விளங்கிக் கொள்ளக் கூடிய ஆற்றலைப் பெறுவானென்றும், வேறு இத்தகைய பல தொடர்புகொள்ளல் திறன்களைப் பெற்றுக் கொள்வான் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

மேலும் பிள்ளைகளை மூளை வளர்ச்சி உள்ளவர்களாகவும், படைப்பாக்க ஆளுமை உள்ளவர்களாகவும் உருவாக்க வேண்டியது பாடசாலைகளின் பொறுப்பாகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எமது கொலோனியலிச வரலாறு எமக்கு பொருத்தமற்றதும், மந்தமானதுமான ஒரு கல்விமுறையையே திணித்துவிட்டுப் போய் உள்ளது. பெயரளவில் நாடு சுதந்திரமடைந்த பின்னர் இன்னும் கூட நடைமுறையில் அந்த சாயல் கொண்ட கல்வி முறையையே நாம் பின்பற்றி வருகின்றோம். அரசாங்கங்கள் மாறும் போது கல்வி முறையிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டாலும் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படாமையின் காரணமாக நமது கல்வி முறையில் இன்னமும் கொலோனியலிச செல்வாக்கு இருந்து வருகிறது.

பாடசாலை, மாணவனை படைப்பாற்றல் மிக்கவனாக மாற்றுவதற்குப் பதிலாக அவனை ஒரு மந்த புத்தியுள்ளவனாகவே மாற்றுகிறது. இங்கு மாணவன் ஒரு பண்டமாகக் கருதப்பட்டு ''உற்பத்தி'' செய்யப்படுகின்றான். அவனிடம் உள்ளுறைந்துள்ள படைப்பாற்றல் வெளிக் கொணரப்படுவதற்கு பதிலாக அவனிடம் உள்ள படைப்பாற்றல் பறித்தெடுக்கப்படுகின்றது. இதனாலேயே இவான் இலீச் ''பள்ளிக்கூடங்களை கலையுங்கள் புதிய சமூகம் ஒன்றைக் கட்டி எழுப்புங்கள்'' என்று கூறுகிறார் போலும். நமது கல்விமுறையில் ஆசிரியர் ''எல்லாம் தெரிந்த'' பிரகிருதியாகவும், மாணவர் 'ஒன்றும் தெரியாத' வர்களாகவும் கருதப்படுகின்றனர். அதாவது ஆசிரியர் விநியோகிப்பவராகவும், மாணவர் ஆசிரியர் விநியோகிப்பதை அப்படியே நுகர்வோராகவும் ஆக்கப்படுகின்றனர். ஆசிரியர்கள் பாரம்பரியங்களை வழுவாது கடைப்பிடித்து அவற்றை மாணவர்கள் மீது திணிப்பவராகவே செயற்படுகின்றனர். இங்கு மாணவர்கள் புதிய முறையில் சிந்திக்க முடியாமல் போய் விடுகிறது. புதிய தீர்வுகளை முன்வைக்க முயல்பவர்களாக மாணவர்கள் செயற்படுவதில்லை. பாடங்களை வெறுமனே உருப்போடுபவர்களாகவே மாணவர்கள் செயற்படுகின்றனர். இதனால் மாணவர்கள் படைப்பாக்க ஆளுமையுடையவர்களாக உருவாவதில்லை.

ஒருவன் படைப்பாக்க ஆற்றல் உடையவனாக இருத்தற்கு அவனது மனம் பல்வேறு புதிய வழிகளுக்கு திறந்து விடப்பட வேண்டும். இதன் அர்த்தம் பிரச்சினைகளை எதிர் கொள்ளும் போது அவற்றைத் தீர்ப்பதற்காக துடிப்போடு பல புதிய தீர்வுகளை பரீட்சித்துப் பார்ப்பவனாக இருப்பதே. அதன் உணர்ச்சிபூர்வமான உள்ளார்ந்த நிலையில் அப்பிரச்சினையை அணுகினாலேயே இது முடியும். உண்மையில் ஒவ்வொரு தனி மனிதனும் தன்னளவில் படைப்பாக்க ஆளுமையுடையவனாக உருவாவதற்கான சாத்தியப்பாடுகள் உண்டு. ஆனால் அத்தகைய சாத்தியப்பாடுகளை நமது கல்விமுறை அவனுக்கு வழங்குவதில்லை. சரியான முறையில் பயிற்றப்பட்டால் அவன் தன்னை எதிர் நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகளை ஆழமாகத் தேட முடியும். எவராலும் கற்க முடியும் என்று கூறுகின்ற அரங்கக் கலைஞனும், புதிதளித்தல் அரங்கில் (Improvizational theatre) முக்கியமானவராகவும் கருதப்படுகிற வயாலோஸ் போலின், ''சூழல் இடம் தரும் எனில் எவரும் தான் கற்க விரும்புவதைக் கற்றுக் கொள்ளலாம் என்றும், எந்த ஒரு தனிமனிதனும் தாம் தாம் இடம் தருவார்களெனின் சூழல் தான் அவருக்கு கற்பிக்க வேண்டிய எல்லாவற்றையும் கற்பிக்கும் என்றும், இதில் 'திறமை' 'திறமையின்மை' என்பதற்கு பெரிதாக இடமெதுவும் இல்லை'' என்றும் கூறுகின்றார். நமது கல்விமுறையில் இந்நிலைமை இல்லை. இங்கு சூழலும் இடம் தருவதில்லை. நாமும் நமக்கு இடம் தருவதில்லை.

மேலும் பாடசாலை நிறுவன முறைமை மாணவர்களை முக்கியமாக பாமர மாணவர்களை அச்சுறுத்தும் ஒன்றாகவே இருந்து விடுகிறது. இதன் காரணமாக பின்தங்கிய பகுதிகளில் பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக்குப் போகாமல் இடையில் நின்று விடுகின்றனர். கிராமப்புறங்களுக்கு நாம் சென்றால் இதை பிண்டப் பிரமாணமாக அறிந்து கொள்ளலாம்.

மேலும் நமது பாடசாலைகளில் கற்பிக்கப்படும் விடயங்கள் கூட மாணவர்களின் நாளாந்த வாழ்க்கையுடன், பிரச்சினைகளுடன் எவ்வித தொடர்புமற்றவையாகவே பெரும்பாலும் இருக்கின்றன. வரலாற்றிலும், கணிதத்திலும், விஞ்ஞானத்திலும், புதிய கண்டுபிடிப்புகள் அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. அவர்களும் அதைச் செபிக்கிறார்கள். ஆனால் அவை மாணவர்களை மிகவும் ஆபத்தான முறையில் அவர்களின் சூழலில் இருந்து அந்நியப்படுத்துகின்றன.

இவ்வாறு எம்மிடம் உள்ள கல்வி எமது எதிர்ப்பார்புகளை நிறைவு செய்யாத நிலையில் எமக்கு ஒரு மாற்றுக் கல்வி (Alternate education) தேவைப்படுகிறது. ஒரு முறைசாரா நிலையில் அரங்கு ஒரு மாற்றுக் கல்வியாக தொழிற்படலாம் என்பதே எனது நிலைப்பாடு ஆகும். எமது கடந்தகால அரங்குசார் வேலை அனுபவங்கள் இந்த நம்பிக்கையை எமக்குத் தருகிறது. இவ்வாறு முறைசாரா நிலையில் தொழிற்படும் அரங்கில் கலந்து கொள்பவர்கள் அசைவியக்கம் (Dynamic) உள்ள முறைமையிலும் முற்றான ஈடுபாடு கொண்ட நிலையிலும் அதேநேரம் மகிழ்ச்சியான சூழலிலும் தமது கற்றலை மேற்கொள்ள முடியும்.

ஆனால் நம்மத்தியில் நிலவுகின்ற கல்வி முறையில் எவ்வாறு கொலோனியலிச செல்வாக்கு இன்னமும் இருக்கின்றதோ, அதே போல அல்லது அதைவிட அதிகமாக நம்மத்தியில் நிலவும் நவீன அரங்கிலும் இச்சாயலே செல்வாக்கு செலுத்துகின்றது. நாம் மேற்கூறிய கல்வி முறை, எவ்வாறு மாணவனை ஒரு நுகர்வோனாக கருதுகிறதோ அதே போலத்தான் இவ்வரங்கும் பார்வையாளனை நுகர்வோனாகவே கருதுகிறது. அதாவது தன்னால் கையாளப்படுகிற (Manipulate) இலக்காக பார்வையாளனை கருதுகிறது. அதாவது இங்கும் நமது கல்விமுறையில் நடப்பது போலவே பார்வையாளன் மீது கருத்துக்கள் திணிக்கப்படுகின்றன. பார்வையாளன் கட்டுப்படுத்தப்படுகின்றான். ஒரு செயல்முனைப்பற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இவ்வாறான ஒரு நிலையில் பார்வையாளன் இடத்து படைப்பாக்க ஆற்றலைத் தூண்ட முடியாது

அத்தோடு நம் மத்தியில் நிலவும் நவீன அரங்கு தனது ஆற்றலுக்காக சிறப்பான மண்டப வசதிகளைக் கோரி நிற்கிறது. இதன் காரணத்தால் இந்த அரங்கின் மேடையேற்றங்கள் அனேகமாக பல்கலைக்கழக மட்டத்திலும் பெரிய பாடசாலைகள் மட்டத்திலும் நடைபெறுவதுண்டு. பல்வேறு இடங்களுக்கு இந்த அரங்கை சுலபமாக எடுத்துச் செல்ல முடியாது. இந்த அரங்கு நடைபெறும் இடங்களுக்கே பார்வையாளர் தேடிச் செல்ல வேண்டும். எனவே இந்த அரங்கு பரந்து பட்ட மக்களுக்கு அன்னியப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது.

எனவே பார்வையாளரிடம் படைப்பாக்க ஆற்றலைத் தூண்டக் கூடியதும் பரந்துபட்ட பார்வையாளரைத் தேடிச் சென்று அவர்கள் மத்தியில் நடைபெறக்கூடியதுமான ஒரு சனநாயகத் தன்மையுள்ள அரங்க நடவடிக்கையே மாற்றுக்கல்வியாக உருவாகக்கூடியதாகும்.

இத்தகைய அரங்க நடவடிக்கை கலந்து கொள்பவர்களை ஈடுபாடு கொள்ளப் பண்ணுவதை இலக்காகக் கொண்டுள்ளது. அதாவது அவர்கள் உள்ளார்ந்தரீதியாக அரங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதை இலக்காகக் கொண்டிருக்கும். இத்தகைய நிலை இன்று எமது கல்விமுறையில் பெரும்பானான மாணவர்கள் ஈடுபாடின்றி கலந்து கொண்டிருப்பதற்கு எதிரான ஒரு மூறையாகும். இன்னும் கூறப்புகின் இந்த அரங்க நடவடிக்கை கலந்து கொள்பவர்களின் சிந்தனையை, உணர்வை, செயற்படும் திறனை, புலக்காட்சி பெறும் திறனை தூண்டுவதை நோக்காகக் கொண்டிருக்கும். நமது ஒடுக்குமுறைச் சமூகத்தில் தாழ்வுச் சிக்கலுக்குட்பட்டு சுருங்கிப் போயிருப்பவர்களை விடுவித்து அவர்களது படைப்பாக்க ஆளுமையை கட்டியெழுப்புவதை தனது முக்கிய இலக்காகக் கொண்டிருக்கும். இந்த நடவடிக்கை களம், தம்மை கண்டறிவதற்கும் தமது பலத்தையும், தமது பலவீனத்தையும் ஏற்றுக் கொள்வதற்கும் உரிய ஒரு களமாக இருக்கும். இந்த அரங்கக் கருமத் தொடரில் விழிப்புணர்வு, நம்பிக்கை, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல் ஏற்படும். இதன் விளைவு மானுட-விருத்தியாக இருக்கும்.

அதாவது எமது சமூகத்தில் நிலவும் கல்விமுறை எமது சமூகத்தை மனிதத்துவம் அற்றதாக்குவதில் · பெரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த நிலையில் மனிதத்துவம் அற்ற நிலைக்கு ஆளாக்கப்பட்ட எமது சமூகத்தை மானிடப்படுத்துவதற்கான ஓர் மாற்றுக் கல்வி ஏற்பாடாக அரங்க நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம். அரங்கு ஒரு செய்முறைக் கலை என்ற வகையில் கொள்கையும், நடைமுறையும் இணைந்த அரங்க செயல் அனுபவத்தில் கடந்த காலமாக ஈடுபட்ட போது பெற்ற அனுபவங்கள் இதை எமக்கு உறுதியாகக் கற்றுத் தந்துள்ளன.

ஆனால் அரங்கு ஒரு கௌரவமான இடத்தைப் பெறாத, சிறந்த அரங்கப் பண்பாடு ஒன்று நிலவாத நமது சமூகத்தில் எழுதுவதால் மட்டுமே இதை நிரூபிப்பது கடினம். மேலும் இத்தகைய ஒரு சங்கடமான நிலையில் மானிடப்படுத்தலுக்குரிய அரங்க வடிவம் பற்றியும், அதன் அம்சங்கள் பற்றியும் இக்குறுகிய கட்டுரையில் கூறப்புகுவது இயைபற்ற ஒரு காரியமாகவே அமையும் என்று அஞ்சி அதை இங்கு தவிர்த்துக் கொள்கிறேன்.

எனினும் அத்தகைய ஒரு அரங்க நடவடிக்கையை (Theatre activity) இன்றைய அரங்கச்செயலாளிகள் (Theatre activists) தேடிப்புகின் அரங்கப் பண்பாடு வளர்ச்சியுறாத நமது சமூகத்தில் அரங்கு ஏன்? என்று கேட்பவர்களுக்கு ஒரு பெறுமதியான பதிலை எம்மால் அளிக்க முடியும் என நான் கருதுகிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# 'அரசின் எல்லா விருதுகளையும் நிராகரிக்கிறேன்'

-சுகத பால டி சில்வா

சுகத பால டி சில்வா
நாடக் ஆசிரியர், நெறியாளர். நாவலாசிரியர், சிறந்த மொழிபெயர்ப்பாளர்.

எட்டு நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார். ஏழு மொழிபெயர்ப்பு நாடகங்களையும் மேடையேற்றியுள்ளார்.

எட்டு நாவல்களை வெளியிட்டிருக்கிறார். அவற்றில் இரண்டு மொழிபெயர்ப்பு.

ஏறத்தாழ 20 வருடங்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நாடகத் தயாரிப்பாளராகக் கடமையாற்றியவர். British councilஇல் பகுதிநேர மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தவர்.

பொருளாதாரரீதியில் மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ள போதும் அரசினால் வழங்கப்பட்ட விருதையும் 25000/= பணப்பரிசையும் நிராகரித்திருக்கிறார்.

1993ம் ஆண்டுக்கான சிறந்த நாடகக் கலைஞருக்கான விருதை நாடகக் கலைஞரான சுகத பால டி சில்வா அவர்கள் நிராகரித்திருக்கிறார்கள் என்று செப்தி கிடைத்ததும் அவரைச் சந்திப்பதற்காக இரத்மலானையிலுள்ள அவரது வீட்டிற்குச் சென்றோம்.

இரத்மலானையின் உட்புறத்தில் அமைந்துள்ள தொடர்மாடி வீடொன்றின் ஒரு சிறிய அறை. எம்மைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் கைகளைப் பற்றி அமரும்படி சொன்னார். அந்தச் சிறிய அறையின் மூன்று பக்கங்களிலும் புத்தகங்கள் நிறைந்த அலுமாரிகள். நான்காவது பக்கத்தில் ஜன்னல். ஜன்னலோடு படிக்கிற மேசையில் ஒரு புத்தகம் விரித்தபடி. நாங்கள் வருகிற போது அவர் படித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். மறுபுறத்தில் கட்டில் இருந்தது. அவருடைய படிக்கிற அறை, படுக்கிற அறை, விருந்தினர்களுடன் உரையாடுகிற இடம் எல்லாம் அதாகத்தானிருந்தது.

நாங்கள் உரையாட ஆரம்பித்தோம். நாடகத்துறையை நீங்கள் ஏன் தெரிவு செய்தீர்கள்? அதனுடனான தொடர்பு எப்படி ஏற்பட்டது. அது பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்..... என்று கேட்டதும் அவர் கண்களைச் சற்று மூடிக் கொண்டார். அவருடைய 30 வருட கால நாடக அனுபவங்களை மீட்டார் போலும். முகத்தில் ஒரு சிறிய புன்னகை. இளமைக்கால நினைவுகள் ஞாபகம் வந்திருக்க வேண்டும். தலையை ஜன்னலுக்கப்பால் திருப்பி தொலைதூர மேகங்களைப் பார்த்துக் கொண்டு பேச ஆரம்பித்தார். நீளமாக வளர்ந்து றபர் பான்ட் போடப்பட்டிருந்த அவரது தலைமுடியும் அவரது பேச்சுக்கேற்பவும். தலையசைவுக்கேற்பவும் அசைந்து கொண்டிருந்தது.

''கம்பஹாவின் ஒரு கிராமப்புற பாடசாலையின் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கிற போது என்று நினைக்கிறேன். பாடசாலையில் ஒரு கலை இலக்கியச் சங்கம் இருந்தது. அதன் ஊடாகக் கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தேன். பாடசாலைப் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தேன்.

சில காலத்தின் பின், நானும் எனது நண்பர்களும் கலை இலக்கியத்தைப் பற்றி உரையாடுவதும் விவாதிப்பதும் வழக்கம். அந்நேரம் அரங்குகளில் காட்டப்படும் நாடகங்களைப் பற்றியும் விமர்சிப்போம். இப்படித்தான் ஒரு தடவை ஒரு நாடகத்தைப் பார்த்து விட்டு வந்து பேசிக் கொண்டிருந்தோம் இந்தோசிலோன் கபேயில். அந்த நாடகத்தின் பெயர் மறந்து போய் விட்டது. நாடகத்தைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக அபிப்பிராயம் சொன்னார்கள். நான் அந்த நாடகம் 'நாடகமேயல்ல' என்ற எனது அபிப்பிராயத்தைச் சொன்னேன். பக்கத்திலிருந்த எனது நண்பனான சிறில் பெரேரா ''எப்பவும் எல்லா நாடகங்களையும் பற்றிக் குறை சொல்வதுதான் உனது வேலை. முடிந்தால் நீயே ஒரு நல்ல நாடகத்தைப் போடேன்'' என்று சவால் விட்டான்.


அந்நேரம் கலாசார அமைச்சு நாடக விழாவினை நடாத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. எனவே இதுவே நல்ல தருணம் எனக்கருதி ''போடிங்காரயா'' என்ற நாடகத்தை நாடகவிழாவில் மேடையேற்றினேன். இது கிராமத்திலிருந்து வந்து படிக்கவெனவும், வேலை பார்க்கவெனவும் நகரத்தில் தங்கியிருக்கும் இளைஞர்கள் பற்றியது. அந்த நாடகம் அவ்வருடத்திற்கான சிறந்த நாடகமாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த எழுத்துரு, சிறந்த தயாரிப்பு, சிறந்த நடிகனுக்கான விருதுகளையும் பெற்றுக் கொடுத்தது.

நான் நாடகத்துறையுள் காலடி வைத்தது சிங்கள நாடகக்கலையை வளர்த்து நிலை நிறுத்த வேண்டும் என்ற நோக்கிலல்ல. சமூகத்துக்கு சில விடயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். வெளிப்படுத்த விரும்புகிறேன். வெளிப்படுத்தினேன். இன்றுவரை வெளிப்படுத்துவதற்கான கருவியாக இத்துறையைப் பயன்படுத்துகிறேன். இப்படித்தான் நான் நாடகத் துறைக்குள் பிரவேசித்தேன்'' என்று அவர் சொல்லி நிறுத்துகிற போது வெறுமனே நல்ல நாடகங்களைப் போடுவது என்பதற்கும் அப்பால் அவரது சிந்தனை விரிந்து பரந்து செல்வதையும் உணர முடிந்தது.

சிங்கள நாடகத்துறையின் தற்போதைய போக்குப் பற்றி...என்று அடுத்த கேள்வியை ஆரம்பித்தோம். அவர் சற்று யோசித்தார். முகம் சுருங்கியது. சிங்களத்தில் இப்போதும் நல்ல நாடகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அதில் வருந்தத்தக்க புதிய பிரச்சினை என்னவென்றால் இளம் கலைஞர்கள் முன்வந்து மிகச் சிரமத்தின் மத்தியில் நல்ல நாடகங்களைப் போடும்போது அதனை விமர்சிக்க விமர்சகர்கள் முன்வருவதில்லை. விமர்சகர்கள் இன்னமும் பழமையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்க, இளம் நாடக கலைஞர்களோ இன்னும் முன்னே சென்று விட்டார்கள். விமர்சகர்கள் இளைஞர்களால் போடப்படும் நாடகங்களைப் பார்ப்பதுமில்லை.

இம்முறை நாடகவிழாவின் போது ''பிரசன்ன ஜயகொடி'' எனும் இளைஞனின் 'செவனலி சா மினிஸு' (மனிதனும் அவனது நிழலும்) எனும் நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகப் பிரதிக்கு இரண்டாம் இடமே கொடுக்கப்பட்டது. அவர்கள் இம்முறை சிறந்த நாடகம் எதுவும் இல்லை என்று கூறி முதலாம் இடத்துக்கு பரிசே வழங்கவில்லை. இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு மாத்திரமே பரிசு வழங்கப்பட்டது. ஆனால் நான் நினைக்கிறேன். 'செவனலி சா மினிஸு' என்ற இந்நாடகம் முதலாம் பரிசு பெறத் தகுதியுள்ளது என்று. இந்நாடகம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நாடக விழாவில் முதலாமிடம் பெற்றிருந்தது. இந்நாடகத்துக்கு முதலாமிடம் வழங்கப்படாததற்குக் காரணம், பிரபலமானவர்களின் நாடகங்களுடன் போட்டியிட்டதும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பரிசு வழங்கிய நாடகத்திற்கு தாமும் பரிசு வழங்குவதா? என்ற அவர்களது அபிப்பிராயமுமே ஆகும்.

இதனை வேண்டுமென்றே அவர்கள் செய்திருககிறார்கள் என்று நான் நினைக்கிறேன். 'நாடக வெற்றியைத் தீர்மானிக்கும் சகல அம்சங்களும் 'செவனலி சா மினிஸு' என்ற நாடகத்துக்கு இருந்த போதும் அதற்கு முதலாம் இடம் வழங்கப்படவில்லை. இது ஒரு பாரபட்சமான செயல். இச்செயல் இந்த நாடகத்தைத் தயாரித்த இளைஞர்களை விரக்தி கொள்ள வைக்கும். அரசு இப்படித்தான் நாடகத்துறையை நடாத்தும் என்றால் இவர்கள் நாடகத்துறையை விட்டு வெளியே போய் விடுவார்கள். நாடகத்துறைக்கு இது பெரிய இழப்பாகிவிடும். இப்படித்தான் சிங்கள நாடகத் துறையின் போக்கு இருக்கிறது'' எனறு கூறி முடிக்கிற போது அவரது சொற்களில் ஆவேசமும், நியாயத்திற்கான வேட்கையும் கலந்து எம்மை ஒரு கணம் உலுப்பி விடுகிறது.



கலாசார அமைச்சினால் சிறந்த நாடகக் கலைஞருக்கான விருது வழங்கப்பட்ட போது அதனை நிராகரித்திருந்தீர்களே ஏன்? என்று எம்முடைய அடுத்த கேள்வியைக் கேட்டோம்.

அவர் எதிர்பார்த்திருந்தாற் போல பேச ஆரம்பித்தார். ''இன்றுள்ள சூழ்நிலை உங்களுக்குப் புரியும். அரசின் ஒடுக்கு முறைகள் இன்று பல்வேறுபட்ட வடிவில் மேற்கொள்ளப்படுவதை உணர்கின்றேன். கலைஞர்களை கௌரவிப்பதாகவும், ஊக்குவிப்பதாகவும் கூறி ஒரு பக்கம் விருதை வழங்கி விட்டு மறுபக்கத்தில் அவர்களது வெளிப்பாடுகளை ஒடுக்குவதில் அரசு குறியாக இருக்கிறது.இவ்வாறு இருக்கும் அரசுக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என நினைத்திருந்தேன். ரிச்சர்ட்-ராஜினி நினைவு ஊர்வலத்தை அரசு எப்படியெல்லாம் தடுத்தது. ரிச்சர்ட் ஒரு நாடகக் கலைஞன். பத்திரிகையாளன். அவருக்கு என்ன நடந்தது? இவர் மட்டுமல்ல. இன்றும் எத்தனையோ கலைஞர்கள் இப்படி?

எனக்குத் தேவைப்பட்டது இதனை மக்களுக்கு உணர்த்த ஒரு நல்ல தருணம். இதுதான் அந்த நல்ல தருணம் என நான் நினைக்கிறேன். எனவேதான் நான் விருதை பகிரங்கமாக நிராகரித்தேன்.

இதுவரை நான் எழுதிய புத்தகங்களின் உள்ளே எனது விபரங்களையும், விருதுகளையும் குறித்து வந்தேன். (இடையில் எழுந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் பிரித்துக் காட்டுகின்றார். அவருடைய பெயருக்குக் கீழே அவர் பெற்ற விருதுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.) ஆனால் கடைசியாக வெளியிட்ட புத்தகத்தில் விருது, பரிசு பற்றிய குறிப்புக்களை நான் விலக்கி விட்டேன். (அவர் கடைசியாக எழுதிய புத்தகத்தை எடுத்து அதில் இவை எதுவும் சேர்க்கப்படாததைக் காட்டுகிறார்.) இந்த அரசினால் வழங்கப்பட்ட சகல விருதுகளையும் நான் வெறுக்கிறேன். நான் வேறு ஒரு காரியம் செய்து எனது கண்டனத்தைத் தெரிவிக்க முடியாது. நாடகத்துறை மக்கள் கவனிக்கும் ஒரு களம். ஆகையாலும் நான் அந்த விருதைப் பகிஷ்கரித்தேன்.

கடந்த வருடம் எச்.ஏ.செனவிரத்ன என்ற நாவலாசிரியரும் தனக்கு சிறந்த நாவலுக்காக வழங்கப்பட்ட விருதை பகிஷ்கரித்திருந்தார். இதேபோல் எனக்கு தேசிய வீரர் தினத்துக்கு 'கலாசூரி' விருதும் பத்தாயிரம் ரூபா பணமும் வழங்கப்படும் என்றும் பரிசை ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கும்படியும் கடிதம் ஒன்று வந்தது. நான் அவர்களுக்கு பதில் எழுதினேன். ''அதுவல்ல நாடகத்துறைக்குத் தேவையானது. தேசிய நாடகப் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவுங்கள். அதுவே எங்களுக்குச் செய்யக்கூடிய பெரிய உபகாரமாகும் என்று. அவ்வாறு அமைக்கப்பட்டால் சிங்கள-தமிழ் கலைஞர்களும் கூட ஒன்றாக நாடகத்துறையை வளர்க்கலாமே. தமிழ் நாடகங்களைப் பற்றிச் சிங்களவர்களும் சிங்கள நாடகத்தைப் பற்றித் தமிழர்களும் புரிந்து கொள்ள வசதியேற்படும்' என்று மிகச் சுவாரஸ்யமாக உரையாடிக் கொண்டே சென்றார்.

அவருடன் சிங்கள நாடகப் போக்கு, தமிழ் நாடகங்கள் குறித்த பிரச்சினைகள், நாடக வடிவங்கள், நாடகத்திற்கான தணிக்கை தொடர்பான பிரச்சினைகள் என்று பல்வேறு விதமான விடயங்கள் குறித்தும் உரையாடினோம். முடிந்தால் பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவை பற்றி எழுதுகிறோம்.

அவருடன் உரையாடிவிட்டு வெளியே வருகிற போது எங்களுடைய தமிழ்க் கலைஞர்களைப் பற்றி நினைக்காமலிருக்க முடியவில்லை. தமிழ் மக்களை அரசு இவ்வளவு கீழ்த்தரமாக நடாத்தி வருகிற போது அதைப் பற்றிய சுரணையே இல்லாமல் அரசின் விருதுக்காக ஆலாய்ப்பறக்கிற இவர்களைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது?

## தமக்கு வழங்கப்பட்ட விருதைப் பகிஷ்கரித்து சுகத பால டி சில்வா இலங்கை கலாசார அமைச்சின் கலா மண்டலத்துக்கு அனுப்பி வைத்த கடிதம்

அன்புடையீர்,

### தேசிய நாடக விழா 93

1992ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நாடகங்களின் அடிப்படையில் விருது வழங்கவென சிறந்த நாடகக் கலைஞர்களாக தெரிவு செய்யப்பட்ட நால்வரில் என்னையும் உள்ளடக்கியுள்ளதைத் தெரிவிக்கும் 94பெப்.23ம் திகதியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டிருந்த உங்கள் கடிதம் கிடைத்தது.

நன்றி

இது ஒரு தர்மசங்கடமான பிரச்சினை.
இவ்விருது எனக்கு யாரிடமிருந்து வழங்கப்படுகிறது? இவ்விழா அரசினால் நடாத்தப்படும் விழாவாகையால் இவ்விருதும், பரிசும் அவர்களாலேயே வழங்கப்படுகிறது எனக் கொள்கிறேன்.

அவ்வாறாயின் இவ்வரசு கலைஞர்களை எவ்வாறு நடாத்தி வந்தது என்பது கேள்வி.

யாருடைய நலன்களுக்காக பத்திரிகையாளன் ரிச்சர்ட் டி சொய்சா கொல்லப்பட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். மக்களுக்கு அதில் சந்தேகமேயில்லை

ரிச்சர்ட் ஒரு பத்திரிகையாளன் மட்டுமல்ல கலைஞனும் கூட. மேடைக் கலைஞன், சினிமா மற்றும் தொலைக்காட்சி நடிகனும் கூட. நாடகாசிரியனாகவும், தயாரிப்பாளனாகவும் இருந்திருக்கிறான்.

ரிச்சர்ட் கொல்லப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அவரால் எழுதப்பட்ட நாடகமான 'மே கவுத? மொனவத கரன்னே?'' (இது யார்? என்ன செய்கிறார்?) என்ற நாடகத்தை மேடையேற்ற முனைந்ததே.

அந்த நாடகம் மேடையேற்றப்படுவதற்கு முதல் நாள் அவர் கொல்லப்பட்டார் என்பது இன்றும் மறக்கக் கூடியதாக இல்லை.

இவ்வாறான கடந்தகால நிகழ்வுகள் துரதிர்ஷ்டமான செயல்கள் தான் என்ற போதும் இப்போது அவ்வாறு இல்லையென நீங்கள் வாதம் செய்யக் கூடும்.
ஆனால் ரிச்சர்ட் டி சொய்சா நினைவு தினத்தை நடத்தியபோது இந்நாட்டு பொலிஸ் அதிகாரிகள் செய்தது என்ன? பொலிஸார் செய்தது எவ்வளவு மோசகரமான செயல்.
அரசாங்கம் இச்சந்தர்ப்பத்தில் கண்ணையும், காதையும் மூடிக் கொண்டு ஊமைகளாக இருந்ததோடு சரி.

உண்மை நிலை இதுதானென்றால் நாடறிய எனக்கு வழங்கப்பட்ட விருதை, பரிசை பகிஷ்கரிப்பதில் தவறெவுதும் இல்லை.

எனவே இந்தத்தேசிய விருதை நான் பகிஷ்கரிக்கிறேன். மன்னிக்கவும்.

30 வருட காலமாக எனது அன்புக்குரிய, எனது கஷ்ட துன்ப காலங்களின் போதெல்லாம் என்னுடன் இருந்த நீங்கள் தெரிவுக் குழுவில் இருக்கும் சந்தர்ப்பத்தில் இதனைப் பகிஷ்கரிக்க வேண்டியேற்படுவதே நான் வேதனைப்படுவதற்குக் காரணம். எனினும் இது எமது நட்புக்கு எவ்வித இடைஞ்சலையும் ஏற்படுத்தாது என நம்புகிறேன்.

இப்படிக்கு
சுகத பால டி சில்வா
94.03.03

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினையும்-8

கோல்புறாக் அரசியற் சீர்திருத்தம் 1833ம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இடையில் பிரதிநிதித்துவ முறையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டாலும் அதன் அமைப்பு வடிவம் 1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டம் அமு லுக்கு வரும் வரை மாற்றப்படவில்லை. இடைக்காலத்தில் பிரதிநிதித்துவ முறையில் சில மாற்றங்கள் குறுமக்கலம் சீர்திருத்தம்(1910) மானிங் அரசியற் சீர்திருத்தம் (1930) மானிங் டிவன்சயர் அரசியற் சீர்திருத்தம் (1924) என்பவற்றினூடாக கொண்டு வரப்பட்டன.

கோல்புறாக் அரசியற் சீர்திருத்தம் காலனித்துவ அரசியல் நிர்வாகத்திற்கான சகல அத்திவாரங்களையும் இட்டபடியால் அடுத்து வந்த அனைத்து அரசியற் சீர்திருத்தங்களும் காலனித்துவ அரசியல் நிர்வாகத்தின் வளர்ச்சியின் படிகளையும் அதனை நிலைநிறுத்துவதற்காக ஆங்கிலேயர் மேற்கொண்ட தந்திரங்களையுமே வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தன. இவ்வளர்ச்சியினூடு சமாந்தரமாக இலங்கையின் இனப்பிரச்சினையும் வளர்ந்து செல்ல ஆரம்பித்தது. அரசியற் சீர்திருத்தங்கள் வளர்ச்சி அடைய அடைய ஆங்கிலேயர் நேரடிக்காலனித்துவ ஆட்சியை குறைத்து மறைமுகக் காலனித்துவ ஆட்சியை மேற்கொள்ள முயன்றனர். நேரடி ஆட்சி படிப்படியாக ஆங்கிலேய நலன்களோடு ஒத்துப்போகக் கூடிய பேரினவாதத் தலைமையிடம் செல்ல ஆரம்பித்தது. அத் தலைமைக்கான ஊற்று கோல்புறாக் அரசியற் சீர்திருத்தத்திற்கும் குறூ- மக்கலம் அரசியற் சீர்திருத்தத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்ற ஆரம்பித்துவிட்டது. இக்காலம் 1833க்கும் 1910 க்கும் இடைப்பட்ட காலமாகவே இருந்தது.

இக்காலகட்டம் அரசியற் தலைமைக்கான ஊற்றுக்களின் காலகட்டமாகவும் ஆங்கிலேயர் தங்களுடைய அத்திவாரத்தை பலமாக உரம் பெறச் செய்யத் தொடங்கிய காலகட்டமாகவும் இருந்தமையினால் முக்கியமான காலகட்டமாக இருந்தது. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் சகல மட்டங்களிலும் இக்காலத்தில் எழுச்சியடைய ஆரம்பித்தன. சட்டசபை மட்டத்தில் இப்போராட்ட வீச்சு மெதுவானதாக இருந்தாலும் கண்டிய தேசியவாத மட்டத்திலும் கலாசார மட்டத்திலும் பாரிய வீச்சினை உடையனவாக விளங்கின.

இலங்கையின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடும் போது கண்டிய மக்களின் நிலை இக்காலத்தில் வேறுபட்டதாக இருந்தது. ஏனைய மக்கள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் என்கின்ற அன்னியர்களின் ஆட்சிக்கு உட்பட்ட போதும் கண்டிய மக்கள் அதற்கு உட்படவில்லை. ஏனைய பிரதேச மக்கள் நீண்டகாலமாக அந்நியர் ஆட்சிக்கு பழக்கப்பட்டு இருந்தபடியால் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டனர். ஆனால் கண்டிய மக்களால் அவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கத்தோலிக்க மதமோ, புரட்டஸ்தாந்துமதமோ கண்டிய பிரதேசத்தில் அதுவரை அறிமுகப்படுத்தப்படாதபடியால் மேலைத்தேய கலாசார மரபும் அங்கு தோன்றியிருக்கவில்லை. இதனால் ஆங்கிலேய ஆட்சி தங்களது சுயத்தை சிதைப்பதற்காக தங்கள் மீது திணிக்கப்பட்ட ஆட்சியே என அவர்கள் கருதினர். கண்டியை ஆங்கிலேயர் கைப்பற்றிய போது கொடுத்த வாக்குறுதிகளையும் ஆங்கிலேயர் காற்றில் பறக்க விட்டமையால் அவர்கள் கொதித்து எழுந்தனர். இந்த வகையில் அவர்களால் நடாத்தப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியின் முதல் வடிவமாகவே 1818ம் ஆண்டு கலம்பகம் அமைந்திருந்தது. அக்கலம்பகம் மிக மோசமாக ஆங்கிலேயரினால் நசுக்கப்பட்டாலும் ஆங்கிலேயருக்கு எதிரான மனோபாவம் என்பது நீறுபூத்த நெருப்பாகவே அவர்கள் மத்தியில் இருந்தது. 1889 வரை தங்களுக்கு சார்பான ஒரு பிரதிநிதியைக் கூட ஆங்கிலேய அரசினால் தேர்ந்தெடுக்க முடியாத அளவுக்கு அரசுக்கு எதிரான எதிர்ப்புணர்வு அவர்களிடம் இருந்தது.

1840களில் அரசு கொண்டு வந்த வரிவிதிப்புச்சட்டங்களும் தரிசுநிலச்சட்டங்களும் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை அறிமுகத்திற்கான கண்டியர்களின் விவசாய நிலப் பறிப்பும், கண்டியர்களின் கொதிப்பை மேலும் அதிகப்படுத்தின. இக்கொதிப்பின் வெளிப்பா

## எட்டு நாட்களுள் கோட்டையைக் கைப்பற்றிய வீரபுரன் அப்பு என்கிற பாலசிங்க மன்னன்


டாக 1848ம் ஆண்டு ஆயுதக்கிளர்ச்சி நடந்தது.

கண்டிய மக்களின் இரண்டாவது ஆயுதப்போர் என வர்ணிக்கப்படுகின்ற இவ் ஆயுதக்கிளர்ச்சி வெறுமனே ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டமாக அமையவில்லை. மாறாக ஆங்கிலேயர்களை அடியோடு இலங்கையிலிருந்து அகற்றும் போராட்டமாகவே அமைந்திருந்தது. வீரபுரன் அப்பு இப்போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். 20-7-1848 இல் வீரபுரன் அப்பு பிக்குகளினால் பாலசிங்க மன்னன் என்ற பெயரில் இலங்கை மன்னாக முடிசூட்டப்பட்டு ஆங்கிலேயருக்கெதிரான படையெடுப்பை மாத்தளையிலிருந்து ஆரம்பித்தான். கண்டி, குருநாகல், அனுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களிலிருந்து இளைஞர்கள் அணிஅணியாக இவனின் படையில் சேர்ந்து கொண்டனர். முடிசூட்டப்பட்டு எட்டு நாட்களுக்குள் பாலசிங்க மன்னனின் படை 28-7-1848 அன்று ஆங்கிலேயரின் மாத்தளைக் கோட்டையைக் கைப்பற்றியது. செய்வதறியாது திகைத்த ஆங்கிலேயர் இராணுவச் சட்டத்தை பிரகடனம் செய்து பாலசிங்க மன்னனின் படை கண்டியைக் கைப்பற்ற வந்த போது தோற்கடித்து அவனைக் கைது செய்தனர்.

மன்னன் எனக்கூறியமை, கலகம் செய்தமை, யுத்தம் செய்தமை, கொடி உயர்த்தியமை போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்டு 8-8-1848 அன்று பாலசிங்க மன்னன் தூக்கிலிடப்பட்டான்.

கண்டியர்களின் தேசிய எழுச்சிக்கு ஆங்கிலேயரின் நடவடிக்கைகளை விட கரைநாட்டுச் சிங்களவர்கள் பெருந்தொகையாக அங்கு குடியேறியமையும், வியாபார நோக்கம் கருதிய முஸ்லீம்களின் குடியேற்றமும், தோட்டத்துறைக்கு வருகை தந்த இந்திய வம்சாவழியினரின் குடியேற்றங்களும் கூட காரணங்களாக அமைந்திருந்தன. இவையெல்லாவற்றினதும் ஒட்டு மொத்த தேசியவாத கோரிக்கையாக கண்டியர்களின் சமஸ்டிக் கோரிக்கை அமைந்திருந்தது.

கலாசார மட்டத்தில் பௌத்த, இந்துமத மறுமலர்ச்சிகள் இக்கால கட்டத்திலேயே எழுந்தன. ஒருவகையில் சிங்கள பௌத்த தேசியவாதத்திற்கான அடித்தளமும், சைவத்தமிழ் தேசியவாதத்திற்கான அடித்தளமும் இக்காலத்திலேயே உருவாக்கப்பட்டன. ஏற்கனவே முன்னைய தொடரில் பார்த்தது போல சிங்கள பௌத்த தேசிய வாதத்திற்கு அநகாரிக தர்மபாலாவும் சைவத் தமிழ் தேசியவாதத்திற்கு ஆறுமுக நாவலரும் தலைமை தாங்கினர்.



ஜோர்ஜ் வால்

பௌத்தமத மறுமலர்ச்சியின் விளைவாக பௌத்த பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. பிக்குகள் பயிலும் பிரிவேனாக்கள் உருவாக்கப்பட்டன. இன்றும் பௌத்த மதத்தின் சின்னமாக விளங்கும் ஆனந்தாக்கல்லூரி 1886இல் உருவாக்கப்பட்டது. பிரிவேனாக்களில் வித்தியோதய பிரிவேனா ஸ்ரீ சுமங்கல தேரோவினால் 1873 இலும் வித்தியாலங்கார பிரிவேனா ஸ்ரீ தர்மாலோக தேரோவினால் 1876 இலும் உருவாக்கப்பட்டது.

இதைவிட அமெரிக்காவின் முன்னாள் படைவீரர் ''ஒல்கோட்'' இன் முயற்சியினால் 15-5-1880 இல் பௌத்த ஞான சங்கம் உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தினால் மூன்று ஆண்டுகளில் 200 பௌத்த பாடசாலைகள் உருவாக்கப்பட்டதோடு பௌத்த மத மேன்மையை மெய்ப்பிக்கும் பொருட்டு கிறிஸ்தவ மத குருமார்களுடன் பகிரங்க விவாதங்களும் நடாத்தப்பட்டன. அத்தோடு 1877 இல் மகாவம்சமும், 1879இல் சூழவம்சமும் சிங்கள மொழியில் எழுதப்பட்டன. ஸ்ரீ சுமங்கல பண்டித பத்துவன்தொட, முதலியார் விக்கரமசிங்க என்போர் இவற்றை எழுதுவதில் முன்னணியில் நின்றனர்



ஆறுமுக நாவலர்

பௌத்த மத முயற்சிக்கு அப்பால் கலை, இலக்கியமட்டங்களிலும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பியதாச சிறிசேன, முனிதாச குமாரதுங்க என்போர் இதில் முன்னணியில் நின்றனர்.

ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட பௌத்த மறுமலர்ச்சி அதன் வளர்ச்சிப் போக்கில் இக்கால கட்டத்திலேயே முஸ்லீம்களுக்கும், இந்திய வம்சாவழியினருக்கும் எதிரான பௌத்த பேரினவாதமாக எழுச்சி பெற்றது.

இந்துமத மறுமலர்ச்சியின் மையமாக யாழ்ப்பாணம் விளங்கியிருந்தது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த ஆறுமுக நாவலர், விபூதி அணிந்தமைக்காக தனக்கு முன்னால் ஒரு சைவச் சிறுவன் மேடையில் நிறுத்தப்பட்டு அதிபரினால் பிரம்படிபட்டதைக் கண்டே ஆசிரியப் பணியை உதறி எறிந்து விட்டு இந்துமத மறுமலர்ச்சிப்பணியில் ஈடுபட்டார். இவரின் முயற்சியினால் 1888ல் வண்ணார்பண்ணையில் சைவ பரிபாலன சபை உருவாக்கப்பட்டது. அச்சுக்கூடம் ஒன்றும் உருவாக்கப்பட்டு இந்துமதத்தின் மேன்மையை பிரச்சாரப்படுத்தும் வகையில் ''இந்து சாதனம்'' எனும் பத்திரிகை தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்தது. வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றும் உருவாக்கப்பட்டது. (பின்னாளில் யாழ். இந்துக்கல்லூரி) நாவலரின் கைவண்ணத்தால் தமிழ் உரைநடை இலக்கியமும் எழுச்சி பெற்றது.

நாவலரின் இம்முயற்சியில் கோப்பாய் சபாபதி நாவலர், குப்பிளான் காசிவாசி செந்திநாதையர், வித்துவசிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை, அம்பலவாண நாவலர், சதாவதானி கதிரவேற்பிள்ளை போன்றோரும் பங்கேற்றனர்.

நாவலரின் சைவத் தமிழ் தேசிய வாதத்தின் அரசியல் பிரதிநிதிகளாக பொன்னம்பலம்.இராமநாதன், பொன்னம்பலம்.அருணாசலம் என்போரும் எழுச்சி பெற்றனர். யாழ்ப்பாணச் சைவத்தமிழ் வேளாளர் தலைமைத்துவம் இதனூடாகவே எழுச்சி பெற்றது.

அரசியல் திட்டவாதிகள் மட்டத்திலிருந்து ஆங்கிலேயருக்கு எதிரான உணர்வு என்பது குறைவாகவே இக்கால கட்டத்தில் காணப்பட்டது. சட்டசபையில் அங்கம் வகித்த இலங்கையர்களில் பெரும்பாலானோர் மதரீதியாக ஆங்கிலேயர்களுடன் நெருக்கமாக தொடர்புற்ற கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களில் இருந்து நியமிக்கப்பட்டபடியாலும், தேசாதிபதியின் நம்பிக்கைக்கு உரியவார்களாகவும் இருந்தமையினாலும் எதிர்ப்புக் குறைவாக வெளிப்பட்டது. வந்த ஒரு சில எதிர்ப்புக்கள் கூட ஆங்கிலேயர்களுடன் மதரீதியில் தொடர்பில்லாத சுயபலத்தில் தங்கிநின்ற தமிழ்ப்பிரதிநிதிகளான பொன்னம்பலம் இராமநாதன், முத்துக் குமாரசுவாமி என்பவர்களிடமிருந்தே வெளிப்பட்டது.

இந்நிலையில் சட்டசபை மட்டத்தில் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து நின்றவர்கள் இலங்கையர் அல்லாத ஐரோப்பியர்களே ஆவர். இவர்கள் பெருந்தோட்டத்துறையிலும், ஏனைய துறைகளிலும் முதலிட்டிருந்த ஐரோப்பியர்களின் நலன்களைப் பேணுவதிலேயே கூடிய கவனம் செலுத்தினர். அந்நலன்களுக்கு இடையூறாக ஆட்சியினர் வருகின்ற போது அதற்கெதிரான போர்க்குரலையும் எழுப்பினர். இவர்களது போர்க்குரலின் உச்சநிலையை 1864 இல் பார்க்கக்கூடியதாக இருந்தது. இக்காலத்தில் இலங்கைக்குப் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருக்கும் பிரித்தானியப் படையினரின் செலவீனங்களையும் இலங்கையே பொறுப்பெடுக்க வேண்டும் என்ற தீர்மானத்தை தேசாதிபதி கொண்டு வந்தார். இத்தீர்மானத்தை எதிர்த்து ஐரோப்பிய அங்கத்தவர்கள் அனைவரும் சட்டசபையில் இருந்து 15-11-1864 இல் வெளியேறினார்கள். இவர்களுடன் சிங்களப் பிரதிநிதியும் வெளியேறினார். ஜோன் ஈற்றன், ஜோர்ஜ் வால், டபிள்யூ.தொம்சன், ஜே.காப்ர், ஜேம்ஸ்.டி.அல்விஸ், ஜி.எ.லோரன்ஸ் என்போரே இவ்வாறு வெளியேறிய அங்கத்தவர்கள் ஆவர்



லோரன்ஸ்

இவ்வாறு வெளியேறியவர்கள் இலங்கையர் சங்கம் என்ற அமைப்பை 16-11-1864 இல் உருவாக்கினர். இச்சங்கத்தில் ஐரோப்பியர்களோடு இலங்கையர்கள் பலரும் அங்கத்துவம் பெற்றனர். நன்னித்தம்பி முதலியார் (இராமநாதனின் மனைவியின் தந்தை) பிரான்ஸி, கௌவாசி, டி.சேரம், சார்ள்ஸ். ட்கார் பொறியா, பிலிப் ஜெயவர்த்தனா, தர்மரத்ன என்போர் இச்சங்கத்தில் சேர்ந்து கொண்ட இலங்கையர்கள் ஆவர். 19ம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் கற்றோர் குழாம் எழுச்சியடைவே இதன் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது.

கோல்புறாக் அரசியல் திட்ட காலத்தில் இறுதிக்காலம் வரை இலங்கையர் அரசியல் திட்டவாதிகள் மட்டத்திலிருந்து ஓர் அரசியல் சக்தியாக எழுச்சியடையவில்லை. இறுதிக்காலத்தில்தான் இவ் எழுச்சி தோற்றம் பெற ஆரம்பித்தது. கோல்புறாக்கின் ஆங்கிலக் கல்வி பிரித்தானியருக்கு சமதையாக நிற்கக்கூடிய ஆங்கிலம் படித்த ஓர் கற்றோர் குழாமை உருவாக்கிவிட்டது. வழக்கறிஞர்கள், டொக்டர்கள், நீதிபதிகள், ஆசிரியர்கள் என்போரைக் கொண்ட இக் கற்றோர்குழாம் இவ்விறுதிப்பகுதியில் தன்னை ஓர் அரசியல் சக்தியாகவும் உருவாக்கிக் கொண்டது. இவ்வாறு உருவான இக்கற்றோர் குழாம் அரசியல் திட்ட மட்டத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கோரி நின்றது. ஆரம்பத்தில் ஆங்கிலேயர் இக் கோரிக்கையை உதாசீனம் செய்தாலும் நீண்ட காலத்திலும் தங்கள் நலன்களோடு ஒத்துவரக்கூடிய இக்கூட்டத்தினை புறக்கணிக்க விரும்பாததால் அவர்களின் கோரிக்கைகள் சிலவற்றிற்கு இணங்கினர். அதே வேளை இலங்கை வாழ் ஐரோப்பியர்களும் தங்கள் நலன் தொடர்பாக சில கோரிக்கைகளை முன் வைத்தனர். இவ்விரு பகுதியினரின் கோரிக்கைகளையும் கவனத்திலெடுத்து உருவாக்கப்பட்ட ஓர் அரசியல் சீர்திருத்தமாகவே கோல்புறாக் அரசியல் சீர்திருத்தத்தை தொடர்ந்து வந்த குறூ-மக்கலம் சீர்திருத்தம் அமைந்திருந்தது.

இக் குறூ- மக்கலம் சீர்திருத்த்தையும் அதனைத் தொடர்ந்து வந்த அரசியல் நிகழ்வுகளையும், கோல்புறாக் காலத்தில் உருவான பௌத்த சிங்கள தேசிய வாதம், சைவத்தமிழ் தேசியவாதம், கண்டியத் தேசிய வாதம் கற்றோர் குழாமின் எழுச்சி என்பவற்றை அடிப்படையாக வைத்தே ஆராய வேண்டும். ஏனெனில் இவற்றின் வளர்ச்சிப் படிகளாகவே அவை தோற்றம் பெற்றிருந்தன.

செம்பாட்டான்

நன்றி - நூலகத்திட்டம்



## "அவர்கள் அழைத்தாலும் நான் போகேன்"

### - மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி

தங்களது பெப்ரவரி 10ம் திகதிய சரிநிகர் பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் வெளியான இராணுவத்தினரின் புதிய கட்டளைகள் என்ற கட்டுரையைப் படிக்கக் கிடைத்தது. அதில் என்னைப்பற்றி திட்டமிட்ட பொய்யான விடயங்கள் கூறப்பட்டுள்ளது. மக்கள் உண்மை நிலையை அறிவதற்கான பின்வரும் மறுப்பு செய்தியினையும் உங்கள் அடுத்த இதழில் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றேன்.

கட்டுரையில் 5வது பந்தியில் குறிப்பிட்டது போன்று அரசு நிவாரணப் பொருட்களை தேவையான அளவு அனுப்பி வைத்துள்ளது என நான் எச்சந்த... ...திலும் அறிவிக்கவில்லை. இந்த மாவட்டத்தில் பிறந்தவர் என்ற வகையிலும் இங்கு நடப்பவை பெரும்பாலும் எனக்குத் தெரியும் என்பதாலும் இவரது 6ம் பந்தியில் குறிப்பிட்டது போன்று இராணுவ முகாம்களுக்கு அண்மையில் உள்ள மக்களுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டது என்பதும் முற்றிலும் பொய்யான ஒரு கூற்றாகும்.

கட்டுரையாளர் தனது 7வது பந்தியில் மிகப் பாரதூரமான குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். 'படையினர் நனைந்து விட்டார்களா? குளிருக்கு ஜக்கெட் இருக்கின்றதா? என அரச பணி செய்து கொண்டிருந்தார்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. படையினருக்கு சிவில் நிர்வாகச் சட்டப்படி எதுவித நிவாரணமும் கொடுக்க முடியாது. அதனை பாதுகாப்பு அமைச்சே கவனித்துக் கொள்ள வேண்டும். சிவில் அதிகாரிகளை எந்தக் காரணம் கொண்டும் படையினர் தங்கள் முகாங்களுக்கு அழைத்துச் செல்ல மாட்டார்கள். இதனை அவர்கள் கடுமையாகக் கடைப்பிடிப்பதை என்னால் அவதானிக்கக் கூடியதாக இ...ந்தது. ஏனெனில் தங்கள் இராணுவ இரகசியங்களை சிவில் அதிகாரிகள் அறியாது தடுப்பதற்காகும். குறிப்பாக ஒரு தமிழ் சிவில் அதிகாரியை எந்தக் கட்டத்திலும் அவர்கள் அழைத்துச் செல்ல மாட்டார்கள். தனிப்பட்ட வகையில் அவர்கள் அழைத்தாலும் நான் செல்லத் தயாரில்லை.

10வது பந்தியில் குறிப்பிட்டது போன்று ஒரு கூட்டம் நடைபெறவில்லை. ஆனால் 30-01-1994 இல் சட்டப்படியான உன்னிச்சைக்கான ஆரம்பக்கூட்டம் நடைபெற்றது. இது எனது தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாதுகாப்பு சம்பந்தமான முடிவுகளை இணைப்பு அதிகாரியே எடுக்க வேண்டும். அம்முடிவுகளை அவர் அறிவித்தார். விவசாயிகளுக்கு யூரியா கொடுக்க வேண்டும் என்ற எனது நீண்ட கால வேண்டுகோள் கடந்த வருடம் ஆரம்ப நடவடிக்கையாக முகாம்களிலிருந்து ஒரு மைல் சுற்றாடலுக்குள் அங்கீகரிக்கப்பட்டது. இவ்வருடம் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. அதன்படி 1 1/2 மைல் சுற்றாடலுக்குள் யூரியா பாவிக்கும் கட்டளையை இணைப்பதிகாரி வழங்கினார். அவசரகால பிரிவின் கீழ் அரச அதிபர்களுக்குரிய ஒரு மாவட்டத்தின் சிவில் நிர்வாக இணைப்பு பணியதிகாரம் இராணுவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது என்பதினை கட்டுரையாளர் புரிந்து கொள்ள வேண்டும். இந் நியமனம் ரத்துச் செய்யும் வரையில் அரச அதிபர்கள் சிபாரிசுகளைச் செய்யலாம். அவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்ளலாம். ஏற்றுக் கொள்ளாமலும் விடலாம். இறுதி முடிவினை அவர்களே எடுப்பார்கள்.

கட்டுரையின் இறுதிப்பந்தியில் 'திடீர் என மட்டக்களப்பில் இன்னும் ஒரு பிரிகேடியர் போல் அரச அதிபர் தன்னைக் காட்டிக் கொள்கிறார் ஏன்? எனக் கேட்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் தங்களைப் போல் இராணுவ அதிகாரம் படைத்தவராக ஒரு சிவில் அதிகாரி செயல்படுவதை அனுமதிக்க மாட்டார்கள். அப்படி ஒருவர் இயங்கினால் அவரது கட்டளைகளை இராணுவத்தினர் நடைமுறைப்படுத்தவும் மாட்டார்கள். நிர்வாக முரண்பாடுகளை அரச அதிபர் பத்திரிகையில் வெளிப்படுத்த முடியுமா? இருந்தும் உதாரணத்திற்கு ஒன்று கூறுகின்றேன். சட்டத்திற்கு அப்பால் சென்றும் ஒழுக்காற்று நடவடிக்கைளுக்கு அஞ்சாமலும் மக்கள் துயர் துடைக்க ஒரு பிரதேச செயலாளருக்கு நான் அனுப்பி வைத்த ஒரு லட்சம் ரூபா காசோலை மறு தபாலில் எனக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறே இராணுவத்திற்கும் எனக்கும் உள்ள முரண்பாடுகளையோ இணக்கங்களையோ வெளிப்படுத்த முடியுமா?

இ.மோனகுருசாமி
அரசாங்க அதிபர்
மட்டக்களப்பு

## சனி ஞாயிறிலும் வேலை செய்கிறார்களாம்

தங்கள் பெப்ரவரி 24-மார்ச்9- 1994 இதழில் வெளியாகியுள்ள 'சத்தியேந்திரா' என்பவர் எழுதிய 'வாகரை மக்கள் ஒதுக்கப்பட்டவர்களா?' என்ற தலைப்பிட்ட கட்டுரை தொடர்பாக பின்வரும் ஆட்சேபனையைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எமது பிரதேச செயலகம் பெயரளவுக்கே உள்ளது என்றும் பிரதேச செயலக ஊழியர்கள் அலுவலகத்தில் இருப்பது அரிது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் பிழையான தகவல் ஆகும். 1990 யூன் மாதம் முதல் 1991 நவம்பர் வரை இங்கு பிரதேச செயலகமோ, உதவி அரசாங்க அதிபர் அலுவலகமோ இயங்கவில்லை. பதிலாக வாழைச்சேனையில் ஒரேயொரு எழுதுனருடன் வாகரைக் காரியாலயம் இயங்கியது. பின்னர் இது இங்கு மாற்றப்பட்டு போதிய இலிகிதர்கள் பெறப்பட்டு தற்போது தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அலுவலக ஊழியர்கள் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் கூட இங்கு தங்கியிருந்து கடமை புரிகின்றார்கள். மக்களுக்குச் செய்ய வேண்டிய சகல வேலைகளையும் எமது பிரதேச செயலகமே செய்து வருகின்றது. வாகரைப் பிரதேசத்தில் முழுநாளும் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரேயொரு அலுவலகம் எமது பிரதேச செயலகமே.

கே.கதிர்காமநாதன்
பிரதேச செயலாளர்
கோறளைப் பற்றுவடக்கு
வாகரை

## இருள்......

தர்கள், விதம்விதமான வாகனங்கள் காலிவீதி இந்த வெயிலிலும் குளுகுளுப்பாய் மிதந்தது. எங்களுக்கு இது தான் வாழ்க்கை பகல் நேரங்களில் இந்த மரங்களும் பஸ்தரிப்பு நிலையமும், மாலை வேளைகளில் காலிவீதிக்கு பின்புறமுள்ள கடற்கரையும் மாலைநேரங்களில் கடற்கரையில் குந்தியிருந்தபடி வானத்தையும் கடலையும் மாறி மாறி பார்த்து ரசிப்பதில் தான் எத்தனை ஆனந்தம். இருளில் உறங்கிவிடும். அந்த மாலை வேளைகள் தான் இந்த மனசுக்கு கொஞ்சம் ரம்மியமாயிருக்கும்.

''காம்புக்கு போவம் மச்சான்'' தலையை ஆட்டியபடி மரங்களுக்கு விடை கொடுத்தேன். காம்பை நோக்கி நடந்தோம். உள்ளே நுழைந்ததும் திருவிழாக்காலமும் பெட்டி சட்டிக்கடைகளும் அதே இரச்சலும் திரும்பவும் ஞாபகத்துக்கு வந்தன. ''அண்ணே உங்களுக்கு கடிதம் வந்திருக்கு'' திரும்பிப் பார்த்தோம். வரதனுக்கு தான். ஊரிலிருந்து வரதனுக்கு மாசத்தில ஒருதடவையாவது கடிதம் வரும். அம்மாவும் ஒரு அக்காவும் தான். மற்ற எல்லோரையும் தன்னுடைய காலைப் போலவே பறிகொடுத்தவன். கடிதத்தை பிரித்துப்படித்தான்.

அன்பின் தம்பிக்கு. நாங்கள் நலமாய் இருக்கிறோம். உன் நலத்திற்கு எல்லாம்வல்ல இறைவன் துணைபுரிவாராக. முன்னர் அனுப்பிய கடிதங்களுக்கு ஏன் உன்னிடமிருந்து பதில் இல்லை. எங்களுக்கு எந்நேரமும் உன்னைப்பற்றிய கவலை தான் நேற்றைக்கு முதல் நாள் இரவுகந்தசுவாமி கோவிலடியில் நடந்த சண்டையால ஷெல் வெடித்து அம்மாவுக்கு காலிலையும் வயிற்றிலையும் காயம். ஐயரும் இன்னும் நாலைந்து பேரும் உடனே சரி, அம்மாவுக்கு பெரிசா ஒன்றும் இல்லை இப்ப பெரியாஸ்பத்திரியில தான் வச்சிருக்கிறாங்க.

கொழும்பில இருக்கிற அகதிமுகாம்களையெல்லாம் மூடுறதாகக் கேள்விப்பட்டோம். அப்படியானால் நீ என்ன செய்யப் போகிறாய்? எதற்கும் கவனமாய் இரு. எனக்கு இந்த முறையாவது ரீச்சிங் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன். கோணாமலை மாமாட வசந்திக்கு சயன்ஸ் ரீச்சர் வேலை கிடைச்சிருக்கு. என்ன செய்யிற திறமைக்கும் நேர்மைக்கும் எங்கேயும் அப்படித்தான், காளிகோவிலடி கணபதியார்ர செல்வனையும் நேற்று இரவு சுட்டுப் போட்டானுகள். ஒரு சோலியும் இல்லாத அப்பாவிப் பொடியன். அந்தப் பொட்டையள் கிடந்து துடிச்சி துடிச்சி அழுததைப் பார்க்க எனக்கும் அழுக வந்திட்டு. வாறகிழமை வள்ளிமாமிர சீட்டுக்காசு கிடைக்கும். உனக்கும் ஐநூறு அனுப்பிவைக்கிறேன். உடுப்பு வாங்கிக்கொள். வேறென்ன? உடனே கடிதம் எழுது. இப்படிக்கு அக்கா

கடிதத்தை படித்து முடிந்ததும் மௌனமாய் இருந்தேன். எதிரே சுவரில் இன்று றேசன் வரவில்லை சாப்பாடு இல்லை என்ற வாசகங்கள் தெளிவாய்த் தெரிந்தது. இந்த அகதிமுகாமும் தனக்குள் ஆயிரமாயிரம் சோகங்களையும், துயரங்களையும் தாங்கிக் கொண்டு இன்னும் மௌனமாய் என்னருகில் அவனும் மௌனமாய்.....

## சரிநிகரின் நாட்குறிப்பு

**மார்ச்:...**

வெலிஓயா பராக்கிரமபுரத்தில் உள்ள தெற்குப்பகுதியில் மேற்கொண்ட தாக்குதலில் இ... படையினர் பலியானதாக பாதுகாப்பு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மார்ச்:02**

வவுனியாவிற்கு மேற்கே மன்னார் வீதிப்பகுதியில் சமயபுரம் என்ற இடத்தில் உள்ள இராணுவக் காப்பரண் மீது புலிகள் கடத்திய சினைப்பர் தாக்குதலில் தாசீஸியஸ்(23) என்ற புளொட் உறுப்பினர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பூநகரி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் குண்டு வீச்சு விமானங்கள் ஹெலிகொப்டர்கள் சகிதம் நடாத்திய தாக்குதலில் பத்துக்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டதாகவும் தமது தரப்பில் 8 படையினர் கொல்லப்பட்டனர் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணப்பகுதியில் சீனிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதனால் கடைகளில் சீனியின் விலை 68/=வாக விற்கப்படுகிறது எனவும் தெரியவருகிறது.

**மார்ச்:05**

மண்டைதீவு இராணுவமுகாமில் இருந்து கடற்கரையோரப்பகுதிகளை நோக்கி இரவு பகல் நேரங்களில் ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்படுவதாக தெரியவருகிறது.

**மார்ச்:06**

தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் புலிகள் இயக்கத்தின் உயர்மட்ட உறுப்பினர் ஒருவருக்கும் அவரது மெய்பாதுகாவலருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

**மார்ச்:07**

இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டதாகவும் இருவருக்கு காயம் ஏற்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**மார்ச் :08**

இராணுவ முகாம்களுக்கு இறைச்சி வழங்குவதாகத் தெரிவித்து, வெடி குண்டுகளையும் தோட்டாக்களையும் இறந்த மாட்டுக்குள் வைத்து கடத்தும் குழுவொன்று தொடர்பாக இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**மார்ச்:08**

வவுனியாவுக்கு வடக்கே ஓமந்தைக்கு கிழக்கே பிரம்பங்குளப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தின் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் ஒரு இராணுவமும் ஆறு புலிகளும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பிரப்பங்குளத்தில் உள்ள புலிகளின் தளத்தினை இராணுவத்தினர் தாக்கி நிர்மூலமாக்கியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**மார்ச்:08**

யாழ்ப்பாணத்தில் கண்பார்வை குறைந்த மாணவர்களுக்கென அரசின் அனுமதி பெற்று றெட்பானா நிறுவனத்தால் கொழும்பில் இருந்து கொண்டு செல்லப்பட்ட மூக்குக்கண்ணாடிகள் திருகோணமலைத் துறைமுகத்தில் வைத்து ஆயுதப்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

**மார்ச்:10**

கடைசியாகக் கிடைத்த உளவறியும் அறிக்கையின்படி எல்.ரி.ரி.ஈ தலைவர் பிரபாகரன் எல்.ரி.ரி.ஈ. தலைவர் தமிழ்ச்செல்வம் புலிகளின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் மற்றும் உயர்தலைவர்கள் தலைமறைவாகியுள்ளனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**மார்ச்:10**

பருத்தித்துறை வடமராச்சியில் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் 3 மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

பூநகரி கௌதாரிமுனையில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தில் எட்டு விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நொச்சியாகமத்தியில் பொலிஸ் காவலரண் மீது புலிகள் தாக்கியதில் ஒரு பொலிஸார் காயம்.

**மார்ச்:11**

யாழ்ப்பாணம் மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து வீசப்பட்ட ஷெல்லினால் ஒருவர் பலி.

மன்னார், தீவுப்பகுதி கடல்வழியாக வள்ளங்களில் வந்த விடுதலைப்புலிகள் தாராபுரம் பொலிஸ் நிலையத்தின் மீது நடாத்திய தாக்குதலில் 4 பொலிஸார் பலி. 12 பேர் காயம்.

**மார்ச் :12**

ஊர்காவற்துறையில் புதைத்து வைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடித்ததில் இரு அதிகாரிகள் உட்பட ஆறு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாவும் 8 பேருக்கு காயம் ஏற்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நாகர் கோயில் கடற்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 4 மீனவர்கள் பலி.

**மார்ச்:13**

மன்னார் தாம்போதி காவலரண் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு பொலிஸார் பலி. இவர்கள் இருவரும் தமிழர்களாவர்.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்

# எட்டி உதைப்பவன் காற் செருப்பையும்

# நக்கிப் பிழைப்பவர் நம்மவர்

## ஒரு மட்டக்களப்பு வாசகரின் குமுறல்

கிழக்கு மாகாணம் தமிழரது சொந்த மண் இல்லை என்பதை விரைவில் உலகிற்கு எடுத்துக்காட்டுவேன் என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா, தென்மாகாணத் தேர்தற் பிரச்சார மேடைகளில் முழங்கி வருவது யாவரும் அறிந்த விடயம்.

அவரது கூற்றின் அர்த்தம் மிகத் தெளிவாகவே சிங்கள மக்களுக்குப் புரிகிறது. அதாவது கிழக்கு மாகாணமும் சிங்களவருடைய பாரம்பரிய பூமி, அவர்களை அங்கிருந்து போன நூற்றாண்டில் அடித்துத் துரத்திய வெள்ளையர் பின்னர் தமிழர் குடியேற்றத்தை அங்கு ஊக்குவித்தனர், எனவே வந்தேறு குடிகளான கிழக்கு மாகாணத் தமிழருக்கு சொந்த மண் இல்லை என்பதே ஜனாதிபதியின் கூற்றுக்களுக்குப் பின்னணியில் உள்ள சிங்கள வரலாற்றுக் கருத்தாகும். இக் கருத்துக்களின் விரிவை ''ஜாதிக சிந்தனய'' கோட்பாட்டின் பக்கங்களை மேலோட்டமாக வேனும் புரட்டிப்பார்க்கும் எந்தத் தமிழ் பேசும் மடையனும் படித்துணரலாம்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என ஜனாதிபதி கூறுவதும் இப்பின்னணியில்தான்.

இனப்பிரச்சினை என்று கூறுதல் இத்தீவில் இரண்டு இனங்கள் உண்டென்பதை ஒத்துக் கொள்வதாகுமாம். ஆனால் இது சிங்கள பௌத்த கலாசாரத்தை 2500 வருடங்கள் கடைப்பிடித்து ஏனைய வந்தேறு குடிகளை உள்வாங்கி வந்த ஓரினம் வாழும் நாடாம், இது 'ஜாதிக சிந்தனய' கும்பல் நீண்ட நாளாகச் சொல்லி வந்த விடயம். அதைப் பெரிதாகத் தூக்கிப் பிடிக்கத் தான் ஆள் கிடைக்கவில்லை அவர்களுக்கு.

ஆனால் ''வாராது வந்த மாமணியாய்'' இப்பேரினவாதக் கும்பலுக்கு இன்று கிடைத்துள்ள பெரும் பிரச்சாரகர் டி.பி. விஜேதுங்கா.

இவரது கருத்துக்களை சிரமேற் கொண்டு மகா பவ்வியமாக அவர் பின் குறுநடை போடும் கூட்டம்தான் ஐ.தே.க.

**எஸ்.ராஜேந்திரம்**

இனி விடயத்திற்கு வருவோம்.

தேர்தல் ஆணையாளரால் கூட வெளிப்படுத்தப்பட்டுள்ள மோசடிகள் ஒருபுறம் இருப்பினும், மேற்கண்ட கோட்பாடுகளை எக்கேடு கெட்டாவது நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற உறுதியுடன் செயல்படும் ஐக்கியதேசியக் கட்சிக்கு சில மட்டக்களப்பு வாழ் பெருமக்கள் வாக்களித்துள்ளனர் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

நமக்கு உதைத்த கால்களின் செருப்பையும் நக்குவோம், நாம் ஒரு இனமே அல்ல என இடித்துரைக்கும் இனவாதிகளையும் மதித்துக் கீழ்ப்படிவோம், எம்மைப் போல் காதில் பூ வைத்த இளிச்ச வாயர்களைக் காண்பதரிது என்றெல்லாம் உலகிற்குப் பறைசாற்றுவதற்காக மட்டக்களப்பில் சில தமிழர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க நினைத்திருந்தால் அது அவர்களது மறுக்கப்பட முடியாத, மதிக்கப்பட வேண்டிய ஜனநாயக உரிமை.

இதில் மறுபேச்சிற்கு இடமில்லை.

எனினும், தேர்தல் முடிந்த பின்னர் மட்டுநகரில் நடைபெற்று வரும் திருகுதாளங்களை அவதானிக்கும் போது அங்கு செயல்படும் சில தமிழ் இயக்கங்களும் மட்டக்களப்பானின் காதில் சுலபமாக பூவைத்து விடலாம் என்ற ஐ.தே.க.வின் கருத்திற்கு வலுவூட்டும் வகையில் நடந்து கொள்கின்றனவா எனக் கேட்கத் தோன்றுகிறது. தமிழ் ஈழ விடுதலை, தமிழ் ஈழ மக்கள் விடுதலை என்னும் கருத்துக்களை இன்னும் ஆணித்தரமாகத் தங்கள் இயக்கப் பெயர்களில் கொண்டிருப்பதாலேயே இவர்களை நோக்கி கிழக்குத் தமிழனின் மானப்பிரச்சினை தொடர்பாகக் கேள்வி கேட்கும் அவா தோன்றுகிறது. தம் மண்ணுக்கும், மக்களுக்கும் வீர சுதந்திரம் வேண்டி நின்று தம் இன்னுயிரைத் தியாகம் செய்த தங்கத்துரை, சுந்தரம் எனப் பலப் பல மறவரின் பாசறைகளில் புடம் போடப்பட்டமையால் (இன்று ஜனநாயகப் பாதையில் நிற்பினும்) தம் முன்னோடிகளின் மான உணர்வும், தலை வணங்காத் தாய்மண் பற்றும் சிறிதளவேனும் இவர்களில் இருக்கலாம் என ரோசமுள்ள ஒரு மட்டக்களப்பான் எதிர்பார்ப்பது குற்றமா?

ஏப்ரல் 4 இன்முன் மட்டு.மாநகரசபைக்குத் தெரிவான ரெலோ, புளொட் உறுப்பினர் ஒன்பதின்மரில் ஒருவரையாவது 'விசேட பொலிஸ் பிரிவொன்றில்' உள்ள ஒரு சில குண்டரின் உதவியோடு மட்டு.ஐ.தே.கட்சி கடத்திவிடும் எனக் கருதி தம் ஒன்பதின்மரையும் காவலில் வைத்துள்ளன தமிழ் ஈழமக்கள் விடுதலைக்கழகமும், தமிழ் ஈழ விடுதலை இயக்கமும். மட்டக்களப்பில் யார் யாரைப் பார்த்துப் பயப்பிடுவது என்ற விவஸ்தை கிடையாதா? எங்கோ ஓடி ஒளிந்து கிடந்த ஐ.தே. கட்சி இன்று உங்களைக் கடத்தலாம், காசு பணம் கொண்டு உங்கள் உறுப்பினரை மடக்கலாம் என்றால் தமிழ் ஈழ மக்கள் விடுதலை என்றும் தமிழ் ஈழ விடுதலை என்றும் இன்னும் ஏன் பெயர் சூடி கிழக்கு மண்ணில் வாழ வேண்டும்?

தேர்தல் ஆணையாளரே இன்று ஐக்கிய தேசியக் கட்சியும், பொலீஸ் குண்டர்களுமாக நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் செய்த மோசடிகளைப் பற்றி மிகக் காரசாரமாகக் கண்டித்து அறிக்கை விட்டுள்ளார். அரச ஊழியரான அந்த மனிதருக்கே இக்கும்பலின் அட்டூழியம் பொறுக்கமுடியவில்லையென்பது வெளிப்படை. ஆனால் நீங்கள் உங்கள் ஒன்பதின்மரையும் ஒளித்து வைத்திருக்க வேண்டியுள்ளதென்றால் மட்டக்களப்பில் இந்தக் கயவர் கூட்டத்தின் கை ஓங்கி இருக்கின்றதென்றதென்றல்லவா அர்த்தமாகிறது. நீங்கள் ஒன்பதின்மரையும் பாதுகாப்பில் வைத்திருந்தாலும் முஸ்லீம் காங்கிரஸின் சார்பாகத் தெரிவான அந்த ஒரு அங்கத்தவர் ஏப்ரல் 4 அன்று வாக்களிப்பில் கலந்து கொள்வதை இக்கும்பல் தடுத்துவிட்டால் மடையராகப் போவது கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களே! ஏனெனில் இன்று சிங்கள பௌத்த மேலாதிக்க மமதையின் அதியுயர் வடிவமாக திகழும் ஐ.தே.க வின் தலைப்பீடமானது, அடாவடித்தனத்தின் மூலம் மட்டக்களப்பில் குறிப்பாகவும், பொதுவாகக் கிழக்கிலும் தன் இனவாத நோக்கங்களை சுலபமாக நிறைவேற்றிடலாம் எனும் தன்நம்பிக்கை பெற்றிட இது நிச்சயம் வழிகோலும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

கிழக்கைப் பிரித்துத் தமிழனுக்குத் தாயக மண் என ஒன்றில்லை என்பதை உலகிற்கு காட்டுவேன் என டி.பி. தென்மாகாணம் சிங்கள மக்கள் மத்தியில் கூட்டத்திற்கு கூட்டம் சபதம் செய்துள்ளார்.

அவரிலும் குற்றமில்லை. ஏனெனில் மட்டக்களப்பான் மானம் ரோசமற்ற மடையன் என உலகிற்கும், சிங்கள இன வெறியருக்கும் எடுத்துக்காட்ட வேண்டுமென்ற அவாவுடன், எலும்புத் துண்டுகளுக்கு அலையும் களிசடைகளின் கூட்டமொன்று தன் கட்சிக்கு என்றும் உதவிகரம் நீட்ட மட்டக்களப்பிலேயே உண்டு என்பதை டி.பி உள்ளூராட்சித் தேர்தல்களில் உறுதிப்படுத்திக் கொண்டுள்ளாரல்லவா!

எனவேதான் கிழக்கைப் பிரிப்பேன் எனத் தன்நம்பிக்கையுடன் கொக்கரிக்கின்றார் அவர் தென்மாகாணத்தில். அடாவடித்தனத்தின் மூலம் கிழக்கில் எதையும் சாதித்து விடலாம் என ஐ.தே.க கருதுவதற்கு மாநகரச் சபைச் சிக்கல் வழிவகுக்குமாயின் கிழக்கைப் பிரிக்கும் சிங்கள இனவெறியரின் முயற்சியை எங்ஙனம் தமிழ் இயக்கங்களால் முறியடிக்க முடியும்?

வட-கிழக்கைப் பிரிப்பதற்கான வாக்கெடுப்பிலும் மோசடிகளும், வன்முறை வாக்குத் திணிப்பும் நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

அண்மையில் கோவிந்தன் கருணாகரம் பேசியுள்ள சில வீர வசனங்கள் வரவேற்கத்தக்கவையே. எனினும் ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கி கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களை நாசமாக்கும் நோக்குடன் செயல்படும் ஐ.தே.க கும்பலுக்கும், அரசபடைகளின் அதன் குண்டராக இயங்கும் ஒரு சிலருக்கும் எத்தனை நாள் மட்டக்களப்பில் இடங்கொடுப்பது என்பது பற்றி இதய சுத்தியோடு அங்கு இயங்கும் (ஜனநாயக வழிப்பட்டுவிட்ட) தமிழ் இயக்கங்கள் முடிவெடுக்கட்டும். இல்லையெனில் கடையை மூடிவிட்டு தன்மானத் தமிழராய் வாழ்வது எங்ஙனம் என்பதை மீண்டுமொருமுறை கற்றுக்கொள்ளட்டும்.

# மணிவாசகம்

### மூலைக்கு ஒதுக்க முயன்றதன் வினை

''அடிமை யுகத்திலிருந்து கூடியும், குறைந்தும் இனச்சிக்கல் இன்றுவரை தொடர்ந்து வருகிறது என்பதை இன்று பலர் மறந்து போய்விட்டனர். அவ்வாறே இன்று சிங்கள பௌத்த அரசொன்றைக் கட்டியெழுப்புவதற்காகப் பேசும் போலித் தேசாபிமானிகள் செய்தது தமிழ் மக்களை இந்நாட்டிலிருந்து மூலைக்கு ஒதுக்கியது மட்டுமேயாகும். இந்த மூலைக்குத் தள்ளி விடும் முயற்சியினால் இது பாரிய சிக்கலொன்றாக ஆகியுதென்பதைத் தேசாபிமானிகள் தெரியாதிருக்க முடியாது. இன்று நாம் செய்ய வேண்டியது எல்.ரீ.ரீ.ஈ.இயக்கத்தின் பின்னால் சர்வதேச சக்திகள் உள்ளனவா? இல்லையா? என்பது பற்றித் தர்க்கம், குதர்க்கத்தைக் கட்டியெழுப்புவது அல்ல. நாட்டினுள் உள்ள இவ் இனச் சிக்கலுக்கு உறுதியான தீர்வொன்றைத் தேடுவதேயாகும்.''

**கொழும்புப் பல்கலைக்கழக வரலாற்று, அரசியல் விஞ்ஞானப் பிரிவின் விரிவுரையாளர் நிர்மால் றஞ்சித் தேவசிறி -லங்காதீபவில்- 01.03.1994**

### ஐ.தே.க = ஜ.ஐ.தே.மு.

''ஜ.ஐ.தே.மு.உருவானது ஐ.தே,கவுக்கு எதிராகவன்றி அக் கட்சியில் நிலவிய தனி நபரொருவரின் தலைமைக்கு எதிராகவாகும். அக்கட்சிகள் இரண்டினதும் கொள்கைகளும், நோக்கும் ஒரே வழியை நோக்கியதே!''

**ஜ.ஐ.தே.மு.யின் முன்னாள் தலைவர் காமினி திசநாயக்கா லங்காதீபவில் -01.03.1994**

### பத்திரிகைகள் இல்லாவிடின் ஊழல் பெருகும்

''பத்திரிகையாளர்களின் சேவை இல்லையானால் அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களின் ஊழல்கள் அதிகரிக்கின்றன. அதனால் உண்மையை நேர்மையுடன் பகிரங்கப்படுத்தி மக்களுக்குக் கொடுப்பது பத்திரிகையாளர்களின் உத்தம பணியாகும்.''

**ஸ்ரீ லங்கா அஞ்சல், தொலைத் தொடர்பு அமைச்சர் ஏ.எம்.எஸ். அதிகாரி திவயினவில் -01.03.1994**

### புதிய வேலைத்திட்டமொன்று தேவை

''பத்து வருடங்களாக, நடைபெற்று வரும் இந்த யுத்தத்தினால் சிங்களவர் தமிழர் என இரு தரப்பிலிருந்தும் ஆயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்படுகின்றனர். நாட்டின் தேசிய மூலதனம் கோடிக் கணக்கில் அநியாயமாக அழிவுக்குள்ளாகிறது. நாம் யுத்தத்தை எதிர்க்கிறோம். இவ் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகச் சமயக் குருமார், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து புதிய வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டும்.''

**வல்லவத்த ஞானாபிலங்கை தேரர்- லங்காதீபவில் -02-03-1994**

### பட்டாளத்தை மதிக்கச் சொல்கிறார் அமைச்சர்.

தாய் நாட்டின் ஒருமைப்பாட்டையும், சுயாதிபத்தியத்தையும் பாதுகாப்பதற்காக உயிர்த் தியாகத்தினூடாக வடக்குக் கிழக்குப் போர்க் களத்தில் உத்தம பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களுக்காகப் பொருள் ரீதியான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதைப் போல அவர்களின் உயர்ந்த சேவையின் மதிப்பீட்டினூடாகவும் அவர்களுக்கு உற்சாகம் வழங்க வேண்டும்''

**ஸ்ரீ லங்காத் தகவல், வானொலி அமைச்சர் ரிறோன் பெர்னான்டோ - லங்காதீபவில் -02.03.1994**

### தேசிய ஒருமைப்பாட்டுக்குச் சீனாவும் ஆதரவாம்

''நாட்டின் புவியியல் தொடர்ச்சியைப் பாதுகாத்து, அந்நியத் தலையீடுகளுக்கு இடம் கொடுக்காது தேசிய ஒருமைப்பாட்டைக் கீட்டியெழுப்புவதற்காக இலங்கை எடுக்கும் முயற்சிகளுக்குச் சீனாவின் பூரணமான ஒத்துழைப்பை வெளிப்படுத்துகிறோம்.''

**சீன உதவிப் பிரதம மந்திரியும், வெளிநாட்டு அமைச்சருமான சான் சீ -திவயினவில் -02.03.1994**

### புளொட்டைப் போல் புலியும் செய்தாலென்ன?

''வவுனியா நகர சபையின் ஆட்சி அதிகாரத்தைப் புளொட் இயக்கத்தின் அரசியல் பிரிவு ஐ.தே.க.யைத் தோல்வியுறச் செய்து, வெற்றி பெற்றிருப்பது மகிழ்வுக்குரிய விடயமாகும். துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டு எல்.ரீ.ரீ.ஈ. இயக்கமும் இவ்வாறு ஜனநாயக வழி முறைக்குத் திரும்பினால் அது தேசிய நன்மைக்கு உகந்ததாகும். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தலுக்கு அது மிக முக்கியமானதாகும்.''

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க -லங்காதீபவில்-03.03.1994**

### திவயின ஆசிரியர் பெற்றுக் கொடுத்த 'சுதந்திரம்'

''நாம் பல வருடங்களாகப் பல உயிர்களைத் தியாகம் செய்து, இரத்த ஆற்றின் ஊடாகவே புலிகளின் அதிகாரத்துக்கு எதிராக, இவ்வாறான தேர்தலொன்றை நடத்தும் ஜனநாயகச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். இது புலிகளுக்கு எதிரான, மக்கள் கருத்தைக் காட்டும் சந்தர்ப்பமாகும்.''

**ஆசிரியர் தலையங்கத்திலிருந்து....-திவயினவில் 03.03.1994**

### இப்படித்தான் வென்றார்கள்

''ஆயுதந் தரித்த போலித் தமிழ் இயக்கங்கள் தாமே வாக்குப் பெட்டிகளை நிரப்பிக் கொண்டு வெற்றி பெற்றன. கிழக்குப் பிரதேசம், வவுனியா உள்ளூராட்சிகளுக்காக 1994 மார்ச் 01 ஆந் திகதி நடந்த தேர்தல் முழுமையான ஏமாற்றாகும். அரசாங்கத்தின் சக்திகளும், ஆயுதந் தரித்த போலித் தமிழ் இயக்கங்களும் வாக்குப் பெட்டிகளைத் தாங்களே நிரப்பிக் கொண்டு, தாம் வெற்றி பெற்றுவிட்டதாகத் தெரிவிக்கின்றனர். அநேகமான இடங்களில் அன்று உண்மையான வாக்காளர்கள் எவரும் வாக்களிக்க வரவில்லை.''

**புதிய சமத்துவ சமுதாயக் கட்சியின் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன -திவயினவில் -03.03.1994**

**சீ. சாத்தனார்**

சரிநிகர் மாதமிருமுறை இதழ். இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன். 29.03.1994